ஓவர் டோஸ்

சிவசங்கரி

ஓவர் டோஸ்

1

''நிர்மலா...''

''வந்துட்டேங்க...''

''ரெடியா?''

''இதோ ஒரு நிமிஷம்...''

சில நிமிஷங்களில் கதவைத் திறந்துகொண்டு எதிரில் வந்து நின்றவளை ஏறிட்ட மனோகர் முகம் சுளித்தான்.

''வாட்ஸ் திஸ் நிம்மி!''

''என்னங்க?''

''நாம பார்ட்டிக்குப் போறமா, இல்ல கிராமத்துல ஏதாவது கல்யாணத்துக்கா?ம்?''

எதுவும் புரியாமல் நிர்மலா விழிக்க, அவன் அவளைத் தலையிலிருந்து இன்னொருமுறை ஊன்றிப் பார்த்தான்.

பட்டுப்புடவை,

அழுத்தமாய் வாரி பின்னப்பட்ட பின்னல்.

செண்டாய் பூ,

புடவையின் நிறத்துக்கு மேட்சாய் சிகப்புக்கல் அட்டிகை, வளையல், தோடு.

பொசாய் பொட்டு.

கல் நிறைய மை.

''என்னங்க...? ஏன் இந்த ட்ரெஸ் உங்களுக்குப் பிடிக்கலையா? இதுல நா நல்லா இல்லியா?''

''பிடிச்சிருக்கு; நீ அழகாவும் இருக்கே. ஆனா நாமு போகப் போற எடத்துக்குத்தான் இது ஸூட் ஆகாது...''

''ஏன்? நல்லா மேட்சிங் பார்த்துதானே உடுத்தியிருக்கேன்.''

''அதெல்லாம் சரிதான்...பட், பார்ட்டிக்குப் போற ட்ரஸ்ஸா இது நிம்மி?''

''.....''

கிட்ட வந்து மனோகர் அவளை அணைத்தான்

''இந்தப் புடவை வேணாம் நிம்மா...போன வாரம் வாங்கிக் கொடுத்தேனே மைசூர் ஸிபான். போய் அத உடுத்திக்கிட்டு வா...ப்ளவுஸ் அயர்ன் பண்ணி இருக்கு இல்லே? இல்லாட்டி கொண்டுவா. ஒரு நிமிஷத்துல நா இஸ்திரி பண்ணித் தரேன்...அப்புறம், நேத்து ஷாம்பூ வாங்கிக் கொடுத்து, இன்னிக்கு அதபோட்டு குளினு சொன்னேனே... வழக்கம்போல எண்ணெய் தேய்ச்சு குளியல்தானா? மறந்திட்டியா?''

''இல்லிங்க...நீங்க காலைல ஆபீஸுக்குப் போனதும் ஷாம்பு போட்டுத்தான் குளிச்சேன். முகர்ந்து வேணா பாருங்க...''

மனோகர் குனிந்தவளை முகர்ந்தான்.

''முடி காஞ்சப்புறம் எண்ணெய் தடவிகிட்டியா?''

''ஆமா... ஏகத்துக்கு வைக்கலாட்டம் பறந்துச்சு சாயங்காலம் வெளிலே போகணுமேனு தடவிகிட்டேன்''

மனோகர் ஆயாசத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

''ஷைட்! பி.ஏ., டிகிரி படிச்ச பொண்ணா இருந்தும் நீ ஏன்தான் இத்தனை கட்டுப்பெட்டித் தனமாக இருக்குறயோ, நிம்மா! ஷாம்பு போடறது எதுக்கு? பிசுபிசுப்பு முடி ஒட்டிக்காம, ஜில்லுனு பறந்துகிட்டு இருக்கணும்னுதானே! கடலே எண்ணெய் தடவி ஷாம்பு போட்டுகிட்டதையே வீணாக்கிட்டியே...''

கணவரை ஏமாற்றத்துக்குள்ளாக்கிவிட்டது வருத்தத்தைத் தர, நிர்மலா கிட்டத்தில் வந்து, அவன் கையைப் பற்றி ''ஸாரிங்க...அடுத்த தடவை சரியா செஞ்சிடறேன்'' என்றாள்.

மறுப்பு எதுவும் பேசாமல் அவள் கடலே சரணாகதி அடைந்துவிட்டது போன்ற சந்தோஷத்தைத் தர மனோகர் அவள் தோளைத் தட்டிக்கொடுத்து புன்னகைத்தான்.

''போனாப் போவுது; டோண்ட் ஃபீல் பாட். நீ இப்ப என்ன பண்றே...உள்ளே ஓட்டமா ஓடி இந்தப் புடவையை அவிழ்த்திட்டு, அந்த ஸிபானை கட்டிக்குறே. சிகப்புக்கல் செட் வேணாம்...ஸிம்பிளா முத்து போட்டுக்கோ...அப்புறம், தலைப் பின்னலைத் தளர பின்னிகிட்டு, நிறைய சென்ட் தெளிச்சி, திட்டமா லிப்ஸ்டிக் பூசிக்கிட்டு வா...ஜல்தி...பதினஞ்சி நிமிஷம் டைம் தரேன் அதுக்குள்ளே தயாராயிடணும்...ஓ. கே...டார்லிங்?''

அவன் விருப்பப்படி அலங்கரித்து வந்தவளின் உதட்டுச்சாயம் அழிந்து விடாதபடி கவனத்துடன் முத்தமிட்டவன், தலையில் வைத்திருந்த பூவை எடுத்து எறிந்தான்.

''இந்தமாதிரி பட்டிக்காட்டுத்தனமா பூ வைக்காதே நிம்மா. தோட்டத்து ரோஜால ஒண்ணு பறிச்சி.

ஸ்டைலா ஒரு பக்கமா வைய்'' என்றவன், காரை தொட
டத்தில் இறங்கி ஒரு வெள்ளை ரோஜாவைப் பறித்து
அவள் கூந்தலில் வைத்து 'ம்ம் நௌ ரெடி டூ கோ' என்று
அவள் அழகை ரசித்தான்.

காரில் ஏறிக்கொண்டு பார்ட்டிக்குச் செல்லையில்
அன்று யார் வீட்டு விருந்துக்குச் செல்லுகிறோம் என்று
விவரங்களைக் கூறினான்.

''மிஸ்டர் பூபாலனை நீ பார்த்திருக்கே. நம்ம ஸ்டே
ஷனுக்கு வந்திருந்தார். உயரமா, திருதராஷ்டிரன் மீசை, வைத்
திட்டு கலீர்னு பேசுவார். ஹெராயின்லே ஒரு தொழிற்
சாலை வச்சிருக்கார். ரொம்ப மாடன்...தல்லவருக்கு
இன்னிக்கு நமக்காக இந்த விருந்துக்கு ஏற்பாடு செஞ்சி
ருக்கிறது. வெரிநைஸ் ஆஃப் ஹிம். இல்லேர் என்னோட
பத்து, பன்னிரண்டு க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் இன்னிக்கு
வருவாங்க...இவங்களில் சில பேரை போன வாரம்
ஆனந்த் கொடுத்த பார்ட்டிலே நீ சந்தித்திருக்கே.
அதனால தயக்கமோ, பயமோ இல்லாம எல்லார்கிட்ட
யும் பேசிப் பழகணும். நிம்மா இது ரொம்ப முக்கியம்.
போன பார்ட்டிலே நீ அத்தனை சகஜமா இல்லாத
னைக்கு எப்படியோ இருந்திச்சி... என்னைடா உன்
மனைவி ரெண்டு வார்த்தை பேசக்கூட லெட்கப்படறா
க்'னு என் நினைத்தங்க என்னை டீஸ் பண்ணப்போ
புதுசுதானேடா...போகப் போக சரியாவிடுவா'னு
சொல்லி இருக்கேன்...மிஸஸ் ராஜகுமார், மிஸஸ் பி
சன்னா மாதிரி நீயும் எல்லார்கிட்டயும் நல்லா பழகி ப
மாதம் பேர் வாங்கணும்...தென் சுல் வெரி இம்பார்ட்ண்ட்
டு மீ...அவங்க எல்லாரையும் விட நீ அழகானவ' பட்
கம் இருக்கே, அப்புறம் என்ன?''

பேசிக்கொண்டே பூபாலனின் வீட்டில் வண்டியை
நிறுத்திய மனோகர், இறங்குமுன் அவள் கையைப் பற்றி
தன் உதட்டில் வைத்து முத்தமிட்டான்.

''ஏன் கை சில்லுனு இருக்கு...மீ?''

''எ...எனக்கு பயமா இருக்குங்க...இத்த மாதிரி
பார்ட்டிகளில் எல்லாம் கலந்துகிட்டு பழக்கம் இல்லாத
தால, நெர்வஸா இருக்கு...''

மனோகர் உதட்டில் வைத்திருந்த விரலை மென்மை
யாய்க் கடித்தான்.

''ரிலாக்ஸ் பேபி...நா தான் உன் கூடவே இருக்கப்
போறேனே...''

''இருந்தாலும் வந்துங்க...''

''ப்ளீஸ் நிம்மா...முதல்ல இந்த வந்துங்க, போயிங்க
சமாசாரத்தை நீ விடணும். படிச்சவளா, லட்சணமா
கம்பீரமா என்னை மனோ, மனோகர்'னு கூப்பிடணும்...
எத்தனையோ முறை சொல்லிட்டேன்...நீ ஏனோ என்
விருப்பத்தைப் புரிஞ்சி கூப்பிடவே மாட்டேன்ற...''

''ஸாரிங்க...என்னமோ வாயில சட்டுனு பேர் வரவே
மாட்டேங்குது...''

''எல்லாம் வரும். எங்க, இப்ப ஒருதரம் கூப்பிடு.''

''வந்துங்க...''

''நோ...இப்ப, இந்த கணம் நீ என்னைப் பேர்
சொல்லி கூப்பிட்டே ஆகணும்...''

''.....''

''நாழி ஆச்சி...உள்ளே எல்லாரும் நமக்காக காத்
திட்டு இருக்காங்க டார்லிங். க்விக்...''

''ம...மனோ...''

''வெரி குட்...இன்னொரு தரம்...''

''மனோ...''

''ஐ லவ் யு மனோனு சொல்லு...''

''ஐ லவ் யூ மனோ!''

''எக்ஸலண்ட்! நீ கூப்பிடறப்ப...என் பேருக்கு தனியா கவர்ச்சி வந்திடற மாதிரி இருக்கு...கமான் லெட்ஸ் கோ...''

காரிலிருந்து இறங்கிய மனோகர் அந்தப் பக்கம் சென்று கதவைத் திறந்து அவளை இறங்கச் செய்து இடுப்பை அணைத்தபடி உள்ளே இட்டுச் சென்றான்.

''ஹாய் மனோகர்...''

''குட் ஈவினிங் மனோ...''

''வால், யு லுக் ப்யூடிஃபுல் நிம்மா...''

''யார் மனோ இந்த ரம்பை! உன் மனைவியா?''

''ரால்ஸ்கல். மெட்ராஸுக்கு அவசரமா ஓடி ஏ கல்யாணத்த முடிச்சிகிட்டேனு இப்பதானே தெரியுது!''

பாராட்டுக்கள், மனப்பூர்வமான வரவேற்புகள்.

மனோகர் இயல்பாக அத்தனை பேர்கள் நடுவிலும் புகுந்து புறப்பட்டான்.

நண்பர்களைத் தோளில் தட்டினான். அணைத்துக் கொண்டான். கல்யாணத்துக்கும், ரிஸப்ஷனுக்கும் வர இயலாமல் போன ஒவ்வொருத்தரிடமும் நிர்மலாவைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தினான்.

பூபாலனின் மனைவி நளினி அனைவருக்கும் ட்ரிங்க்ஸ் எடுத்துவர, பூபாலன் டம்ளர்களைக் கையில் கொடுத்தார்.

''மனோ உனக்கு ஆல்யூஷுவல் ஸ்காட்ச் தானே? உன் மனைவிக்கு? என்ன? நிர்மலா சின்னதா ஒரு பெக் தரட்டுமா?''

மனோகர் நிர்மலாவைப் பார்க்க அவள் அவசரமாய் தலை ஆட்டி மறுத்தாள்.

''சர். ஹவ் அபௌட் வொய்ன்? அருமையான ரெட் வொய்ன் இருக்கு. தொண்டையிலே வழுக்கிகிட்டு ஒடும்... அது ஒரு க்ளாஸ்ல ரணத்தித் தரேன்...''

''வேணாங்க ... ப்ளீஸ்''

''ஏன் வேணாம் என் வொய்ஃபுகூட அதான் சாப்பிடறாங்க. என்ன டார்லிங்?''

''எடுத்துக்க நிர்மலா. வொய்ன் ஒரு ட்ரிங்க்கோட சேர்த்தியே இல்ல. ஜஸ்ட் கோலா மாதிரிதான். விறுவிறுனு இருக்கும்...''

நளினி கணவரோடு சேர்ந்து வற்புறுத்தியதையும் ஏற்க இயலாமல் ''மன்னிச்சிடுங்க... எனக்கு வேணாம்'' என்றாள் கெஞ்சலாய் நிர்மலா...

மனோகர் அருகில் குனிந்தான்.

''கொஞ்சமா, ஒரு லிப் எடுத்துக்க நிர்மா... ஒரு மரியாதைக்குத் தானே?''

என்னை என் இஷ்டத்துக்கு விடமாட்டார்களா— என்று மேலும் பார்வையுடன் நிர்மலா அவனைத் தயக்கத்துடன் ஏறிட...

ஆனந்த் அவள் உதவிக்கு வந்தான்.

''பழக்கமில்லேன்னா விடுங்கப்பா... ஏன் கட்டாயப் படுத்தறீங்க? புதுசுதானே? கல்யாணமாகி மூணு வாரம் கூட ஆகலை... நாலு தரம் நம்பளை சந்திச்சாங்கன்னா அன்னைல இறுக்கும் குறைஞ்சு சகஜமாயிடறாங்க... அதுக்குள்ள ஏன் ஃபோர்ஸ் பண்ணறீங்க...? ஆல்ரைட் நிர்மலா டாமாடோ ஜூஸ் சாப்பிடறீங்களா? ஒரு க்ளாஸ் கொண்டுவரச் சொல்லவா?''

இப்போதைக்குத் தப்பினோம் என்ற சந்தோஷத்துடன் பலமாக தலை ஆட்டிய நிர்மலா, 'தேங்க்ஸ்' என்று கூறி ஆனந்தைப் பார்த்துச் சிரித்தாள்.

அன்று இரவு பார்ட்டி முடித்து அவர்கள் வீடு திரும்பினதும் இது விஷயமாக மனோகர் பேச்சு எடுக்கவே செய்தான்.

"ஆனாலும் நீ ரொம்ப ஃபாஸ் பண்ணிக்கறே டார்லிங். ஒரு பெக்கை கையிலே வைச்சிண்டு குட்டியா விட்டு எடுத்தா என்ன ஆயிடும், ம்?"

"ஸாரிங்க... எனக்கு இதெல்லாம் பழக்கமே இல்லிங்க. பயமாக இருக்கும்..."

"பிறக்கறப்பவே எல்லாரும் பழக்கிட்டேவா பிறக்கறோம். ஒரு சரம் ட்ரை பண்ணா பழகிடுது. நளினி, அத்தனை சொல்லியும் நீ கேட்கலைன்றதால எனக்கு ரொம்ப வருத்தம்தான் நிம்மி..."

நிர்மலா பதில் எதுவும் சொல்லாமல் புடவையை அவிழ்த்து மடித்து வைப்பதில் ஒருபோட்டாள்.

"மெட்ராஸில் பிறந்து வளர்ந்த பெண், டிகிரி படிச்சவ இத்தனை பயப்படறது எனக்கு ஆச்சர்யமா இருக்கு நிம்மி."

புடவையுடன் படுக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு கணவனின் இஷ்டப்படி நைட் ட்ரெஸ் அணியத் துவங்கி இருந்த நிர்மலா, பாத்ரூமுக்குள் சென்று உள் பாவாடை, பாடியைக் கழற்றி, அதை உடுத்தி, முகம் கழுவி வெளியில் வந்தாள்.

துளி கோல்ட் க்ரீமை எடுத்து முகத்தில் அழுந்தத் தேய்த்துக் கொண்டாள்.

நிர்மலாவின் தாய், ரொம்ப சின்ன வயசிலேயே கான்சராகி விட்டாள்.

அண்ணன், அப்பா தான் அவளுடைய உலகம்.

தாய் இல்லா பெண்ணை கண்டபடி வளர்த்துவிடக் கூடாது என்று சுவனமாய் இருந்த தந்தை, பொத்தி

பொத்தி வளர்த்து, டிகிரி படிப்பு, முடிக்க கையோடு நல்ல வரனாத் தேடிக்கொண்டிருந்த சமயத்தில், அவள் மேல் ஆசைப்பட்டு வலிய கேட்டு வந்தவன் இந்த மனோகர்.

மனோகர் அவளைப் பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளை. தந்தை எப்போதோ காலமாகிவிட மனைவியை விடமாட்டேன் என்று பிடிவாதமாய் தாய்க் கிழவி இராமத்திலேயே இருக்க, இவன் தனியாய் பெங்களூரில் வசிக்கிறான்.

இட்டத்தட்ட இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் அருமையான வீடு, கார், ஆள், சொந்தமாய் பிளாட்... அப்புறம் என்ன?

சென்னைக்கு அலுவலக வேலையாய் வந்தவன் பார்த்து வெகுநாட்களான நண்பர் ஒருவரை சந்திக்க வென வர, வந்த இடத்தில் கிழ் வீட்டில் குடியிருந்த நிர்மலாவைக் காண —

கண்டதும் காதல் பிறந்து விட்டது.

நிர்மலா நல்ல அழகு.

தங்கமும் இல்லாமல், மஞ்சளும் இல்லாமல் ஒருநிறம். நடுத்தர உயரம். வளமான மார்பகங்கள். கருப்பாக இடுப்பையும் காண்டிக் கொண்டு தொங்கிய முடி.

விசாரித்ததில் பி. ஏ., படித்திருக்கிறாள். சமர்த்து. தாய் அற்றவள் என்ற இதர விவரங்கள் தெரிய வந்து அந்த நண்பர் மூலமே சம்பந்தத்தைப் பேசச் செய்ததில், நிர்மலா இப்போது இவனுக்கு மனைவியாகி, இதோ நாட்கள் இருபத்தி இரண்டு ஓடி விட்டன.

திருமணமான மறுநாள் ஒரு வாரத்துக்கு சேன்றிலவுக்கென ஸ்ரீநகர் சென்று வந்தவர்கள், நேரே பெங்களூர் வந்து குடித்தனம் ஆரம்பித்து விட்டார்கள்.

தன் அழகில் மனோகருக்கு அசாத்திய பெருமை என்பதோடு, நாகரிகத்தில் விருப்பமும் அதிகம் என்பது முதல் சில நாட்களிலேயே நிர்மலாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

தடி தடியாய் பட்டுப் புடைவைகள் வேண்டாம். ஷிபான் நைலான் உடுத்து— என்றான்.

நகைகளை ஏகத்துக்கு அணியாதே. லிப்ஸ்டிக் இரு —என்றான்.

ஹை ஹீல்ஸ் போட்டுக் கொள். உயரத்தைக் கூட்டிக் காட்டுவதோடு, நடையையும் கவர்ச்சியாக்கும்— என்றான்.

ஆண் நண்பர்கள் வீட்டுக்கு வரும்போது நாணி கோண்டு உள்ளே இராதே, அவர்களுடன் கலகலப்பாய் பழகு-என்றான்.

பார்ட்டிகளில் சகஜமாய் அனைவருடனும் பே வளைய வர வேண்டும். கட்டுப்பெட்டித்தனத்துடன் ஒ பக்கமாய் உட்கார்ந்துவிடக் கூடாது— என்றான்.

இன்னும் விடாமல் எதை எதையோ சொல்லி கொண்டே இருந்தான்.

தாலி கட்டினவர் சொல்லும்போது தயக்கம் என் என்று நிர்மலா நினைத்தாலும், வளர்ந்துவிட்ட சூ நிலை காரணமாய், சட்டென்று தன்னை மாற்றிக் கொ வது கஷ்டமாக இருக்க, நாலு பேர் நடுவில் கொஞ்ச திண்டாடித்தான் போவாள். இன்றைய தினதை போல...

படுக்கையில் அமர்ந்த நிர்மலா புருஷன், பக்க திரும்பி, அவன் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை தழைத்தாள்.

"கோவமாங்க?"

"என்னது?"

"கோவமாங்க-ன்னு கேட்டேன்."

"இத்தங்கனை விடுன்னு சொன்னேன், இல்லை?"

"ஸாரிங்க... அய்யோ, திருப்பி அதான் வாயிலே வருது! ஸாரி மனோ!"

வெறுமையாய் அவள் பேச, மனோகரின் உதடுகளில் ஒரு புன்னகை மலர்ந்தது.

"இந்த மாதிரி கண்ணை விரிச்சி, உதட்டை முயிச்சி நீ பேசறப்போ உன்னை அப்படியே கடிச்சி தின்னிடணும் போல தோணுது."

"அவ்வளவுதானே... தின்னுடுங்க... அப்புறமாவது கோவம் குறையுமில்லே?"

அவளை இழுத்து மனோகர் அணைத்துக் கொண்டான்.

"நீ அழகு, சமர்த்து, கெட்டிக்காரின்னதெல்லாம் எனக்கு மட்டும் தெரிஞ்சா போறுமா? என் ப்ரெண்ட்ஸ் களுக்கும் தெரிஞ்சாதானே, எனக்குப் பெருமை? ம்?"

"உங்களுக்குத் தெரிஞ்சா, எனக்கு அது போதும் மனோ..."

"எனக்குப் பத்தாதே... 'பாருங்கடா என் மனை வியை... அவ அழகு மட்டுமில்ல, கெட்டிக்காரி கூட'—ன்னு பீத்திக்கத் தோணுதே..."

"....."

"இன்னிக்கு நீ அந்த அளவுக்கு ஃபேஸ் பண்ணி இருக்க வேணாம் நிம்மா... வொய்ன் குடிக்கிறதை என்னமோ விஷம் குடிக்கச் சொன்ன மாதிரி பயந்திட்டியே..."

''ஸாரி மனோ... எனக்கு உண்மையிலேயே பயமா தான் இருந்துச்சு''.

''நா இருக்கறப்ப கூடவா? தப்புக்காரியத்த உன்னை செய்யச் சொல்லுவேன்னு நீ நம்பறியா?''

''இல்லே... ஆனாலும் இது வரைக்கும் பழக்கம் இல்லாததால எப்படியோ இருக்கு''

''சரி, இன்னிய விட்டிடு, இனிமே இந்த மாதிரி அசட்டுத் தனமா நடந்துக்காதே... சோஷலா நடந்துக்கறதுல தப்பு என்ன? எனக்கு நீ அப்படி இருக்கிறதுதான் பிடிக்குதுன்னு சொல்லியும் தயங்கினா... இட் வில் ஹர்ட் மீ... புரியுதா?''

சின்னக் குரலில் கணவன் நிதானமாகப் பேச, பதில் கூறாமல் 'சரி' என்று தலை அசைத்ததோடு நிற்காமல் அடுத்து வந்த நாட்களில் பிரயத்தனப்பட்டு தன்னை சிறுகச் சிறுக மாற்றிக் கொள்ள நிர்மலா முனைந்தாலும், நினைத்ததை உடனே செயலாற்ற முடியாதபடி, திருமணமாகி மூன்றாம் மாதமே அவள் கர்ப்பமுற்றாள்.

2

''என்ன சொல்றே நிம்மா, நீ?''

''லேடி டாக்டர்கிட்டே போனா தேவலைன்னு சொன்னேன். மனோ...''

''எதுக்கு?''

''லேடி டாக்டர் கிட்ட எதுக்கு போவாங்க? அதுக்குத் தான்''

கிட்ட வந்து தோளைப் பற்றி ''விளையாடாதே டார்லிங்'' என்று மனோகர் கெஞ்ச, நிர்மலா அவனை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்.

''இதுல விளையாட்டு என்ன மனோ?''

''எத்தனை நாள் ஆயிருக்கு?''

''ம்ம்... நாற்பத்தியிரண்டு...''

''ஏன் என்கிட்ட முதல்லியே சொல்லலை?''

''சொல்லணும்னு தோணலை— இது ப்ரக்னென்சியா, இல்லையான்னு சந்தேகமா இருந்திச்சு...''

''இப்ப?''

''எனக்கு உறுதியா புரிஞ்சி போச்சி, எதுக்கும் டாக்டர் கிட்ட காட்டி கன்பார்ம் பண்ணிக்கலாமேன்னுதான்.''

மனோகர் அவசரமாய் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து புகையை இழுத்து தெஞ்சில் நிரப்பிக் கொண்டான்.

நிர்மலா அவன் பின்னால் சாய்ந்து கைகளால் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''சேதி கேட்டு சந்தோஷப்படுவீங்கன்னு நினைச்சேன் மனோ.''

''.....''

''என்ன மனோ...''

''இல்லே இது எப்படி உண்டாச்சு? நாமதான் கேர்ஃபுல்லா இருக்கமே...''

''ப்ராபபலி அன் ஆக்ஸிடெண்ட்...''

சிகரெட்டை தேய்த்து அணைத்த மனோகர், டைரக்டரியைப் புரட்டி லேடி டாக்டரோடு போனில் தொடர்பு

கொண்டு, அன்று மாலைக்கே அபாய்ன்ட்மெண்ட் வாங்கிக் கொண்டான்.

போனார்கள். டாக்டர் செக்கப் செய்தார். டெஸ்ட் டியூப் எடுத்தார்.

மேலும் சில நாட்கள் தாமதித்துப் பார்த்துவிட்டு கர்ப்பம்தான் என்பதை உறுதி செய்தார்.

அன்றிரவு மனோகர் அவளை மடியில் கிடத்திக் கொண்டு தாஜா செய்யும் விதமாய்ப் பேசினான்.

''இது நமக்கு இப்ப வேணுமா, டார்லிங்?''

''எது?''

''இந்தக் குழந்தைதான்.''

படக்கென்று நிர்மலா எழுந்து உட்கார்ந்தாள்.

''வாட் டு யு மீன்?''

''இவ்வளவு அவசரமா நமக்குக் குழந்தை வேணுமானு யோசிக்கிறேன் நிம்மா.''

''.....''

''எனக்கு வேணும்னு தோணலை... நாம ரெண்டு பேரும் சின்ன வயசுக்காரங்க. எனக்கு முப்பது; உனக்கு இருபத்தி ஒண்ணு... வாட்ஸ் த ஹர்ரி? இரண்டு மூணு வருஷம் ஜாலியா இருந்திட்டு அப்புறமா குழந்தை பொத்துக்கலாமேனு எனக்குத் தோணுது...''

''ஸோ''

''ஸோ இதை இப்பவே, ரொம்ப நாளாவறதுக்கு முன்னாலியே, அபார்ட் பண்ணிட்டா என்ன?''

உடம்பும் மனசும் ஒரு முறை தூக்கிவாரிப் போட ''என்ன?'' என்று அதட்டலாய்க் கேட்டான் நிர்மலா.

''நா இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இத்த பதட்டம் பதர்றே.ம்? வைஃப்பை அனுபவிக்காம அதுக்குள்ள குழந்தை தொந்தரவெல்லாம் எதுக்குனு தானே சொல்றேன்.''

''குழந்தைன்னா தொந்தரவா, மனோ?''

''இல்லியா பின்னே? ஹாய்யா இங்க, அங்க போக முடியாது... நை நைனு சதா அழுதுட்டு... ஓ ஹெல்... இதுக்கு இப்ப நிஜமாகவே என்ன அவசரம் டார்லிங்?''

''அதுக்காக உண்டாயிட்டதை அழிக்கச் சொல்றது நியாயமா, மனோ?''

''முழுக் குழந்தையா உண்டாயிடுச்சி? உள்ளே இன்னும் உருத்தெரியாத பிண்டமாதானே அது இருக்கும்... அதுக்குத்தான் சொல்றேன், தானைக் கடத்தாம காரியத்தை செஞ்சிடறது நல்லது நிம்மா...''

நிர்மலா கண்களை விரித்து அவனை வெறித்தபடி மாட்டேன் என்று தலை ஆட்டினாள்.

''நா இதுக்கு உடன்பட மாட்டேன் மனோ, நிச்சயம் மாட்டேன்...''

''லொய் டார்லிங்?... நம்ம நல்லதுக்கும், சந்தோஷமான வாழ்க்கைக்கும் தானே சொல்றேன்?''

''ஐம் ஸாரி... என்னாலே சம்மதிக்க முடியாது மனோ...''

''சும்மா முடியாது முடியாதுன்னா? காரணம் என்ன?''

எரிச்சலுடன் மனோகர் பேச, நிர்மலாவின் கண்களில் ஈரம் பளபளத்தது.

''இ... இதுக்கெல்லாம் காரணம் சொல்லிட்டிருக்க முடியுமா? முத முதலா உண்டானதை அழிக்க, நா சம்மதிக்க மாட்டேன். ப்ளீஸ் மனோ... புரிஞ்சிக்குங்க...''

"நீதான் என் நிலைய புரிஞ்சிக்க மாட்டேன்ற. நிம்மி... இது ஒண்ணும் பெரிய காரியம் இல்லே... நாம இந்த குழந்தைக்கு இப்போதைக்கு இது வேணாம்னு நினைச்சுப் பண்ணோம். அவ்வளவுதானே! இதுல ஷேம் ஃபீல் என்ன இருக்கு? மறுபடியும் அப்போ, திரும்ப கன்சீவ் ஆயிட்டா போவுது."

வழக்கமாக புருஷன் எது சொன்னாலும் சரி என்று சம்மதிக்கும் நிர்மலா இந்த முறை மட்டும் பிடிவாதமாய் மறுக்க, மனோகர் அவளிடம் என்னென்னவோ சொல்லிப் பார்த்தான். கெஞ்சி கொஞ்சிப் பார்த்தான். 'நீ இதை கலைக்க சம்மதிச்சிட்டா அடுத்த மாசமே உன்னை நியூஸிலாந்துக்கு கூட்டிக்கிட்டு போறேன்'— என்று ஆசை காட்டிப் பார்த்தான்.

எதற்கும் நிர்மலா இணங்காததோடு, நாட்களும் மெல்ல மெல்ல நகர்ந்து போய் நான்காம் மாசம் பிறந்து விட, சற்று இனியும் இந்தப் பேச்சை பேசுவது அனாவசியம். சந்தோஷத்தோடு குழந்தையை ஏற்கலாவது முன்வரலாம் என்ற நிர்மானத்துக்கு ஒரு வழியாய் மனோகர் வந்தான்.

இதன் நடுவில், தனக்காக குழந்தைக்கு சரி என்று... சொல்லிவிட்ட கணவனை இதர விதங்களில் திருப்தி செய்வது தன் கடமை என்பது போல, அவனுக்குப் பிடித்த மான பலவற்றையும் செய்ய நிர்மலா முனைந்தாள்.

"ஐயே- இதெல்லாம் எதுக்கு மனோ? எனக்குப் பழக்க மில்லை" என்று அவன் வாங்கித்தர முன் வந்து வேண்டாம் என்று தடுத்த, சல்வார் கமீசை வலிய வாங்கித் தரச் சொல்லி கட்டிக் கொண்டாள்.

ப்யூட்டி பார்லருக்குச் சென்று, மனோகர் ஆசைப் பட்டதைத்தில் சாட்டையாய்த் தொங்கிய முடியைத் தோளோடு வெட்டிக் கொண்டு வந்தாள்.

பார்ட்டிகளில் கையில் ஒரு கிண்ணம் மதுவை வைத்துக் கொண்டு சிரிக்கச் சிரிக்கப் பேசப் பழகினாள்.

பிற ஆடவர்கள் தொட்டுப் பேசுவதை அருவருத்து வெறுத்தவள், அந்த ஸ்பரிசங்களை பொறுக்கத் துவங்கினாள்.

முக்கியமாய், மனோகருக்குப் பிடிக்குமென மேல் நாட்டு நாகரிகத்தின்படி, லெஸ்டர்ன் டாப்ஸ் ஆடைகளை வாங்கிக் கொண்டாள்.

மொத்தத்தில், மேற்கொண்டு ஏழு மாதங்கள் முழுசாய்ப் போய், பெண் குழந்தையை பிரசவிப்பதற்குள் அவளைப் பார்த்தவர்கள், அந்த நிர்மலாவா இது என்று அதிசயிக்கும் விதத்தில் அடியோடு மாறித்தான் போனாள்.

3

"நிக்மா?"

"எஸ்..."

"நாதான் மனோ பேசறேன். போர்ட் மீட்டிங் முடிய நாழியாகும் போல இருக்கு... நீ வேணா முதல்ல சுந்தர்லால் வீட்டுக்குப் போயிடறியா?"

"நீங்க வந்ததும் சேர்ந்தே போலாமே, ப்ளீஸ்."

"இல்லே நிம்மா. நா புறப்படவே ஏழரை, எட்டு ஆயிடும் போல இருக்கு... அதுக்கு மேல நாம போனா நல்லா இருக்காது, ஹி வில் மிஸ்டேக் அஸ்."

"தனியா எப்படிப் போறது மனோ?"

"தனியாவா போகச் சொல்றேன்! ஆனந்த் உன்னை பிக்கப் செஞ்சி அழைச்சிட்டுப் போவான். அவனுக்கு நா போன் பண்ணிடறேன்."

"இது என்ன புதுப் பழக்கம்? எனக்குப் பிடிக்கலை..."

"யாரோ முன்பின் தெரியாத ஆளோட போகணும்ன்ற மாதிரி நீ தயங்கினா ஐம் சர்ப்ரைஸ்ட்!"

"அதுக்காக சொல்லலை மனோ... நீங்க இல்லாம, நா மட்டும்..."

"ஆர்க்யூ பண்ணாத. இப்ப நேரமில்ல... வெட்டிங் ஆனிவர்ஸரி பார்ட்டி... கேக் வெட்டறப்ப நாம ரெண்டு பேரும் இல்லாட்டி நல்லா இருக்காது..."

"ஓகே தென்..."

"குட்கேர்ல்... நா ஆனந்துக்கு போன் பண்ணிடறேன்... என்ன உடுத்திக்கப் போறே?"

"ஆரஞ்ச் மில்க் சாரி."

"நல்லா இருக்கும். அதோட தங்க நகை போட்டுக்க... டைமில் லுக் வெரி நைஸ்... எவ்வளவு சுருக்க வர முடியுமோ நா வந்திடறேன். பை."

"தூங்கிட்டியா நிம்மி டார்லிங்."

"இல்லே... என்ன சொல்லுங்க..."

"சாயங்காலமே சொல்லணும்னு நினைச்சேன்; கெஸ்ட் வந்தாங்களா, மறந்திடிச்சி... வர்ற ஞாயிறு எங்க ஆபீஸர்ஸ் ஸைப்லேந்து எல்லாருமா மைசூர், சாமுண்டி மலில்ல எல்லாம் போக திட்டம் போட்டிருக்காங்களாம்... 'நீங்களும் உங்க மிஸ்ஸஸும் அவசியம் வரணும். நீங்க வந்தா தான் கலகலன்னு இருக்கும்'னு செக்ரட்டரி ராம் கௌடா

சொன்னான். சரின்னு சொல்லிட்டேன். அன்னிக்கு நமக்கு வேற ப்ரோக்ராம் ஒண்ணும் இல்லியே!"

"முழு நாளுமா மனோ!"

"ம்ம்... காலைல ஆறு மணிக்கு கிளம்பினா ராத்திரி ஒன்பதாயிடுமாம்... திரும்ப."

"சுதாவ அப்படி முழுநாளும் எடுத்துகிட்டு போக முடியுமா? ஹார்ட்லி மூணு மாச குழந்தையாச்சே!"

"அவளை எதுக்கு வெயில்ல இழுத்தடிக்கணும்; ஆயா பாத்துக்க மாட்டாளா? ஒரு நாள்தானே!"

"நாள் முழுக்க இதுவரைக்கும் நா விட்டுப் போனதில்லையே மனோ..."

"ஸோ வாட்! நீ பால் கொடுத்தாலும் யோசிக்கணும் அதான் கப்பீட்டா இல்லியே. அப்புறம் என்ன? கௌடா நீ வரலைன்னா ரொம்ப ஃபீல் பண்ணுவான்... போயிட்டு வந்திடலாம்; என்ன?"

"உங்க இஷ்டம்... எனக்குத் தூக்கம் வருது... குட் நைட்."

ஃ ஃ ஃ

"என்ன மனோ... இன்னிக்கு இத்தனை கூத்தக வந்திட்டீங்க... மழை காலைலேந்து விடாம இருக்குறதுக்கு இதான காரணம்?"

"ஆனந்த் போன் பண்ணான். யாமினி கிருஷ்ணமூர்த்தியோட டான்ஸுக்கு டிக்கெட் வாங்கியிருக்கானாம் நிம்மியையும் அழைச்சிட்டு வாப்பா. நல்லா ஆடுவாங்க... மிஸ் பண்ணாதன்னு சொன்னான். முன்னே ஒரு சமயம் இவங்க டான்ஸைப் பார்க்கணும்னு நீ சொன்னது ஞாபகம் வந்திச்சு. கிளம்பி வந்திட்டேன். கமான்... பத்து நிமிஷத்துல ரெடியாகணும்..."

''மனோ?''

''ம்?''

''இல்லே... வந்து...''

''என்ன தயக்கம்?''

''நாலு நாளா தினம் வீட்டுலே தங்காம நாம பார்ட்டி, ஸினிமா அது, இதுனு போய்க்கிட்டே இருக்கோம். இன்னிக்கு வேணா சுதாவோட இருக்கலாமேனு நினைச்சேன்.''

''அஞ்சு மாசக் குழந்தையோட எத்தனை நாழி உட்கார்ந்துகிட்டு இருக்குறது! ஆயா உன்னைவிட நல்லா பாத்துக்கறா. கவலைப்படாம இன்பு டார்லிங் நாழி ஆச்சு.''

ஃ ஃ ஃ

''ஹலோ ஆனந்த்.''

''ஹேய்... நிம்மா... நீங்க எங்க இந்தப் பக்கம்!''

''இந்தக் கேள்வி நா இல்லே கேட்கணும். ரஸ்ஸல் மார்க்கெட்டுல உங்களுக்கு என்ன வேலை? நா காய்கறி பழம் வாங்க வந்தேன்...''

''பூபாலன் வீட்டுக்குப் போயிருந்தேன். நளினி பூக்கள் வாங்கணும்னு சொல்லிட்டு இருந்தாங்க. இந்த வழியா வர்றமே வாங்கிக் கொடுக்கலாமேனு நுழைஞ்சேன். நீங்க காய் வாங்கிட்டீங்களா? என்கூட வந்து பூக்களை செலக்ட் பண்ண முடியுமா நிம்மா? லேடீஸ் டேஸ்ட் அலாதிதானே...''

''ஓகே. இந்தக் கடைல பார்க்கலாமா? அந்த ரோஸ் கொத்து நல்லா இருக்கு. ஆனா, விலை கொஞ்சம் அதிகம்...''

''விலைய பாக்கா தீங்க. நாலு கொத்தா வாங்குங்க.''

''தாலா?''

''ஆமா, உங்களுக்கு ரெண்டு தளினிக்கு ரெண்டு.''

''எனக்கெதுக்கு ஆனந்த் கூட வந்து வாங்கினதுக்கு கூலியா?''

''எப்படி வேணா வச்சிக்குங்க. ஆமா, இப்ப வீட்டுக்குப் போக அவசரமா? ரூல்ஸ்லீ சாப்பிட்டுப் போலாமா?''

''அதை மனசிலே வச்சுக்கிங்கன்னா, பரவா.''

''ஸ்யூர் வாங்க... லெட்ஸ்கோ.''

ஃ ஃ ஃ

''ஸினிமா எப்படி இருந்தது நிம்மா?''

''நாட் பேட்... நீங்ககூட வர்லலன்றதுதான் குறை.''

''என்ன பண்றது கடைசி நிமிஷத்துல ஒரு க்ளையண்ட் வந்திட்டார். நளினிக்குப் படம் பிடிச்சிதா? வொர்த்தி படம்னா அவங்களுக்கு உயிராச்சே.''

''சீனுக்கு சீன் கர்ச்சீபை கையிலே வச்சிகிட்டு அழுதுகிட்டே இருந்தாங்க. பிக்சர்லேந்து எல்லாரும் க்ளம்புக்கு போனாங்க. நா வரலை என்னை வீட்டுல இறக்கி விட்டுடுங்கனு சொல்லிட்டேன்.''

''நீயும் போயிட்டு கொஞ்ச நாழி கார்ட்ஸ் ஆடிட்டு வரதுதானே!''

''நீங்க வீட்டுல காத்திட்டு இருக்கிறப்ப நா அங்க சீட்டு விளையாட இப்ப என்ன நிர்ப்பந்தம்? குழந்தை எங்க?''

''ஆயா ப்ராம்ல வச்சி தள்ளிகிட்டுப் போயிருக்கா— ஆமா, நீ வரவர ப்ரிட்ஜ் ரொம்ப நல்லா விளையாடறே யாமே நிம்மா?''

''யார் சொன்னாங்க?''

''எல்லோரும்தான்! அடேயப்பா— நிம்மா புத்தி யாருக்கும் வராது... எங்களை எல்லாம் ஆட்டத்துல அடிச்சிடுவா போலயிருக்கு. நேத்துகூட பால்கர் சொன்னான். நாது நான் முன்னால கிளட்லே அவன்கூட விளையாடினியாமே?''

''ம்ம்... நீங்க பாம்பே போயிருந்தீங்களே. அப்பந்தான் பொம்பளைங்களாவது பிரிட்ஜ் விளையாடறதாவது. அதுக்குத் தனி மூளை வேணும் ரம்மி விளையாடதான் இவங்கள்ளாம் லாயக்குனு சுந்தர்லால் கேலி பண்ணான். எனக்கு கோபம் வந்திடுச்சி, ரைட். யாருக்கு மூளை இருக்கு. யாருக்கு இல்லைன்னு பார்த்திடலாம் வாங்கனு கூப்பிட்டேன். பால்கரும் நானும் பார்ட்னர்ஸ். சுந்தர்லாலும் ஆனந்தும் ஒரு ஸைட். இரண்டு தரம் க்ராண்ட் ஸ்லாம் அடிச்சேன். அத்தனை பேரும் அசந்திட்டாங்க.''

''நிம்மு கண்ணா, உனக்கு அழகு மட்டுமில்லே புத்தி சாலித்தனமும் எக்கச் சக்கத்துக்கு இருக்கு. இதை எல்லாம் கட்டுப் பெட்டிதனமாக நடந்துகிட்டு வேஸ்ட் பண்ணாதது தப்பு. நா முன்னே சொன்னது ஏன்னு இப்பப் புரியுதா? உன் திறமை இப்படியாவது உலகுக்கு விளங்குதா? பத்து பேர் இருந்தாலும் தனியா பளிச்சிடக் கூடிய அழகு, கெட்டிக்காரத்தனம் உன்னுது... ஐம் ஸோ ப்ரவுட் ஆஃப் யூ...''

''நிஜமாவா மனோ?''

''சத்தியமா...''

4

மனோகர் எக்கச்சக்க கோபத்தில் இருந்தான்.

பாதி பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டைத் தேய்த்து அணைத்தான்.

அறையில் நீளத்தை அளக்கிற தினுசில் இப்படியும் அப்படியும் நடந்தான்.

மீண்டும் சிகரெட்டைப் பற்ற வைத்து, வேகமாய்ப் புகையை இழுத்தான்.

மணிக்கட்டைத் திருப்பி கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

உட்கார்ந்தான், எழுந்தான், நடந்தான்.

மணி எட்டரை.

இன்னும் நிர்மலா வீட்டுக்கு வரவில்லை.

'இத்தனை நாழி ஆகாதே; தினமும் ஒன்பது அங்கே, இங்கே என்று சுற்றாதே'— என்று சமீப நாட்களில் பலதரம் சொல்லி விட்டான். காதல் போட்டுக் கொள்ளாமல் தன் இஷ்டப்படியே நடக்கிறாள்.

வாட்ஸ் ஆல் திஸ்?

உள்ளே எதற்காகவோ சுதா கணுங்குவதும் ஆடர், 'என் கண்ணில்லை... தங்கமில்லை, சொல்றதைக் கேளும்மா ராஜாத்தி' என்று சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்.

சில நிமிஷங்களில் சுதாவின் அழுகை பெரிசாக, எரிச்சலுடன் உள் அறைக்குள் மனோகர் எட்டிப் பார்த்தான்.

''இப்ப எதுக்காக இந்த கத்தல்? ப்?''

அப்பாவைக் கண்டதும் நீர் நிறைந்த கண்களுடன் சுதா ஆயாவின் பின்னால் ஒண்டிக் கொண்டாள்.

அடக்கமாட்டாமல் எழுந்த விசும்பல்கள் மட்டும் நிசப்தமான அறையில் உரத்துக் கேட்டன.

''என்ன ஆச்சு? கேக்குறது காதுல விழல?''

"ஒண்ணும் இல்லிங்க..."

"ஒண்ணும் இல்லாமலா இத்த அழுகை அழுறா? ஆயா, ஆனாலும் நீ ரொம்பத்தான் இவளுக்கு எடம் கொடுக்கற; மணி எட்டரை. தூங்கப் போகாம எதுக்காக இன்னும் சுத்தி முளிச்சிட்டு இருக்கா? காலைல எழுந்து பள்ளிக்கூடம் போகவேணாமா? சாப்பிட்டாச்சு இல்லே? தூங்க வேண்டியது தானே?"

"தூங்குத்தான் அழைச்சிட்டு வந்தேங்க. வந்து..."

"என்ன வந்து, போவி..."

"கதாலேயாட சினேதிதங்க எல்லார் வீட்டுலேயும் தூங்குறத்துக்கு முன்னாலே கதை சொல்றாங்களாரி, என்னையும் சொல்லச் சொல்லி தொந்தரவு செய்யுது."

"சொல்லிடறதானே! இது என்ன பெரிய விஷயமா?"

"அது இல்லிங்க... எல்லா பசங்களுக்கும் அப்பாலோ, அம்மாலோ கதை சொல்றாங்களாம. ங்கிலிஷ்ல. என்னையும் அந்த மாதிரி சொல்லுனு..."

தயக்கத்துடன் ஆயா நிறுத்த, கன்னத்தில் அவள் அறைந்துவிட்ட வலியுடன் மனோகர் திடுக்கிட்டு விழித்தான்.

ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு, என்ன பேசுவது என்று புரியாமல், கைகளை உயர்த்தி, தோளைக் குலுக்கி "சரி... சரி, பேசிட்டு நிக்காம படுக்க லல. சத்தம் வந்திச்சின்னா எனகுக் கோவம் வரும்" என்று பொதுவாகச் சொல்லி, கூடத்துக்கு வந்தான்.

மணி ஒன்பது

நிர்மலா இன்னும் வரவில்லை.

சோஃபாவை எடுத்து நிஜட் நம்பரை சுழட்டி, கார்டு குமுக்கு தொடர்பு வாங்கிக் கொண்டான்.

"ஹலோ நா மனோகர் பேசறேன். அங்க மிஸஸ் மனோகர் இருக்காங்களா?"

"குட் ஈவ்னிங் சார். திஸ் ஈஸ் ஹெட் ஸ்டூவர்ட் பீபியர்பா. அம்மா பத்து நிமிஷம் முன்னாலதான் ஆனந்த் சாரோட புறப்பட்டுப் போனாங்க. மிஸ்டர் பிரசன்னா இருக்கார் கூப்பிடவா?"

"வேணாம் தாங்க்ஸ்."

தொடர்பைத் துண்டித்த மனோகர், சோபாவில் சாய்ந்து சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

உள்ளுக்குள் தோன்றிவிட்ட தெருடல் இன்று அதிகமாகி விட்டதைப் போலத் தோன்ற, கண்களை மூடிக் கொண்டான்.

சில மாசங்களாக நிர்மலாவின் போக்கில் ஏதோ மாற்றம் இருப்பது போன்ற உணர்வு.

தன்னை அதிகம் மதிக்காத மாதிரி, குழந்தை, வீட்டைப் பற்றி லவலேசமும் கவலைப்படாத மாதிரி, நான், என் விருப்பு வெறுப்புகள் முக்கியம் என்று வெளிப்படையாகவே தெரிவிக்கிற மாதிரி...

முதலில் இந்த உறுத்தலை அசட்டை செய்ய முன்று அது முடியாமல் போனதும் மெதுவாக நிர்மலாவிடம் மனோகர் பேச்செடுத்தான்.

"வரவர நீ அதிகமா வீட்டுலே இருக்கறதே இல்லை டார்லிங். வெளிலே போறதைக் கொஞ்சம் குறைச்சிக்க நிம்மா."

"மத்தியானம் பூரா வீட்டுலேதான் சும்மா உட்கார்ந்திட்டு இருக்கேன் மனோ. நாலு மணிக்கு மேலே வெளியிலே போயிட்டு, கார்ட்ஸ் ஆடிட்டு வரேன். இதுதப்பா?"

"தப்புனு நா சொல்ல வரலை நிம்மா... இப்படி அலைஞ்சா உன் உடம்பு கெட்டுப் போயிடுமேன்ற அக்கறைலதான் சொல்றேன்."

"தாங்க்ஸ் மனோ. ஆனா நீங்க அனாவசியமா கவலைப்படறீங்க. ஐம் பர்பெக்ட்லி ஆல்ரைட்."

முதலில் மெதுவாகச் சொன்னவன் எதையும் லட்சியப் பண்ணாமல் தொடர்ந்து, தான் இருக்கிற விதத்திலேயே அவள் இருக்க முற்பட, குரலை லேசாக எழுப்பி கண்டிக்க, அந்த வீட்டில் குட்டி குட்டியாய்ச் சண்டைகள் ஜனிக்கத் துவங்கின.

"ஒரு நாள் விடாம நீ இப்படி நிஜப், பார்ட்டி அலையறது எனக்குப் பிடிக்கலை நிம்மா."

"எனக்குப் பிடிக்குதே!"

"ஆப்பப்ப வீட்டுலே நீயும் தானும் குழந்தையோட நிம்மதியா இருக்கணும்னு நா நினைக்கிறேன்."

"நீங்க வேணா இருங்க... நான் பூரா வீட்டுலே இருந்தா எனக்கு போர் அடிக்குது."

"நாள் தவறாம ஆப்பிளை தாடியன்களோட நிஜப் சீட்டு ஆடறது மட்டும் போர் அடிக்கலையோ?"

நிர்மலா கண்களை இடுக்கிக்கொண்டு கணவனைப் பார்த்தாள். "யு ஆர் ஜெலஸ்" என்றாள். தொடர்ந்து அவனோடு பேச விருப்பம் இல்லாத மாதிரி திரும்பி நடந்துவிட்டாள்.

இன்னும் ஒருநாள் இந்த சண்டை கொஞ்சம் தீவிரப் பட்டுப் போனதில் முதல் முறையாக மனோகர் கை நீட்டி அவளை அடித்து விட்டான்.

நாலு நாட்கள் போல வீட்டில் இல்லாமல் இருந்து விட்டு வீடு திரும்பியவனுக்கு மனைவி, தான் வருவதை யும் பொருட்படுத்தாமல் வழக்கம் போலக் கிளப்புக்குப் போய்விட்டது கோபத்தை உண்டாக்க, போன் பண்ணி அவளோடு பேசினான்.

"ஹலோ டார்லிங், எப்ப வந்திங்க? வீட்டுலே என்னை பண்ணறீங்க? கிளப்புக்கு வாங்களேன்."

"நா வரதா இல்லே நிம்மா; தலை வலிக்குது. வந்திடு."

"இப்படியா? கஷ்டம் மனோ. ரொம்ப ஸீரியஸா ஆடிக்கிட்டு இருக்கோம். நாங்க ஒருநாம் ரப்பர் 'விஸ்' பண்ணியாச்சி. நீங்க வாங்களேன். இங்க ஆனந்த், மான்கர், பிரசன்னா எல்லாரும் இருக்காங்க."

"நா வரலேன்னு வந்திட்டானுன் சொல்லிட்டு, நீ புறப்பட்டு வந்திடு நிம்மா."

"திரும்பத் திரும்ப அதையே சொன்னா எப்படி மனோ? பாதி ஆட்டத்தில் வர முடியாது."

அன்னைக்கு அவளை எட்டே முக்கால் மணி சுமாருக்கு ஆனந்த் வீட்டில் இறக்கிவிட்டபோது, மனோகர் அதையை விட்டு வாசலுக்கு வரவே இல்லை.

உள்ளே வந்தவள் கைப்பையை படுக்கையில் வீசிந்து விட்டு பாத்ரூம் சென்று வந்து நிதானமாய் 'ஹாய்' என, அடக்கி வைத்திருந்த கோபம் நிழலை விட்டு வெளியே துவங்கியது.

கண்களில் லேசான நிகப்பு.

சீட்டு விளையாடுகையில் ஓரிரு பெக் மற்றவர்களுடன் சேர்ந்து அருந்தி இருக்க வேண்டும்.

இவன் கோபத்தையோ, மௌனத்தையோ உணராத மாதிரி "கிவ் மீ எ சிகரட் மனோ" என்று அவள் கை நீட்ட, மனோகர் பட்டென்று வெடித்தான்.

"லெட்கமாயில்லே உனக்கு?"

"எதுக்கு?"

"இப்படி ஒன்பது மணி வரையிலும் கிளப்புல சீட்டாடி, குடிச்சிட்டு உட்கார்த்திருந்ததும் இல்லாம, என்கிட்டயே வந்து சிகரேட் கேக்கறியே. அதுக்கு?"

நிர்மலா உரக்கச் சிரித்தாள்.

"இதுல லெட்கப்பட என்ன இருக்கு மனோ! நாட்ங்ஸ் எடுத்துக்கறதும், சிகரெட் பிடிக்கறதும் உங்க

எனக்குத் தெரிஞ்ச விஷயம்தானே! இன்பாக்ட் முதல்ல
நீயுக்கச் சொன்னதே நீங்கதானே!''

மனோகர் தொடர்பில் ஓங்கி வளர்த்து கொண்டான்.

''தப்புதான். இப்படி அளவுக்கு மீறி நீ போயிடுவேன்னு
தெரியாமதான் உன்னை தாகரிகமாக இருக்கச் சொன்னது
தப்புதான்...''

நிர்மலா அலுப்புடன் படுத்தபடியே சாய்ந்தாள்.

''ட்ராமா டைலாக் பேசாதீங்க, மனோ. வர வர
உங்களிடமிருந்து ஒரு பெரிய தொந்தரவா போயிடிச்சி.''

துளி பொறுப்பு இல்லாமல்—மரியாதை இல்லாமல்
அவள் பேச மனோகர் தாவிச் சென்று அவளை தெருங்கி
னான். லேசுமாய், கையைப் பிடித்து தட்டார வைத்து
கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

''வெளிழுருக்குப் போயிட்டு வந்து புருஷன்கிட்ட ஒ
வார்த்தை அக்கறையாப் பேசமுடியலை? குழந்தை
சாப்பிட்டானா, தூங்கினானான்னு துளி கவலை
இல்லை. நீயும் ஒரு பொம்பளைதானா? த்தூ
டிஸ்கஸ்டிங்.''

கன்னத்தில் கையை வைத்து அவளை வெறித்த
நிர்மலா, அப்படியே சில நிமிஷங்களுக்கு உட்கார்ந்திரு
தாள். அப்புறம் மெதுவாக எழுந்து தைட் டெரஸுடன்
விருந்தாளிகள் படுக்கை அறைக்குச் சென்று, கதவை
சாத்திவிட்டுத் தாழிட்டுக் கொண்டாள்.

அன்றிலிருந்து, அடுத்து வந்த இந்த ஒரு மாசமாக
அவள் படுப்பது அந்த அறையில்தான்.

புருஷன், மனைவி நடுவில் நீளமான பேச்சு வார்த்தை
கள் அடியோடு நின்று போய்விட, அவசியமான கேள்வி
கள்; இல்லை, ஆமாம்... என்ற பதில்கள்.

பிடித்துக் கொண்டிருந்த சிகரெட் அடிவரைக்கும்
புகைந்து, விரலைச் சுட, மனோகர் கையை உதறி
கொண்டான்.

கீழே விழுத்துவிட்ட சிகரெட் துண்டை எடுத்து,
பால்கனி கதவைத் திறந்துகொண்டு சென்று தோட்டத்
தில் தூர எறிந்தான்.

கதகதத்த உடம்புக்கு குளிர்காற்று இதமளித்
தது.

ஆகாயம் மூட்டமாய் இருக்க, இங்கொன்றும்
அங்கொன்றுமாய் நட்சத்திரங்கள் பளிச்சிட்டன.

கதா உன்னே தூக்கத்தில் ஏதோ பிதற்றி அழுவது
சன்னமாய்க் கேட்க, குழந்தையின் நலனை உத்தேசித்தா
வது இன்றைக்கு நிர்மலாவுடன் பேசி எல்லாவற்றுக்கும்
ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்ற தீர்மானத்துடன்
அவன் நிற்கையில், கேட்டில் கார் ஒன்று நுழைந்தது.

வெள்ளை நிறத்தைக் கொண்டு அது ஆனந்தின்
வண்டி என்பதை ஊகிக்க முடிய, அவர்களை, சேர்ந்து
பார்க்க விருப்பம் இன்றி இருந்த இடத்திலேயே நின்றான்.

ஐந்து நிமிஷங்களில் மெல்லிய பேச்சு, சிரிப்பைத்
தொடர்ந்து கார் கிளம்பிப் போக, மனோகர் மெதுவாக
கூடத்துக்குள் வந்தான்.

படி ஏறி ஹாலில் நுழைந்த நிர்மலா இவனைக்
கண்டதும் நின்றாள்.

கலைந்திருந்த தலைமுடி.

கண்களடியில் லேசாய் கரு வளையங்கள்.

விரல்களில் புகையும் சிகரெட்.

சின்னப் பெண்ணைப்போல காட்சி அளிக்கவேண்டும்
என்ற ஆசையில் சரியாகச் சாப்பிடாமல் வேண்டுமென்றே
இளைக்க வைத்துக் கொண்ட உடம்பு

''எனக்கு உன்கிட்ட பேசணும் நிர்மி.''

அவள் தலையைச் சாய்த்து, உதட்டை ஒரு பக்கமாய்ச்
சுழித்துச் சிரித்தாள்.

''எனக்குகூட உங்ககிட்ட பேசணும் மனோ.''

"உட்காரு."

உட்கார்ந்தான்.

யோசித்து வைத்திருந்த வார்த்தைகளை உபயோகித்து மனோகர் மெதுவாகப் பேசினான்.

"நம்ம இரண்டு பேருக்காகவும் இல்லாட்டிப் போனாலும் சுதாவோட நன்மைக்காகவாவது நாம மனஸ்து விட்டுப் பேசறது நல்லதுனு தோணுது நிம்மா."

"ம்."

"இன்னிக்கு தூங்கப் போறதுக்கு முன்னால சுதா ரொம்ப அழுது அமர்க்களப்படுத்திட்டா. என்னனு விசாரிச்சேன். அவ ப்ரெண்ட்ஸ் எல்லோருக்கும் அம்மாவோ, அப்பாவோ தினமும் பெட் டைம் ஸ்டோரி சொல்றாங்களாம். தனக்கும் சொல்லணும்னு தோணி அழுகை."

நிர்மலா அசிரத்தையுடன் காலை ஆட்டிக் கொண்டு பேசினாள்:

"சொல்றது தானே. நீங்கதான் வீட்டுலே இருந்திருங்களே."

"நி...ம்மா"

"கத்தாதீங்க மனோ. அம்மாவோ, அப்பாவோ கதை சொல்றாங்கறது சொன்னீங்களேனு, கேட்டேன். அம்மாதான் சொல்லணும்னு இல்லியே— அப்பாவும் சொல்லலாம் இல்லே!"

மனோகர் அவள் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

"சில மாசங்களாகவே நாம ரெண்டு பேரும் ஒருத்தரை விட்டு ஒருத்தர் விலகிப் போயிட்டிருக்கோம்னு நா நினைக்கறேன் நிம்மா. திஸ் ஈஸ் நாட் குட். முக்கியமா சுதாக்கு நல்லதே இல்லே... அவளுக்கு அஞ்சு வயசு பூர்த்தி ஆயிடிச்சி."

நிர்மலா முகத்தைக் கேலியாக வைத்துக் கொண்டு சிரித்தாள்.

"என்ன இன்னிக்கு சோகபத்தான் பெண்ணைப் பத்தி கவலைப்படறீங்க. ஆச்சரியமா இருக்கே!"

அவளுடைய இண்டலி கிளப்பிய எரிச்சலை அடக்க மனோகர் சிகரெட்டைப் பற்ற வைத்து புகையை இழுத்தான்.

"இன்னிக்குனு இல்லே நிம்மா. கொஞ்ச நாளாவே எனக்குள்ள இந்த அக்கறை தோணிட்டுதான். சுதா வளர்ந்து பெரிய பொண்ணா ஆகறப்ப, அம்மாவோட எப்பவும் இருக்கணும். தனியா அவளை விட்டு இருந்து கவனிக்கணும்னு அவ பிறந்தபோதே நினைச்சதுதான். ஆன் வர் பேரண்ட்ஸ், நாம இதைப் புரிஞ்சிகிட்டு அனுசரிச்சுதான் போகணும்."

நிர்மலா நகவிரல் நகங்களை ஆராய்ந்தாள். தலையை நிமிர்த்தாமல் பேசினாள்.

"திடும்னு வந்திட்ட பெண் குழந்தைக்காக, நீங்க வேணா எல்லாத்தையும் மாத்திகிடுங்க. ஐ லைக் மை நவ் அட்டிட்யூட். ஆனா, என்னால எதுவும் முடியாது... இன்பாக்ட் நாம வாழறது ரொம்ப போலியான வாழ்க்கை. இதைத் தொடர்ந்து வாழணுமானே நா யோசிச்சிட்டிருக்கேன்."

"நிம்மா என் மேலே உனக்கு ஆயிரம் கோபம் இருக்கலாம். அதுக்காக இப்படி வாய்க்கு வந்ததைப் பேசாதே; நல்லா இல்லே."

நிர்மலா முகத்தைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, அவனை ஏறிட்டு வெறித்தாள்.

"வாய்க்கு வந்தது இல்லே மனோ. சீரியஸாதான் சொல்றேன் சில மாசங்களிலே என் நடவடிக்கைகள் உங்களுக்குப் பிடிக்கலை. என்னைப் புரிஞ்சிக்காம நீங்க

பேசாதது, என் அழுக்கிறது கூட தான்— எனக்குப் பிடிக்கலை. சரிப்பட்டு வராத பிராயிய நாம தொடர்ந்து வாழறதுல அர்த்தம் இருக்கிறதா எனக்குத் தோணலை. இனியும் வேஷம் போடவும் நா விரும்பலை. உங்க வாழ்க்கை உங்களுக்கு, என் வாழ்க்கை எனக்கு. ஓகே?''

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு மனோகர் அதிர்ந்து நிற்பதைப் பொருட்படுத்தாமல் எழுந்து தன் அறைக்குச் சென்று நிர்மலா கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

மறுநாள் மனோகர் ஆபீஸ் செல்லும் வரையில் வெளியில் வராது இருந்தவள், அவன் போன பிறகு பெட்டிகளில் தன் உடைமைகளை எடுத்து அடுக்கினாள்.

ஒரு பேப்பரில் ''நேற்றே சொல்ல வேண்டியவற்றைக் கூறிவிட்டேன். என்னை நன்றாகப் புரிந்துகொண்டவரோடு— என், பொறாமைச் சொல்லதில் எனக்கொன்றும் நடக்கமோ, வெட்கமோ இல்லை — ஆனந்தமாடு தான்— நான் புது வாழ்க்கை வாழச் செல்கிறேன். துரத்திக் கொண்டு வந்து தொந்தரவு செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்— குட்பை, நிர்மலா—'' என்று எழுதி, கவரில் போட்டு ஓட்டி ஆயாவிடம் கொடுத்து, ''ஆபீஸ் லேந்து ஐயா வந்ததும் கொடுத்திடு'' என்றாள்

பத்து மாசம் சுமந்து பெற்ற பெண்ணை நிரந்தரமாய்ப் பிரிகிறோமே என்ற கலக்கம் கடுகத்தனை கூட இல்லாமல் பம்பாய்க்கு ட்ரான்ஸ்பர் ஆகி அன்று புறப்பட்டுக் கொண்டிருந்த ஆனந்தின் அழைப்பை ஏற்று அவனுக்கு மனைவியாக வாழ, தன் உடைமைகளுடன் அவனைத் தேடிச் சென்றாள்.

5

அது ரொம்ப நிசப்தமாய் இருந்தது.

கடிகாரத்தின் பெண்டுலம் அசையும் சப்தம் மட்டும் பெரிசாக ஒலித்து, அந்த மௌனத்தைக் கலைக்க முயன்று கொண்டிருந்தது.

பத்திரிகைகளும், தலைகாணிகளும் படுக்கையில் வாரி இறைத்திருந்தன.

சிகரெட் துண்டுகளின் ஆஷ்ட்ரேயை நிறைத்துவிட்டு டேபிள் மேலும், தரையிலும் சிதறிக் கிடந்தன.

புகை மூட்டம்.

வெளிக்காற்று உள்ளே வர வழியில்லாததால் அது நாறியது.

எதையும் கவனிக்கும் நிலையில் மனோகர் இல்லை.

குளிக்காமல், சாப்பிடாமல், நினைத்தபோதெல்லாம் சிகரெட்டுமாய் முக்கால்வாசிப் பொழுதைத் தள்ளியதில் அவன் வெகுவாகப் பலவீனமடைந்திருந்தான்.

நான் ஆண் என்பதை மறந்து அடிக்கடி அழுதிருந்ததில் கண்கள் சிவந்து, இமைகளை மூட முடியாமல் எரிந்தன.

மண்டைக்குள் வண்டு ஒன்றின் ரீங்காரம்.

நிர்மலா... நிம்மி... நிர்மலா...

என்னை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டுப் போய் விட்டாளே!

இனி நான் என்ன செய்வேன்?

எவ்வாறு வெளி உலகத்தில் நடமாடுவேன்?

நண்பர்களை எப்படி நிமிர்ந்து பார்ப்பேன்?

அலுவலகத்திற்கு கூனிக் குறுகாமல் சென்று வருவது எங்ஙனம் சாத்தியமாகும்?

ஐயோ—நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்!

சென்ற ஜென்மத்தில் செய்த பாவம்தான் என்ன?

தலை தூக்க முடியாமல் இப்படியொரு இடி என்னை வீழ்த்தி விட்டதே...

என்ன செய்வேன்?

எங்கு செல்வேன்?

வலிக்கிறதே... இதயம் குடைகிறதே...

என்ன செய்து இந்த வலியைக் குறைப்பேன்?

மனோகர் புலம்பினான், வாய்விட்டு அழுதான், மூட்டிக்கொண்டு பரிதவித்தான்.

நிர்மலாவின் கடிதத்தைப் பார்த்துவிட்டு, நாலாக மடித்தபோய் படுக்கையில் சாய்ந்தவன், நாட்கள் நாலாகப் போகின்றன, இன்னும் தெளியவில்லை!

அறைக்குள்ளேயே முடங்கிக்கொண்டான். போனில் பேச மறுத்தான். நண்பர்களைச் சந்திக்க மாட்டேன் என்றான். சாப்பாட்டைத் தவிர்த்தான் தூக்கம் வராமல், இருப்புக் கொள்ளாமல், என்ன செய்வது என்று புரியாமல் ஹா ஹா என்று தனக்குத்தானே தவித்துப் பறந்தான்.

இன்று நாலாவது நாள்...

நீயும் வேண்டாம், உன் உறவும் வேண்டாம் என்று நிர்மலா அவனை விட்டுப் போய் இன்று நாலாவது நாள்.

படுக்கை கொள்ளாமல் மனோகர் எழுந்து உட்கார்ந்தான்.

காலியாய் இருந்த வயிறு என்னமோ செய்தது. ஒரு பக்கம் புரட்டியது. இன்னொரு பக்கம் கொரக்களி வாங்கி தலைகளைச் சுண்டி இழுத்தது.

தலை கனமாய்க் கனத்தது.

கழுத்தில் நிற்கமாட்டேன் என்று அடம் பண்ணியதை தாங்கிக் கொள்வது போல கைகளால் அழுந்தப் பிடித்தான்.

மூச்சு அடைக்கிற மாதிரி இருந்தது.

இருட்டில் பார்வையை புரியாமல் கண்கள் மசமசத்தன.

பிரயத்தனப்பட்டு, விளக்கின் ஸ்விட்சைத் தேடிப் போட்டான்.

திடுமென எழுந்த வெளிச்சத்தில் கண்கள் கூசி, எரிந்தன.

போர்வையை உதறித் தள்ளிவிட்டு மெதுவாக பாத்ரூமுக்குச் சென்றான்.

ஸர்ரியாய்க் குத்தின நீரின் ஜில்லுப்பைப் பொறுத்துக் கொண்டு, முகத்திலும், பின் கழுத்திலும் வாரி இறைத்துக் கொண்டான்.

அரை நிமிஷத்தில், மண்டையின் பாரம் கொஞ்சம் குறைந்த மாதிரி இருந்தது.

முகத்தைத் துடைத்துக்கொண்டு கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தான்.

மடையா-எதற்காக உன்னை வருத்திக் கொள்கிறாய்-என்று அது கேட்கிற மாதிரி தோன்றியது.

பேனின் மேல் சாய்ந்து, கண்ணாடிக்குச் சமீபத்தில் சென்று உற்றுப் பார்த்தான்.

மீண்டும் பிம்பம்—யூ ஆர் எ ஃபூல் மனோ... என்றே சொன்னது.

அவளை மகாராணி மாதிரி நீ வைத்துக் கொண்டாலும், உன் அருமை புரியாமல் ஓடிவிட்டாள்— கழுதை— போகட்டும் என்று விட்டு உதறாமல், எதற்காக உன்னை வேதனைப்படுத்திக் கொள்கிறாய்?

மனோகர் கலைந்திருந்த தலையை விரல்களால் கோதிக்கொண்டு வெளியில் வந்தான்.

இருண்டு கிடந்த கூடத்தைத் தாண்டி டைனிங் ஹாலுக்குச் சென்று விளக்கை ஏற்றினான்.

பிரிஜ் கதவைத் திறந்து, என்ன இருக்கிறது என்று பார்த்தாள்

ரொட்டி, முட்டை, வாழைப்பழம், பால்.

ஒரு வாழைப் பழத்தை எடுத்து, உரித்து, உள்ளே போகமாட்டேன் என்று தகராறு பண்ணப் பல்லை, பிடி வாதமாய் மென்று விழுங்கினாள்.

ஸைட் போர்டிலிருந்து க்ளாஸ் எடுத்து பாலை ஊற்றிக் கொண்டு நிதானமாய்க் குடித்தாள்.

கொஞ்சம் உணவு போனதும், வயிற்றின் சங்கடம் ஓரளவுக்குக் குறைவது புரிய, சரியான காரியம்தான் செய்தோம் என்கிற திருப்தியுடன் கூடத்துக்கு வந்தாள்.

ஒரு சத்தமின்றி மகள் அனைக்குச் செல்லாமல் மகள் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள்.

நீல விடிவிளக்கின் ஒளியில் கட்டிலில் சுதாவும் தரையில் ஆயாவும் படுத்திருப்பது தெளிவாகத் தெரிந்தது.

சப்தம் செய்யாமல் மகளின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை வெறித்தாள்.

சாயலில் சுதா அப்படியே அவள்தான். நிர்மலாவின் ஜாடை கொஞ்சம் கூடக் கிடையாது. நிறம் வேண்டுமானால் அம்மா மாதிரி என்று சொல்லலாம்; அவ்வளவுதான்.

கண் சிமிட்டாமல் பெண்ணைப் பார்க்கையில்—ஐந்து வயசுக் குழந்தைக்குத்தான் இந்த வயசுக்குள் எத்தனை ஏமாற்றங்கள் என்ற வருத்தம் எழுந்தது.

முதலில் குழந்தை வேண்டாம் என்று தான் சொன்னதை நிர்மலா கேட்டிருந்தால், இவள் பிறந்திருக்க மாட்டாளே—இந்த வேதனையெல்லாம் அனுபவிக்காமல் தப்பித்திருப்பாளே— என்ற எண்ணம் தோன்ற, 'நக்' கென்று உள்ளுக்குள் ஒரு கோபக் குமிழ் வெடித்தது.

நிர்மலா ப்ளடி பிச்...

எத்தனை கல்நெஞ்சக்காரி நீ...

உனக்கு இந்த எண்ணிடம் என்ன குறை?

பணம், சுதந்திரம், அத்தனையும்— என்று எதில் குறை?

மனம்... ஒன்றிலும் இல்லை.

தலைக்கு மேல் வைத்துக் கொண்டு கூத்தாடினேன்.

என் அருமை புரியாமல் ஒதுக்கிட்டாயா?

அளவுக்கு மீறி இடம் கொடுத்ததில், உன் வரம்பு எது என்று புரிகிற நிதானம் இல்லாமல் வழி தவறிப் போய் விட்டாயா?

ஓடு, ஓடி... ஒழிந்து போ!

அத்தனையும் உனக்கு நான் கொடுத்திருந்த டிடத்தால் வந்த வினை.

எஸ்— ஒன்றுமே தெரியாத அப்பாவியாக இருந்தவள், இப்படி அத்துமீறி நடந்து கொள்ள நான் ஏகத்துக்குக் கொண்டாடியது, இடம் கொடுத்ததும் கூட காரணங்கள்தானே!

ஷேண்டாம் என்று ஒதுக்கியவளை வலுக்கட்டாயமாக நாகரிக மோகத்தில் தள்ளி, இன்று அவள் என்னை, என் மகளை விட்டுப் பிரிய நானே வழி வகுத்துவிட்டது உண்மைதானே!

கடவுளே...

நாகரிக மோகம்.

இதுதானே என்னையும் ஆட்டிப் படைத்து, நிர்மலா கண்ணையும் கட்டிவிட்டது!

எஸ், எஸ்... எஸ்.

நாகரிகமான வாழ்க்கை வாழ ஆசைப்பட்டதுதான் இந்த அரங்கம் நடப்பதற்கு விதையாக இருந்தது!

எங்கள் வாழ்க்கை இன்று இப்படி, கோணிப போக, அன்று நான் விரும்பிய நாகரிக மோகம்தான் அஸ்திவாரமாக அமைந்து விட்டது.

நாகரிக வாழ்க்கையை நான் வெறுக்கிறேன்.

நாகரிக மனிதர்களை நான் வெறுக்கிறேன்

என் வாழ்க்கை சீரழிய ஒரே காரணமாய் இருந்த நாகரிக வெறியை நான் வெறுக்கிறேன்.

டாம் தட் சோஷியல் ஸைப்.

என்னவோ புரிந்துவிட்ட திணுசில் ஒன்றி நெற்றியில் அழுத்திக் கொண்ட போது கைகளிரல்கள் நடுங்கின.

உடம்பு பூராவும் வியர்த்தது.

'ம்மா....ஆ...' என முனகலுடன் சுதா புரண்டு படுத்தாள்.

அனாதை போல் யாரும் இல்லாமல் மகள் படுத்திருப்பது மனதைக் கஷ்டப்படுத்த, இது நாட்கள் இல்லாத விதமாய், இனி எனக்கு இவள்தானே எல்லாம்... இவள் உருவாக நானும் அல்லவோ காரணம்? அம்மா விட்டு ஓடின மாதிரி பொறுப்பில்லாமல் நானும் நடந்து கொண்டால் இத்தப் பிஞ்சின் நிலை என்ன? என்ற கேள்விகள் நெஞ்சைப் பிராண்ட கண்களில் நீர் திரண்டது.

நிர்மலா போய் விட்டால் என்ன?

நான் பெற்றவன் இருக்கிறேன், இவளை அனாதையாய் விடமாட்டேன்.

அந்த நாகரிக ஆசையில் நிர்மலாவைப் பாழாக்கின மாதிரி இவளை வீணாக்க மாட்டேன்.

கண்டிப்புடன், கட்டுப்பாட்டுடன், அந்தக் கால வழக்கப்படி வளர்த்து, சுதாவை சிறந்த விதத்தில் ஆளாக்குவேன்.

நான் என்னையறியாமல் செய்துவிட்ட பாவத்திற்கு இவளை ஒழுக்கத்தோடு வளர்ப்பதுதான் பிராயச்சித்தம்.

செய்வேன்... கண்டிப்பாய் சத்தியமாய் காட்டுவேன்!

மனோகர் குனிந்து மகள் நெற்றியில் முத்தமிட்டான். நகர்ந்திருந்த அவள் போர்வையைச் சரி செய்தான்.

ஓசைப்படாமல் எழுந்து தன் அறைக்கு வந்தான்.

மேஜை முன் உட்கார்ந்து செய்ய வேண்டியவைகளை என்னென்ன என்று யோசித்துக் குறித்துக் கொண்டான்.

இனி இந்த வரிசில் தெரிந்தவர் நடுவில் இருப்பதென்பது இயலாத காரியம்.

நண்பர்களைப் பார்க்கையில், இங்கு அங்கு போனால் நிர்மலா பற்றின பேச்சு, ஞாபகம் கட்டாயம் எழும்.

தேவையில்லாத அவள் நினைவு வேண்டாம். அவளைப் பற்றின எந்தப் பேச்சுமே வேண்டாம்.

வேறு?

முதல் காரியமாய் இந்த வீட்டை விட்டுப் போவதுதான் சரி.

எங்கே போகலாம்?

வாட் அபௌட் மைசூர்?

வேலையை விட்டு விட்டால், கையில் என்ன கிடைக்கும் என்பதை, தோராயமாக கணக்குப் போட்டுப் பார்த்தான்.

ம்ம்... நாட் பேட்... கணிசமாகத்தான் வந்தது.

சரி... வேலையை விட்டு விடலாம்.

அடுத்தது?

சற்று முன் நிர்மானித்தபடி பெண்ணைக் கட்டுப்பாடுடன் வளர்க்க வேண்டுமென்றால், அதற்குப் பெரிய நாகரிகப் பட்டணங்கள் தேவை இல்லை.

தெற்றில், நின்ன ஊராகப் பார்த்துக் கொண்டு போய் விட்டாள்?

திருச்சி, மதுரைப் பக்கம் எனக்கு வேலை வாய்ப்புகள் அதிகம்.

அம்மாவோடு இராமத்தில் கொஞ்ச நாட்கள் தங்கி விட்டு எங்கு செட்டில் ஆவது என்று மெதுவாக யோசித்துக் கொண்டாள்?

மனதில் நிர்மலா உண்டாக்கிவிட்ட ரணத்தில் லவ் தாங்கமாட்டாமல் இருக்க, கவ்வணைக் கட்டிவிட்ட குதிரையாய், தன் காயத்துக்கு முதலில் மருந்து போடுவதி லேயே குறியாக இருந்த மனோகர், வேறு எதைப் பற்றியும் சிந்திக்க மறுத்தவனாக காரியத்தில் கண்ணாய் இறங்கினான்.

மறுநாளே அலுவலகத்திற்குச் சென்று தன் ராஜினா மாவைச் சமர்ப்பித்தான்.

'எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கணக்குப் போட்டு என் ஊர் விலாசத்திற்கு அனுப்பி விடுங்கள்' என்று சுடிதத்தையும் தந்துவிட்டு, 'இரண்டு மாசம் லீவு எடுத்துக்கொண்டு ஆற அமர யோசனை செய் மனோகர்' என்று எம். டி. கரிசனத்துடன் கூறியதைக் காதில் வாங்காமல் பிடிவாதமாய், தான் நினைத்ததையே தொடர்ந்து செய்தான்.

மகளுக்கும் தனக்கும் தேவையான உடைகளை மட்டும் வைத்துக் கொண்டு நிர்மலா சம்பந்தப்பட்ட எது வுமே தன எதிர்காலத்துக்கு வேண்டாம் என்பது போல, பர்னிச்சர்கள், பாத்திரங்கள், அலங்காரப் பொருட்கள் என்று ஒன்று விடாமல் அத்தனையும் ஒரு ஏலக் கடைக் காரரிடம் ஓடாடு மொத்தமாகக் கொடுத்து 'என்ன விலை வருதோ வித்திட்டு உங்க கமிஷன் போக பாக்கிய இந்த அட்ரஸுக்கு அனுப்பிடுங்க' என்று பணித்தான்.

நாது மாச சம்பளத்தை ஆயா கையில் கொடுத்து அனுப்பினான்.

"என் பேத்தியும் திரும்ப வந்து வெள்ளிக்கிழமை அங்கு வருவேன்" என்று அம்மாவுக்குத் தந்தி கொடுத்துவிட்டு ராத்ரி புரியாமல் விழித்துக் கொண்டி ருந்த மகளுடனும் சொற்ப உடைகளுடனும் காலில் எறி, இலி இந்த பங்களாவே சகலமாகவும், நாளை வாழ்க்கையின் யதார்த்தமான வாழ்வை பார்க்க புறப்பட்டான்.

6

ருக்மணிக்கு அப்படி ஒன்றும் வயசாகி விடவில்லை. இன்றைக்கெல்லாம் இருந்தால் இம்பத்தாறு நாற்பத்தி ஏழு வயசுதான் இருக்கும்.

இருபத்தி நாலாவது வயசில் தாலி கட்டியவர் அகால மாய் இறந்துபோக, அந்த இளம் பிராயத்திலேயே விதி வைக்கோலத்தைப் பூண்டதாலோ என்னமோ உடம்பா னும், மனசானும் அவள் சீக்கிரமே முதிர்வாய்ப் போனது தான் நிஜம்.

தலை முடி வெளுத்து, லேசாக கூன் விழுந்து, தோல், சுருங்கி இருப்பவளைப் பார்த்தால் அறுபதுக்கு மேலேயே மதிக்கத் தோன்றும், நிச்சயமாய்.

ருக்மணிக்குப் பிறந்ததே மனோகர் ஒருவன்தான். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று செல்லமாய் வளர்த்ததில், அவன் 'படிக்கிறன், மேலே மேலே படித்து பெரிய உத்யோகத்துக்குப் போகிறேன்'— என்று பிடிவா தம் பிடித்தபோது 'என்னை ஒண்டியாய்த் தவிக்க விட் டுட்டு அப்படி என்னய்யா படிப்பு? இருக்கிற சொத்து

போதும்; பெற்றவளுக்கு அடங்கி மனசோடு வாழ்' என்று அதட்டிச் சொல்லக் கூட தைரியம் இல்லாமல் போய் விட்டது.

மனோகர் மதுரையில் பள்ளிப் படிப்பும், சென்னையில் இன்ஜினியரிங் படிப்பும் படித்தான். அடுத்தும் ஜர்ஷட் பூரில் எம்.பி.ஏ., படித்தான் படிப்பிலும், வேலை நுட்பத்திலும் கெட்டிக்காரனாக இருக்க, பங்களூரில் பெரிய வேலை தானே தேடி வர, மகனின் ஆடம்பர நாகரிக வாழ்க்கை தனக்கு சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்து ருக்மணி சொந்த மண்ணை விட்டுட்டு நா வரலையய்யா' என்ற சாக்கை சொல்லி மனசோடு பூத்தி சாலித்தனமாய்த் தங்கிக் கொண்டாள்.

வருஷத்துக்கு ஒரு தரம்—முடிந்தால் ஒரு நாளோ, அரை நாளோ மனோகர் வந்து பெற்றவளை எட்டிப் பார்த்துவிட்டுப் போவான்.

மற்றபடி ஆடிக்கொன்றுமாய், அமாவாசைக்கு ஒன்றுமாய் இரண்டு வரி கடிதம் வரும்... அவ்வளவுதான்.

தனியாய் மகன் இஷ்டத்துக்கு வாழ்ந்தபோதே வாயைத் திறந்து 'இது தப்புப்பா' என்று சொல்லத் தெரியாத ருக்மணியா, அவன் மனத்துக்கு பிடித்தவளை மணந்துகொண்டு வாழ்ந்த வாழ்க்கையில் குற்றம் குறையைக் கண்டு, 'இது நவறு தம்பி' என்று துணிந்து கண்டித்திருக்கப் போகிறான்?''

ம்ஹூம், இல்லை.

தோளுக்கு மேல் வளர்ந்தவன், படித்தவன், உலகம் தெரிந்தவன், முக்கியமாய் காசு பணத்தோடு அந்தஸ்தாய் வாழ்பவன்— இவனுக்கா நாம் சொல்லி எதுவும் தெரியவேண்டும்? என்ற எண்ணத்துடன் அவன் வாழ்வி லிருந்து ஒதுங்கித்தான் இருந்தாள்.

பிள்ளையைக் காண வேண்டும் என்ற ஏக்கம் தாங்க மாட்டாது போனால் மட்டும் ரயில் பிடித்து பங்களூர் போவாள் இரண்டு நாள் தங்குவாள். முடிந்தவரையில் பட்டும் படாமல் இருந்துவிட்டு பிள்ளைக்கோ, மருமகளுக்கோ சின்னஞ்சிறு துளி கஷ்டம் என்ற பேச்சு எழாமல் வந்து விடுவாள்.

அப்படிப்பட்டவள் பிள்ளையிடமிருந்து தந்தி என்ற தும் தவித்துப் போனதில் வியப்பு என்ன?

தந்தியா?

மனோகரிடமிருந்தா?

என்னை?

பிரித்து தந்தி சேவகரையே படிக்கச் சொல்வதற்குள் படபடவென்று வந்தது.

'நானும், சுதாவும் வெள்ளிக்கிழமை அங்கு வருகிறோம்'

சேதி அறிந்து ருக்மணி எதற்காக சந்தோஷித்தா லும் மனைவியை விட்டுவிட்டு ஏன் இப்போது ஓடோடிப் பென்று பிள்ளை வருகிறான் என்ற கேள்வி மாத்திரம் மனத்தை விடாமல் கலக்கிக் கொண்டே இருந்தது.

தந்தி கிடைத்து, பிள்ளை வருவதற்கு இடையில் இருந்த இரண்டு நாட்களில் ஆள் வைத்து வீட்டைச் சுத்தம் பண்ணினாள் மாவு இடித்து பேத்திக்கு பலகாரங் களைச் செய்தாள்.

வெள்ளிக்கிழமை காலையிலிருந்தே குட்டி போட்ட பூனை மாதிரி வாசலுக்கும் உள்ளுக்கும் நடையாய் நடந்தாள்.

மாலை மங்கி இருள் சூழ்ந்து எட்டு மணி சுமாருக்கு காரை, புழுதிப் போர்வை போர்த்திருக்க, மனோகர் பெண்ணுடன் வந்து இறங்கினான்.

'லாயிய தம்பி' என்று வரவேற்ற குக்குமணிக்குள் காரணமில்லாமல் பயம் வேகமாய் வியாபித்தது.

பிள்ளை ஏன் எப்படியோ இருக்கிறான்?

உடம்பு நன்றாக இல்லியா?

மருமகளுக்கு ஏதாவது உடல் கோளாறா?

போத்திக் குட்டியுட் இளைத்துப் போய், சோனியாய், தெம்பாகவே இல்லையே.

"நிர்மலா வரலியா தம்பி?" என்றதும் "இல்லை—விவரம் அப்புறம் சொல்கிறேன்" என்று மனோகர் தாழ்ந்த குரலில் பதில் சொல்ல அவள் சங்கடம் அதிகமானது.

என்ன விஷயம்?

அவள் பயந்தது வீணாகாமல் அன்றிரவு சாப்பாடு ஆகி ஈதா நேரங்கெட்டபின், மாடி அறையில் உட்கார்ந்து, சிகரெட்டைப் பிடித்துக் கொண்டு மோட்டு வளையை வெறித்தபடி மனோகர் பூரா விவரத்தையும் அவளிடம் சொல்ல, சப்தம் எழாமல் மார்பில் அடித்துக் கொண்டு குக்குமணி பதறினாள்.

"என்ன, என்னய்யா சொல்றே? நிர்மலா உன்னோட இருக்கப் பிடிக்கலைனு இன்னொருத்தனோட ஓடிட்டாளா? அட, கூறுகெட்ட மூதேவி. ஒடுகாலி முண்டம். என் பிள்ளையைவிட உனக்கு இன்னொருத்தன் உசத்தியா போயிட்டானா. அய்யோ! அய்யோ! முருகா! நா என்ன பண்ணுவேன்? எங்கே போய் முட்டிப்பேன்? ஒரும்ப கௌரவத்தைக் காத்துல விட்டுட்டு ஓடிப்போனாளே சிறுக்கி. அய்யோ, ராஜா நா பெத்த மவனே, உனக்கு என்னய்யா குறை? ராஜா மாதிரி இருக்கே. கை நிறைய சம்பளம். அவளை ராணி மாதிரி ஒருத்தர் ஒரு சொல் பேசாம வைச்சிருந்தே. நா என்ன பண்ணுவேன் ஊர் மொகத்தில எப்படி முழிப்பேன்? அய்யோ! அய்யோ!"

தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு தாய் அழுதது கண்களைக் கலங்க வைக்க, மனோகர் தலை குனிந்து உட்கார்ந்தான்.

'ஏனய்யா, இந்த அக்கிரமம் எப்படி நடந்திச்சு? என்ன ஆச்சு? ஏன் அவ ரத்தி கெட்டுப் போயிட்டா? விவரமா சொல்லுய்யா. என்னால நம்ப முடியலையே. நீ தலை குனிஞ்சி உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தா கண்றாவியா இருக்குதேய்யா. நா என்ன பண்ணுவேன்? உங்கப்பா போனப்பவே நானும் போயிருக்கக் கூடாதா? கல்லுக்குண்டு மாதிரி இருந்துகிட்டு எத்தனையும் கேட்டும் பார்த்திட்டும் இருக்கேனே."

சில நிமிஷங்களுக்கு எதுவும் பதில் சொல்லாமல் அவளை மனோகர் அழவிட்டான். பின், நிதானமாய்ப் பேசினான். "இப்ப நீங்க இப்படிப் புலம்பி அழுவறதால ஆகப்போறது ஒண்ணுமில்லேம்மா. போனவளுக்காக நாம கண்ணீர் விட்டு அழறதுகூட வேண்டாதவ. அந்த அளவுக்கு அவ ஈவு இரக்கம் இல்லாதவ, சுயநலம் படைச்சவ. அவளுக்கு நா என்ன குறை வைச்சேன்னு சத்தியமா எனக்குப் புரியலை. போயிட்டா... விடுங்க. இதோட அவளைப் பத்தின பேச்சை நாம அடியோட விட்டுடணும். ஊர்ல நடந்திட்ட அவ செத்துட்டாளுகூட நீங்க சொல்லிக்கங்க, எனக்கு கவலை இல்லே. ஆனா அவ ஏன் போனா, எவனோட போனான்ற விவரமெல்லாம் திரும்பத் திரும்பக் கேட்டு என்னை இன்னும் வேதனைப் படுத்தாதீங்க. ஒருதரம் அத்தனையும் நா சொன்னது போதும் புரிஞ்சுக்கங்க.'

"இல்லையய்யா, பேசலை. அந்த தடிச்செறுக்கிப் பத்தி பேசவேயில்லை. உன்னை மதிக்காத அந்த நாயி, பெத்த புள்ளைய நினைச்சிப் பார்க்காத மூதேவி, இனிமே இருந்தா என்ன, செத்தா என்ன? ஒழியட்டும், ஒழுக்கங் கெட்ட நாயி."

தலைகுத்தாலே புலம்பிக் கொண்டே குக்குமணி, ஏதோ தினைப்புக்கு வந்தவளாய் நிமிர்ந்து சொன்னாள்.

''இல ஒழுங்கா கல்லோட குடித்தனம் பண்ணுவா வாளு எனக்கு சந்தேகம் இருந்திச்சி தப்பி. நா வந்து போல ரெண்டு நாள்லியே பாத்திருக்கேனே— ஓயாம டெலிபோன் வரும்; ஆம்பினைங்க வருவாங்க. சிரிச்சி சிரிச்சி பேசுவா. 'யாரும்மா?'ன்னா 'ஸ்னேகிதங்க'ம்பா, உனக்கு இதெல்லாம் தெரியுமோ, தெரியாதோ? பொம்பளைக் குழைதைக்கு ஆம்பினை நடிவங்களா சினேகிதங்க? அந்தக் குடும்பம் உருப்படுமா? தலைமுழுகி வெட்டிட்டு மாரியுதுணி நிக்காமல் என்ன ஆட்டம் போடுவா? தூக்கி எழுத்தறும் உதட்டுல சாயம் பூசிக்குணுமா, கை நகத்துக்கு அரை மணி நேரம் பாலிஷ் போடணுமா? அந்த ஆளா இருந்தானோ குழந்தை இந்தமட்டுக்கு மரியாதை வளர்த்திச்சு. அத்தனையும் கண்டும் காணாமா நா இருந்திட்டு. உன்னண்ட சொல்லவும் முடியாம எதுவும் செய்யவும் தைரியம் இல்லாம, வந்திட்டேன். இப்ப இல்ல அவளோட தகிடுதத்தம் புரியுது. பேமானி கூறு கெட்ட தேவடியா.''

அம்மா திட்டத் திட்ட மனோகர் வாய் திறக்காமல் அவள் அப்படி ஆங்காரத்துடன் திரிய, முடியை வெட்டிக் கொண்டு ஆட நான்தான் தூண்டினேன் என்று கூறக் கூடத் தைரியமில்லாமல் அமர்ந்திருந்தான்.

''அவளைப் பெத்தவளுக்கு சேதி தெரியுமா தம்பி?''

மனோகர் தெரியாது என்று தலை அசைத்தான்.

''நா போன பண்ணி சொல்றதுதானே? 'பார்த்துக்க உங்க உருமை லட்சணத்தை'ன்னு காட்டமா கேட்கறது தானே?''

''கேட்டு என்னம்மா பிரயோஜனம். போனவ வந்திடப் போறானா?''

''அய்யோ அந்த ஈஸ்தெடி திரும்ப வரனையும் இங்க யார் அழுதாங்க? தான் பெண் வளர்த்த யோக்யதை அத்தப் பெரிய மனுஷனுக்கு தெரியட்டுமேனுதான் கேட்டேன்.''

''அவளுக்கு வேணும்னா அவளே சொல்லிக்கட்டும். இனிமே எனக்கும், அவங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''அதுவும் சரிதான். உனக்கென்ன ஆம்பளை திங்கும், கூட்டிக்க ரெடின்னா ஆயிரம் பேர் க்யூல நிக்க மாட்டாங்களா? நா பாத்து பண்ணி வைக்கிறேன் அருமையான பெண்ணா, நீ எதுக்கும் கவலைப் படாதே.''

மனோகர் லேதனையுடன் சிரித்தான்

''ஆள் அவமானப்பட்டு நொந்து போயிருக்கேன். இந்தச் சமயம் பார்த்து இன்னொரு கல்யாணத்தப் பத்தி பேசறிங்களேம்மா, இது உங்களுக்கே நல்லா இருக்கா? ஒண்ணு சொல்றேன், கவனமா கேட்டுக்கங்க. பொம்பளை சகவாசத்தால நா பட்டபாடு போதும். அவளோட நா அனுபவிச்சதும் போதும். இனி ஆயுசுக்கும் ஒண்டியாகவே இருந்திடணும்ன்ற அளவுக்கு மனசு கசந்து போச்சி. தெரிஞ்சோ தெரியாமலோ பெண்டாட்டிக்கு நிறைய எடம் கொடுத்து, நாகரிகமாக இருக்கச் சொல்லி, அவ தப்புப் பண்ண நானும் காரணமாயிட்டேன். அந்தத் தப்புக்கு பிரதிபலனா என் மகனை கண்டிப்போட, ஒழுக்கத்தோட நல்லவிதமாக வளர்த்து ஆளாக்க விரும்பறேன். இனிமே எனக்குனு இருக்கற ஆசையெல்லாம் இது ஒண்ணுதான் அதுக்காக, வேலைய விட்டுடறேன், சாமானெல்லாம் வித்திட்டு இங்க வந்திருக்கேன். புது ஊர்ல, புது சூழ்நிலைல, புது மனுஷங்க தொடர்போட நானும் என் பெண்ணும் புது வாழ்க்கையத் தொடங்கணும்னு விரும்பறேன். உங்க கிட்ட எல்லாத்தையும் வெளிப்படையா சொல்லிட்டேன். ஒண்ணையும் மறைக்கலை. நீங்க என மனசைப் புரிஞ்சி

கிட்டு. இன்னொரு கல்யாணம் அது. இதனை சொல்லாமே என் மனதிலே வந்து கதாவ நல்ல விதமா வளர்க்க உதவி செய்கன்னா, நா சந்தோஷப்படுவேன்."

குரல் கம்ம... மகன் பேசுவது தெரிக்க முடியாது இருக்க ருக்குமணி "வேதனைப் படாதேய்யா, நா உன் மனம் போல நடந்துக்கறேன். இத்தனை வருஷமா என்கிட்ட யிருந்து எட்டி இருந்த பிள்ளை, இப்பவாச்சும் நெருங்கி வந்தியேப்பது ஒன்னே எனக்குப் போதும் தம்பி. நீ என்ன சொன்னியோ அப்படியே நடந்துக்கறேன் நீ கலங்காதய்யா" என்று கெஞ்சலாய்ப் பேசினாள்.

"ஒரு மாசம் இங்க தங்கி மதுரை, திருச்சி, கும்பகோணம் மேல வேலைக்கு எழுதிப் போடலாம்னு இருக்கேன். வேலை பண்ணாம வீட்டோட நிலத்தைப் பார்த்துகிட்டு இருக்கிறது எனக்கு சரிப்படாது. இந்தப் பக்கமா வேலை தேடிக்கிட்டா, நீங்க என் கூட வந்து இருக்க ஆட்சேபணை ஒன்னும் இல்லியேம்மா?"

ருக்மணி தலையசைத்தாள்.

"ஒன்னையும் இல்லே ஆனா தம்பி, உன் பழக்க வழக்கம் எல்லாம் வேற. நா அந்தக் காலத்து மனுஷி. சாமி, கோயில், சம்பிரதாயம்னு கை நாட்டமா ஏதாச்சும் செய்வேன். உனக்கு சங்கடமா இருக்கும். அதான்..."

பேசியவளை கை நீட்டி மனோகர் தடுத்தான்.

"அந்த மனோகர் இப்ப இல்லேம்மா. உங்க முன்னாடி நிக்கறவன் புது மனோகர். இவன் சம்பிரதாயம், கூட்டுப் பாடு எல்லாத்தையும் நம்பிக்கிட்டுத்தான் புது வாழ்க்கை தொடங்கப் போறான். நீங்க வேணா பாருங்க. இன்னும் ஒரு மாசத்தில் நா அடியோட மாறிடுவேன். குடிச்சு மாட்டேன். சோஷியல் லைஃப் வேணும்னு சொல்லமாட்டேன். ஏன், இந்தச் சிகரெட்டைக்கூடத் தொட மாட்டேன்.

டேன்மா. ஒரு தடவை பண்ணை தப்பு போதும். இனி, என் பெண்ணாச்சும் நல்லா இருக்கட்டும்."

அடுத்து வந்த நாட்களில் யாருமே வேண்டாம் என்று மனோகர் ஒதுங்கிக் கொண்டதில் உறவினரையும், உற்றாரையும் சமாளிப்பதற்குள் ருக்மணிதான் திண்டாடிப் போனாள்.

—மருமக வரலியா?

—அவ எங்கே?

என்று மாறி மாறி யனைவரும் கேட்டபோ — அவ அப்பா வீட்டுக்குப் போயிருக்கா — என்று முதலில் 'எப்ப வருவானோ' அந்த முனை கெட்டவ போக்கு யாருக்கு வளங்குது?' என்று பிறகும் சொல்லி குளித் தலை தாய் புரிய வைத்தான்.

மேற்கொண்டு யாராவது துருவிக் கேட்க முனைத் தால் "அய்யோ வம்பு எங்கே கிடைக்கும்னு அலைய தியேடா... அந்தக் கூறு கெட்ட முழுதை பேச்சை என்னண்ட பேசாத" என்று முகத்தில் அடித்த மாதிரி பேசி வாயை அடைத்தாள்.

ஆக, மனோகர், அவன் மனைவி நடுவில் என்னமோ கசமுசா திருவரும் சேர்ந்து வாழவில்லை என்பது எல்லா ருக்கும் புரிந்ததே ஒழிய, மற்ற விவரங்கள் எதுவும் தெளிவாகவில்லை.

இதன் நடுவில் எக்கச்சக்கமான க்வாலிஃபிகேஷன் களுடன் கூடிய தன் பயோடேட்டாவை மனோகர் இரண்டு தனியார் கம்பெனிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப, அவர்கள் இருவருமே அவனை வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்க, திருச்சி வேலை நாலு விதத்திலும் உயர்வு என்று மனசுக்கும்பட அந்த ஒன்றாம் தேதி முதலில், தான் மட்டும் போய் அங்கு வசதி களில் தாய், மகளுடன் சென்று, விருப்பிய் வகையில் புது வாழ்க்கையைத் தொடங்கினான்.

7

அலாரம் அடிக்கத் துவங்கிய உடனே மஞ்சாகர் விழித்துக் கொண்டு விட்டான்.

சத்தத்தை நிறுத்திவிட்டு, குளியலறைக்குச் சென்று பல் தேய்த்து குளித்தான்.

சுத்தமான வேட்டி, ஷர்ட்டை அணிந்து ஈரத் தலையை வாரினான்.

கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தைப் பார்க்கையில் 'குளிச்ச கையோட முருகனை நினைச்சி துளி விபூதியை பூசிக்கய்யா... நிம்மதி தன்னால் வரும்' என்று நாலைந்து நாட்கள் முன் கரிசனத்துடன் அம்மா சொன்னது நினைவுக்கு வர, உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பாமல், பூஜை அறைக்குச் சென்றான். விபூதி வைத்திருக்கும் டப்பாவை விளக்கைப் போட்டு எடுத்து, ஆள் காட்டி விரலால் கொஞ்சம் எடுத்துப் பூசிக்கொண்டான்.

விளக்கை அணைத்து, வாசல் கதவை திறந்து வெளியில் வந்து, மீண்டும் கதவை இழுத்துச் சாத்தியபின் படிகளில் இறங்கி, தெருவில் வேகமாக நடந்தான்.

விடிகாலை ஐந்து மணி.

சாம்பல் போர்வை பூத்த வானம்.

வெங்கல ஜோதியாய் பளிச்சிட்ட ஒற்றை நட்சத்திரம்.

நாலாவது வீட்டு வாசலில் குரல் எடுத்துக் கூவியது சேவல்.

மாடுகளை ஓட்டிக்கொண்டு வியாபாரத்தை கவனிக்க நடக்கும் பால்காரன்.

மாடுகளின் கழுத்து மணி ணங் டங் என்று குரல் கொடுத்து அந்தக் காலைப் போதுக்கு கட்டியம் கூறி வர வேற்கிற மாதிரி மனோகருக்குத் தோன்றியது.

கடைசி வீட்டு வாசலில் லட்சணமாய் கோலத்தைப் போட்டு, வாசல் விளக்கை மங்கலமாய் ஏற்றி, அதற்குள் வைத்திருந்தார்கள்.

காலை விசி போட்டு நடக்கையில் உறக்கம் கலைத்து அழும் குழந்தையின் சிணுங்கல், சளப் சளப்பென்று வாசல் தெளிக்கும் ஓசை, ட்ரும் — ஹோய் ட்ரும் என்று நாக்கை சுழட்டி பால்காரன் எழுப்பும் தொனி, சர்ரென்று சைக்கிளில் வேகமாய் பேப்பர்காரர் பையன் தாண்டும் சப்தம்-என்று நாலாவித ஒலிகள் காதில் விழ மூச்சை நீளமாக இழுத்து பார்வையைச் சுழட்டினபோது நாளுக்கு நாள் தன் நிம்மதியும் சந்தோஷமும் கூடி வருவதை மனோகரால் உணர முடிந்தது.

நிரந்தரிக்கு வந்துவிட்ட இந்தச் சில மாதங்களில் தன் வாழ்க்கை வெகுவாக நிதானப்பட்டு விட்டது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

டெங்களூர் வாழ்க்கைக்கும் இதற்கும்தான் எத்தனை வித்தியாசம்?

உறங்கி எழுந்தால் ஆபீஸ், நண்பர்கள், பார்ட்டி என்று பொழுது பறந்துவிட, முக்கியமாய்ச் செய்ய வேண்டும் என்ற காரியத்தைக் கூட செய்ய முடியாமல் நாள் முடிந்து விடும்.

ஆனால் இங்கு அப்படி இல்லை.

நேரத்துக்கு மனோகர் அடிமை இல்லை, அவனுக்கு கட்டுப்பட்டு, பொழுது சுருட்டிக் கொண்டு கிடக்கிறது.

வேண்டாத பேச்சு வார்த்தைகள், சகவாசம் என்று எதுவும் இல்லாததால் அமைதியாக சிந்தித்து, தேவையான காரியங்களைச் செய்ய முடிகிறது.

முன்பெல்லாம் ஏழு மணிக்கு முன் அவன் எழுந்து விட்டால், அது அதிசயம்.

முதல் நாள் குடித்து விட்டிருந்த டிரிங்க் தலையிலேயே நின்று, எதையும் முழுக்காய்ச் செய்ய விடாமல் தேங்கி ஒவரை தந்திருக்கும் என்பதால், குளித்து, பேப்பர் படித்துத் தயாராகி ஆபீஸுக்குக் கிளம்புவதற்குள் மணி எட்டரை என்று கடிகாரம் தெரிவிக்கும்.

அலுவலகத்தில் கொஞ்சம் வேலை. வேண்டாத பேச்சு நிறைய...

மாலையில் க்ளப் அல்லது நண்பர்கள் வீட்டில் குடி. மீண்டும் பேச்சு. ஓல்லை வம்பு.

இதுதானே அவன் இத்தனை வருஷங்களாய் வாழ்ந்த வாழ்க்கை!

நின்று நிதானித்து தனக்கென்று ஒரு நிமிஷத்தை ஒதுக்கிக்கொள்ள முடியாதபடி நாசுக்கிச் சுழலில் சிக்கி அந்த வேகத்துக்கு நீந்த முடியாமல் அதல் இஷ்டத்துக்கே இழுக்கப்பட்டுச் சென்றதுதானே உண்மை?

எத்தனை போலியான வாழ்க்கை!

அத்தனையும் வேஷம்.

அந்த நண்பர்கள், அந்தச் சூழ்நிலை, ஏன் அந்த மனைவியும் அவனோடு வாழ்ந்து ஐந்து வருஷங்களும் கூடத்தான் போலியானவை, அசத்தியமானவை...

யார் செய்த புண்ணியமோ அத்தனையும் ஒட்டு மொத்தமாய் ஒதுங்கி விட்டன. பிடித்திருந்த கிரஹணம் விலகுகிற மாதிரி.

தன் நிம்மதி இல்லாத அந்த நாட்களையும், அமைதியாக வாழும் இன்றையப் பொழுதையும் ஒன்றாக மனசில் நிறுத்திப் பார்க்கையில், நானா, இப்படி மாறிவிட்டேனா! இது எப்படி சாத்தியமாயிற்று என்ற வியப்பு எழுந்தது. கூடவே ரொம்ப சந்தோஷமாகவும் இருந்தது.

ரோலத்தில் ஏறி, சுஜனாசாலையில் நடந்து, ஒரு சுற்று சுற்றிக் கொண்டு வீட்டை அடைவதற்குள் இழக்கிய வானம் விலந்து, சூரியன் காலைக்கும் பந்தாய் வெளிப் படத் துவங்கிவிட்டான்.

அம்மா நீட்டிய காரியை வாங்கிவிட்டு மனோகர் வராந்தாவில் பேப்பருடன் உட்கார்ந்து கொண்டான்.

உள்ளே அம்மா 'எழுந்திரு சுதா, விடிஞ்சுபோச்சி' என்று பெண்ணை எழுப்புவது கேட்டது.

நின்றும் பத்து நிமிஷங்களில் சுதா பல் விளக்கி, முகம் கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்து கண் சிவந்து 'சீதக்கனலை செந்தாமரை பூப்பாத' என்ற விளையாடல் அகவலை பாடத் துவங்கிவிடுவாள்.

இதுதான் அம்மாவின் வளர்ப்பு முறை.

—குழந்தைகள் விழுந்த பிறகு தூங்கினால் குடும்பத்துக்கு ஆகாது.

—காலையில் எழுந்து நேற்றிக்கு இட்டுக்கொண்டு, முருகனை வணங்கி சுலோகங்கள் சொல்லச் சொல்லி, சகல சௌபாக்கியங்களும் வீடு தேடி வரும்.

—எழுந்ததும் காபி, அது இது என்று கண்டபடி குடித்து வயிற்றைக் கெடுத்துக் கொள்வது தவறு. பழையது, அல்லது ராகிகஞ்சி குடித்தால் உடம்புக்கு நல்லது; ராகிகஞ்சி குடித்தால் உடம்புக்கு நல்லது; சீயும் எடுக்காது.

இப்படி எதையாவது அம்மா சொல்லிக்கொண்டே இருப்பதில் இதுநாள் தெரியாத பல விவரங்களை மனோகரும் அறிந்து கொள்ள முடிந்தது.

"ஏம்மா என்னை இத்தனை கண்டிப்புடன் நீங்க வளர்க்கலை? இவ்வளவு அழகா இப்ப சுதாவ வளக்கத நீங்க எப்படி என் இஷ்டப்படி இருக்க சம்மதிச்சிங்க?"

என்று ஒருதரம் அவன் கேட்டபோது, என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ருக்மணி விழித்தாள். பின் யோசித்துப் பேசினாள். ''நீ சின்ன வயசிலேந்தே அப்பா பின்னையா இருந்தே மனோ. நா எதாச்சும் சொல்லி வத்தா 'போம்மா' னு போயிடுவே. ஸைன்கூல் படிக்கறது நாள்லேந்தே நீ ஹாஸ்டல்ல தங்கிட்டதால், லீவுக்கு வந்து பின்னைய கண்டிக்க எனக்கும் மனசு வராது அப்புறம் நீ பெரியவனாயிட்டே; உனக்குனு ஒரு பாதைய அமைச்சுகிட்டே. நாம இனிமே வாய் திறந்து எதுனாச்சும் சொன்னா, இருக்குற தளி பந்தமும் விட்டுடுமோன்னு பயம் தணிச்சலா பேச முடியாம செய்திடிச்சி''

அம்மா வெளிப்படையாகப் பேச, இவன் மனதில் எத்தனை ஏக்கங்களை சின்ன வயசில் அடியோடு பொசுக்கி இருப்போம் என்ற குற்ற உணர்வுக்கு ஆளாக, அதை ஈடு செய்கிற மாதிரி ''போனதை விடுங்கம்மா. பேத்திய உங்க மனம் போல வளங்க. அப்படியே நானும் ஏதாவது கப்பா நடந்துக்கறேன்னு தோணிச்சின்னா கண்டிக்கத் தயங்காதீங்க. என் இஷ்டத்துக்கு வாழ்ந்து ரொம்ப சீரழிஞ்சது போதும். இனியாவது நம்மளியோட நா இருக்கணும்'' என்று அவளிடம் கூறவும் செய்தான்.

அம்மா சொன்னபடி வாழ்வில் கலப்பமாய் நிம்மதி கிடைக்கிற மாதிரிதான் மனோகருக்குத் தோன்றியது.

பெங்களூரை விட்டு வந்த புதிதில் நிர்மலா பேரைச் சொன்னாலே மனசு பொங்கிப் போகும். வலி வலி என்று துடித்து அட்டகாசம் பண்ணும். கை விரல்கள் நடுங்கும். மார்புக்குள் இருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளும்.

இப்போது அப்படி இல்லை.

நிச்சயமாய் இல்லை.

நிர்மலாவோடு வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து ஏக்கம் எழுவதில்லை.

அவள் இன்னொருவனோடு ஓடிப் போனதை என்று தனில் ரூத்திரம் கொப்பளிப்பதில்லை.

என்னை ஏமாற்றிவிட்டாளே, நிலவை என்னமாய் வைத்துக் கொண்டிருந்தேன் என்ற புலம்பல்கள் எல்லாம் அடியோடு வருவதில்லை.

போகட்டும்— போறோடி, யார் வேணுமானாலும் போகட்டும்.

இப்படி நடக்க வேணும் என்பதுதான் என் விதியோ என்னால் அதை மாற்றும் தடுக்க இயலாது.

அவள் போனதுகூட ஒரு விதத்தில் நல்லதுதான், இல்லாவிட்டால் அம்மா, பெண்ணோடு இத்தனை நிம்மதியாக நான் வாழ முடியுமா?

வாழ்க்கையில் அர்த்தம் புரிந்து, ஒழுக்கம், கட்டுப்பாடு இவைகள் தரும் சந்தோஷத்தை உணர்ந்திருக்க முடியுமா?

ஸ்ட்ரெஸ் இல்லை.

கண்டிப்பாய் இல்லை.

நிர்மலா என்னை விட்டுப் பிரிந்தது என் நல்லதற்குதான்

எப்பொழுதும் இன்டிபென்டென்ட்.

தனக்குத்தானே குருட்டு யோசனை பண்ணித் தெளிந்து விட்டதாக எண்ணிக்கொண்டதால் தன்னை, தன் சூழ்நிலையை, பழக்க வழக்கங்களை தலை குப்புற மாற்றிக்கொள்வது மனோகருக்குக் கஷ்டமான ஒரு காரியமாக இருக்கவில்லை.

இதுநாள் வரை வாழ்க்கையை அலைக்கழித்தது குடிப்பழக்கம் தானே என்ற வெறுப்பில் முதலில் அதை அடியோடு வெறுத்து ஒதுக்கினான்.

மின் அம்மாவிடம் சொல்லி விட்டதற்காக தகவெட்டை விட்டான்.

மாதத்தில் கண்டிப்பாய் நாலைந்து சினிமாக்களுக்காவது செல்வது என்றிருந்த பழக்கத்தை மாற்றிக் கொண்டான்.

பத்திரிகைகள், சினிமா மனைசைக் கெடுக்கும் என்று அம்மா சொன்னதை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள முயற்சித்தான்.

'நம்ம பக்கத்து பழக்க வழக்கங்கள், பேச்சு வார்த்தை வேணுன்னா, கான்வென்ட் படிப்பு வேணாம்' என்று அம்மாவின் கருத்தை ஆதரித்து மகனை அருகில் இருந்த தமிழ் மீடியம் பள்ளியில் சேர்த்தான். தன்னைப் பொறுத்த வரையில்கூட ஆங்கிலத்தில் பேசுவது, மேல்நாட்டு பழக்க வழக்கங்களை அனுசரிப்பது முதலியவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்துக் கொண்டான்.

மொத்தத்தில் திருச்சிக்கு வந்துவிட்ட ஆறே மாதத்தில் நிர்மலாவோடு வாழ்ந்த வாழ்க்கையின் சாயல்கூட வேண்டாம் என்று வைராக்கியம் பூண்டுவிட்டதுபோல ஆன் மொம்பத்தான் மாறிப் போனான்.

"ஆசனம் சரியா இல்லே சுதா. காலை மடக்காதே. மூச்சை கண்ட்ரோல் பண்ணிட்டு விடற மாதிரி தோணுதே. எனியா இழுத்துவிடு. கழுத்தை ரொம்ப வீரைப்பா வச்சிருக்கே. தலைகளை தளர்த்திக்க. ம்ம்...அப்படித்தான்."

மகன் சர்வாங்காசனம் செய்வதைக் கிட்ட நின்று கண்காணித்துக் கொண்டிருந்த மனோகர், கந்தர் அலுங்குலியும் எகையுமாய் கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த அம்மாவின் முகத்தில் லேசான களிப்பைக் கவனித்து, புன்னகைத்தான்.

பெண் குழந்தைக்கு பைஜாமா, சட்டையை மாட்டி அன்றாடம் காலையில் யோகாசனம் கற்றுத் தருகிறேன் என்றுதான் முனைந்ததில் அம்மாவுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்பது மனோகருக்குத் தெரியும்.

"நீ ஆம்பிளை; ஆசனம் போடறது சரி; இவளுக்கு எதுக்காக, யோகாசனமும், பிராணாயாமமும்? பொம்பளைக்கு இதெல்லாம் அவசியமா?"

வழக்கமாய் அம்மா எது சொன்னாலும் சரி என்று ஏற்கும் மனோகர் இதற்கு மட்டும் சம்மதிக்கவில்லை.

"மனு, உடற்பயிற்சி கட்டுப்பாட்டுக்கு யோகாசனம் செய்றது ரொம்ப முக்கியம்மா. புத்தியை கண்டபடி அலைய விடாம நிறுத்த ஆசனங்கள் உதவும்னு பெரியவங்க சொல்லி இருக்காங்க. ஏன், என்னையே எடுத்துக்கோயேன். யோகம் செய்யற இந்த நாலைஞ்சி வருஷமா எனக்கு ஒரு சின்னத் தலைவலிகூட வந்ததில்லையே. நாலுபேருக்கும் இந்தப் பயிற்சி நல்லதுன்னு நினைக்கறதாலதான் சுதாவுக்கும் சொல்லித் தரேன். தடுக்காதீங்கம்மா."

மனோகர் சொல்வது போல சில வருஷங்களாய் இவனிடம் தொன்றியிருக்கும் தீவிர பழக்கங்களில் யோகாசனம் செய்வதும் ஒன்று.

காலையில் வாக் போய்விட்டு வந்து, காபி சாப்பிட்டு, பேப்பரைப் படித்தபின்பு, ஏழிலிருந்து எட்டுவரை அன்றாடம் கட்டாயம் யோகாசனம் செய்வது அவனிடம் ஒரு வெறியாகப் போய் விட்டது என்றுகூடச் சொல்லலாம்.

யோகி ஒருவர் நடத்திய வகுப்புகளுக்குத் தொடர்ந்து மூன்று மாதங்கள் போய்விட்டு வந்தவனுக்கு, அந்த உடற்பயிற்சியும், மூச்சுக் கட்டுப்பாடும் அளித்

புத்துணர்ச்சியைத் தருகிற மாதிரி தோன்ற, வீட்டில் நிலவும் தவறாமல் ஒருமணி நேரத்தை அதற்காக ஒதுக்கினான்.

எட்டுக்கு யோகாசனம் முடிந்து மீண்டும் குளித்தால் அரைமணி போல பூஜை, தியானம்.

மனோகரை லெகுவாக, தன் வயப்படுத்திக் கொண்ட விஷயங்களில் யோகாவை அடுத்து, பூஜை புனஸ்காரங்களுக்குத்தான் இரண்டாவது இடம் கிடைக்கும்.

முதலில் துளி விபூதியை நெற்றியில் இட்டுக் கொள்வதில் தொடங்கிய இந்த இறைபக்தி, தானாக ஆக, வளர்ந்து கோவில்களுக்குச் செல்வதில், கதாகாலாட்சேபங்கள் கேட்பதில், புராணங்களைப் படிப்பதில் வந்து நின்றது.

அப்புறம், இன்னும் நிஷ்டையாக அதில் ஈடுபடச் செய்து, குரு ஒருவரைத் தேடிச் செல்ல வைத்து மந்திரங்களை உபதேசமாகப் பெற்றுக் கொள்ளவும் தூண்டியது.

இப்போது என்னடாவென்றால், தினந்தோறும் ஸ்படிகத்தில் சிவலிங்கத்தை வெள்ளித் தட்டில் வைத்து, மந்திரங்கள் சொல்லி நீராலும், பாலாலும் அபிஷேகம் செய்கிறான். பூக்களால் படங்களை அலங்கரித்து, சின்னக் குழந்தையாய் குதூகலிக்கிறான். இதெல்லாம்கூட அதிசயமில்லை ஆனால் நெற்றியில், சந்தனப் பொட்டோடும் கழுத்தில் துளசி மணி மாலையோடும். மனோகர் நிற்பது சகஜமாகி விட்டது, உண்மையிலேயே ஒரு பெரிய மாறுதல்தான்.

இரண்டு வருஷங்களாக மாலை போட்டுக் கொண்டு சபரி மலைக்குப் போய் வருவதிலிருந்து வீட்டில் பஜனை நடப்பது வேறு அதிகரித்து வருகிறது.

வியாழன் தோறும் குருவாரப் பஜனையும், சனிக் கிழமையானால் சத்யநாராயண பஜனையும் கட்டாயம் உண்டு.

பஜனை மண்டலிகளைச் சேர்ந்தவர்கள் ஏழு மணி அமாருக்கு மனோகர் வீட்டில் கூடுவார்கள்.

ஒருத்தர் சுருதிப் பெட்டி போட, ஒருவர் சப்ளாக்கட்டை சப்திக்க, இன்னும் ஒருவர் ஜால்ராவில் தாளம் தட்ட, அமர்க்களமாய் பஜனைப் பாடல்களை எல்லோரும் சேர்ந்து பாடுவார்கள்.

கணபதி ஸ்தோத்திரத்தில் ஆரம்பித்து, முடிவு முருகன், அம்மன், எல்வரன், நாராயணன் என்று பாடல்கள் நீண்டு அனுமனைப் பற்றிய பாடலில் வந்து முடிய இரண்டு மணி நேரங்கள்கூட ஆகும்.

வந்தவர்களுக்கெல்லாம் ருக்மணி, நைவேதனம் பண்ணிய சுண்டலை விநியோகிக்க, சமையல்கார அம்மா இருந்தாலும் பாட்டுக்குக் கூடமாட எத்தனையிலும் சதா ஒத்தாசை பண்ணுவாள்.

பாலாடை தாவணி அணிந்துகொண்டு, அடக்கத்தோடு வலையவரும் பெண்ணைப் பார்க்கையில் மனோகருள் பெருமை கத்தும்.

இடுப்பு துளி தெரியாமல் இறங்கி வந்து முடிக்கை.

அழுந்த வாரி பின்னப்பட்ட பின்னல்.

இருந்த இடத்தை விட்டு அசையாமல் செண்டாய் பூ

கேட்கிற கேள்விக்கு பல்யமாய் பதில் சொல்லும் தோரணை

எத்தனை அருமையான வார்ப்பு இது!

பாருங்கடா என் பெண்ணை, அவள் அடக்கத்தை— என்ற பெருமிதம் கண்களில் மிதக்க, உன் பெண் ரொம்ப

சமாத்து மனோகர் — என்று நண்பர்கள் தரும் பாராட்டை தலை அசைத்து ஏற்றுக்கொள்வான்.

பின்னே!

இவளை வளர்க்க இவனும், அம்மாவும் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா நஞ்சமா?

திர்மலாவின் குணத்தில் தப்பித் தவறி கடுகத்தனை கூட இவளுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் எத்தனை விழிப்புடன் இருந்திருக்கிறார்கள்!

பெண்ணுக்கு விவரம் புரிந்த நாள்விருந்தே தாயைப் பற்றிப் பேசுவதை அவள் தவிர்க்கவேண்டும் என்பதை அவ்வப் போது உணர்த்திக் கொண்டேதான் மனோகர் வந்திருக்கிறான்.

''அம்மா எங்கப்பா?'' என்றால், கூசாமல் ''செத்துப் போயிட்டாம்மா'' என்று சொல்லிவிட்டுப் பேச்சை மாற்றிவிடுவான்.

ஆனால், இன்னும் கொஞ்சம் விவரம் புரிந்த பிறகு பாட்டி மூலம் அம்மா சாகவில்லை, தங்களை விட்டு ஓடி விட்டாள் என்ற உண்மை லேசாகப் புரியத் துவங்கிய பிறகு 'அம்மா ஏம்ப்பா நம்பளை விட்டுட்டு ஓடிட்டாங்க?' என்ற அப்பாவித்தனத்துடன் எல்லாரையும் போல எனக்கு அம்மா வேண்டும் என்கிற ஏக்கத்தில் கேட்ட துண்டு.

அப்போதும்கூட பெண்ணுக்குப் புரியுமா, புரியாதா என்கிறதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் ''என்னை பொறுத்தவரை உங்கம்மா செத்துத்தான் போயிட்டா சுதா'' என்று அவள் அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்லி இருக்கிறான்.

ஒரே ஒரு தரம் மட்டும், அப்போது சுதாவுக்கு பத்து வயது இருக்குமா? இருக்கும்—எனக்கு அம்மாவ பார்க்க

ணும் போல இருக்குப்பா அம்மா எப்படியா எனக்கு ஒரு மாமாவும், தாத்தாவும் இருக்காங்களாமே, எனக்கு அவங்களையும் பார்க்கணும் போல இருக்குப்பா' என்று அதிசயித்திலும் அதிசயமாய் அவள் பிடிவாதம் பிடித்தபோது, மகள் தோளை அழுத்தப் பற்றி கண்களைப் பார்த்துப் பேசினான்:

''லிஸன் சுதா—உன்னையும், என்னையும் வேணாம்னு உதறிட்டு இன்னொருத்தனோட ஓடிப் போனவ நம்மா, முன்னே நா சொன்ன மாதிரி, என்னைப் பொறுத்தவரை அவ செத்துப் போனவதான். அதோட அவளை அண்ணன், அப்பா அத்தனை பேர் உறவையும் நா அடியோட மறந்திடறேன். நமக்குத் துரோகம் பண்ணவங்களை நீயும் மறந்திடணும். வெறுக்கணும். அதான் சரியான காரியம். இனி ஒரு தடவை திரும்ப அம்மா பத்தி பேச்சை நீ எடுக்கக்கூடாது. ப்ராமிஸா எடுக்கக்கூடாது. எடுத்தா நா பொல்லாதவனாயிடுவேன். புரிஞ்சிக்கிட்டியா!'' என்றவன் பக்கத்திலேயே நின்றிருந்த அம்மாவிடமும் ''உங்க கிட்டயும் சொல்றேன். இனிமே திர்மலாவைப் பத்தி எந்த காரணத்தைக் கொண்டும் இவகிட்ட பேசாதீங்க. தேவையில்லாத விவரம் எதையாவது சொல்லி இவ குழம்பிப் போக காரணமா இருக்காதீங்க. இப்பதான் இவ வருஷங்களா நா நிம்மதியா இருக்கேன். அதையும் கெடுத்திடாதீங்க'' என்றும் அதட்டலாகச் சொன்னான்.

சுதா புத்திசாலி.

தந்தை முரட்டுக் குணம் கொண்டவர், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவர். இவர் சொல்வதைக் கேட்காது போனால் விளைவுகள் மோசமாக இருக்கும். எதுவும் இவருக்குத் தன் விருப்பப்படி தான் நடக்க வேண்டும். போகட்டும்—இதுவும் இவர் இஷ்டப்படியே இருக்கட்டும் என்று மூச்சு விடாமல் அடங்கிப் போனாள்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பதைப் போல அதற்குப் புறம் அவள் தாயைப் பற்றி வாயைத் திறந்து ஒரு கேள்வி கேட்டதில்லை.

"இன்னுமா அஞ்சு நிமிஷம் ஆகலை?"

சர்வாங்காஸனத்தில் மகளை நிறுத்தி விட்டு என்னமோ யோசனையில் ஆழ்ந்திருந்த மனோகர் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"கூட ஒரு நிமிஷம் நின்னா ஒண்ணும் ஆயிடாது. அதுக்குள்ள பொறுமை போயிடிச்சா? சரி, இறங்கு. மெதுவா மத்ஸ்யாசனம் இரண்டு நிமிஷமும், சவாசனம் அஞ்சு நிமிஷமும் போட்டுட்டு குளிக்கப் போ. பள்ளிக் கூடத்துக்கு நாழியாயிடப் போவுது."

பத்து நிமிஷத்தில் ஆசனங்களை முடித்துக் கொண்டு அவள் வெளியில் செல்ல மனோகர் தன் பயிற்சிகளை வர்சையாய்ச் செய்தான்.

எட்டரைக்குக் குளித்து, பூஜையைக் கவனித்து பின்னர் அன்றைக்கு சஷ்டி என்பதால் முப்பத்தாறு முறை கந்தர் சஷ்டி கவசத்தைச் சொல்லும் பழக்கத்தின்படி வாசல் அறைக்கு வந்து உட்கார்ந்த 'அமரர் ஓடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி' என்று வாய் விட்டுச் சுலோகத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

8

சுதா அசிரத்தையுடன் புடைவையைக் கொசுவி உள் பாவாடையில் சொருகினாள்.

மேலாக்கை இழுத்து தோளைப் போர்த்திக் கொண்டாள்.

அதே சுவாரஸ்யமில்லாத்தனத்துடன் நகைவை வாரிப் பின்னினாள்.

பௌடர் பூசாத முகத்தில் குங்குமத்தினால் பெரிய பொட்டாக இட்டுக் கொண்டாள்.

கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை பார்க்கக்கூடப் பிடிக்காமல் புத்தகங்களையும், டிபன் பாக்ஸையும் எடுத்துக்கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

வாசலில் ரங்கசாமி மணி ஆறிவிட்டதைக் குறிக்க பெல்லை அடித்து ஓசை எழுப்பினான்.

முன் அறைக் கதவிடம் நின்று, ஊஞ்சலுக்குப் புறப் படத் தயாராகிக்கொண்டிருந்த அப்பாவிடம் "போயிட்டு வரேன்" என்றாள் மெல்லிய குரலில்.

"சாப்பிட்டாச்சா?"

"ம்"

"டிபன்பாக்ஸ் எடுத்துக்கிட்டியா?"

"ம்"

"மழை காலமா இருக்கு, சாயங்காலம் கேட் பண்ணாம சுருக்கா வந்திடு. ராமசாமி ஒழுங்கா ரொனை இல்லே?"

"ம்"

"சாமியப்பா வீட்டுல இன்னிக்கு பஜனை இருக்கு. நா போகணும். எட்டுக்குள்ளார வந்திடறேன். நீ எங்கயும் போகாம வீட்டிலியே இரு, என்ன?"

"ம்"

சொல்ல வேண்டியவைகளை மனோகர் சொல்லி முடிந்ததும் சுதா வாசலுக்கு வந்து காத்திருந்த சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தாள்.

"போலாமா பாப்பா" என்று கேட்டுவிட்டு ரங்கசாமி பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

இந்த ரங்கசாமிக்கு வயது அறுபதுக்குக் குறையாது. நேற்றுப் பிடித்து வயசானவனாகப் பார்த்து, மகன் காலேஜுக்குப் போய்விட்டான். இவனை மனோகர் அமர்த்தி இருக்கிறான்.

"சைக்கின் ரிக்ஷா எதுக்குப்பா? நா பள்ளிலேயே போயிட்டு வந்திடறேனே. பஸ் ஸ்டாப் வீட்டு வாசல்ல இருக்கு"

"காலம் கெட்டுக் கிடக்கு. பின்ன பசங்க தாறுமாறா பேசுவாங்க. முரட்டுத்தனமாக நடந்துப்பாங்க. இந்த மாதிரி வயசானவன்தான் சரி. நா சொல்றதை கேட்டுகிட்டு போயிட்டு வரணுன்னா போ; இல்லேன்னா காலேஜ் படிப்பே வேணாம். பேசாம வீட்டோட இருந்திடு. ஆச்சுனு நல்ல இடமா பார்த்து, கட்டிக் கொடுத்திடறேன்."

அப்பா என்றைக்குமே கண்டிப்பாக இருப்பார்தான்; ன்றாலும், பாட்டி போய்விட்ட இந்த இரண்டு வருஷமாய் கெடுபிடியும் கத்தலும் ரொம்பத்தான் அதிகமாகி விட்டன.

—வாசல்ல காரணமில்லாம நிக்காதே!

—காய்கறிகாரனுடன் அப்படி என்ன பேச்சு?

—நேத்து கோயில்ல யாரைப் பார்த்து சிரிச்சே?

—இன்னிக்கு காலேஜ்லேந்து திரும்ப ஏன் லேட்?

—இத்தனை மெல்லிசாய் புடைவை உடுத்தாதே— ஏது இது? முதல்ல தூக்கி எறி.

—டைலர் கிட்ட ரவிக்கை தைக்கக் கொடுக்கணும்னா நீயே போகணுமா? என்கிட்ட கொடுக்கறதுக்கென்ன?

...தலை முடியை எதற்காக இப்படி பறக்கவிட்டிருக்கே? என்னைப் பத்தி என்ன நினைக்கறே?

—நாளைக்கு டெஸ்ட் இருந்தா என்ன? பஜனைல கலந்துகிட்டா பிறகு படிக்க முடியாதா? நான்தான் படிக்கறேன்னு சொல்றேனே.

—மணி ஆறு, எழுந்திருக்க மனசில்லையா? எப்போது எழுந்து எப்போ யோகாசனம் பண்ணுறதா உத்தேசம்?

அதிகாரம், கண்டிப்பு, விரட்டல்.

இந்த அப்பாவுக்கு இவைகளைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாதா?

இவர் செய்வதெல்லாம் நானும் செய்தே ஆக வேண்டுமா?

இவருக்குப் பிடிப்பதெல்லாம் எனக்கும் பிடித்தே ஆக வேண்டுமா?

எனக்கென்று ஒரு தனி விருப்பு, வெறுப்பு இருக்கக் கூடாதா?

ஐந்தரைக்கு எழுந்திருக்க வேண்டும்— ஆரை வரை படிப்பு, பின் யோகாசனம், குளியல், பூஜை, சாப்பாடு உடனே கல்லூரி.

மாலையில் கல்லூரி விட்டதும் அக்கடா என்று சினேகிதிகளுடன் உட்கார்ந்து நாலு வார்த்தை பேசக்கூடாது. விளையாட்டு மைதானத்தில் நின்று மற்றவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்க்கக்கூடாது. காத்திருக்கும் ரிக்ஷாவில் ஏறி வீட்டுக்கு வந்து, முகம் கழுவி டிபன் சாப்பிட்டுப் படிக்க வேண்டும். பஜனை நடக்கும் நாட்களில் அதில் பங்குகொள்ள வேண்டும். ஹோம் வொர்க்கை

முடித்து, பத்துக்குள் விளக்கை அணைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்கு ஓர் உறுமல்.

எல்லா சின்ன வயசுப் பெண்களையும் போல பத்திரிகைகள் படிப்பது? சினிமா பார்ப்பது?

சினேகிதிகள் வீட்டுக்குச் சென்று வருவது? ரேடியோவில் விவிதபாரதி சினிமா பாடல்கள் கேட்பது? மஹும் ஒரு மண்ணாங்கட்டியும் கூடாது. எல்லாம் தவறான காரியங்கள், செய்யத் தகாதவை.

இரண்டு வேளையும் நியூஸ் கேட்கலாம். போனால் போகிறதென்று நல்ல கர்நாடக இசைத் தட்டுகளை கேட்கலாம். அவ்வளவுதான்.

என்ன வாழ்க்கை இது!

ஜெயில் கைதிகளுக்குக்கூட இன்னும் கொஞ்சம் சுதந்திரம் இருக்கும் போல தோன்றுகிறதே?

இவர் ஏன் இப்படி இருக்கிறார்?

ஒரு தரம் வகுப்பு மாணவிகள் எல்லாருமாகச் சேர்ந்து ஐஞ்சைக்குப் பிக்னிக் போனபோது தானும் உடன் செல்லக் கேட்டதும் ''தனியா உன்னை எங்கயும் அனுப்ப மாட்டேன்னு தெரியுமில்லே. அப்புறம் ஏன் வீணா கேட்கிறே?' என்று இவர் பதில் சொன்ன பிறகு, இவள் இங்கு போகட்டுமா, அங்கு செல்லட்டுமா என்று ஆசையுடன் கேட்கிறதை அடியோடு நிறுத்திக் கொண்டுவிட்டாள்.

வகுப்பில் இவளுக்குப் பேர் துறவி!

—சுதாவா? அவகிட்ட ஒரு பேச்சும் வைச்சுக்காதே, சரியான கேஸ் அவ என்று சலித்தார்கள்.

இந்த வயசிலே துளி ஆசை இல்லாமே எப்படி சன்யாசினியா இருக்க முடியறதோ என்று ஆச்சரியப்பட்டார்கள்.

—சரியான ஜடம் சுதா நீன்னு பழிச்சார்கள்.

அத்தனையும் கேட்டுவிட்டு வாயைத் திறக்காமல் சுதா நகர்ந்து விடுவாள்.

தாங்க முடியாது போனால் வீட்டுக்கு வந்து பாத்ரூமில் சத்தம் போடாமல் அழுவாள்.

அலைஸ் ஒத்த மாணவிகளெல்லாம் ஜீன்ஸ், பனியன் அல்லது நைலக்ஸ் சாரியில் பவனி வந்தால் இவள் மட்டும் போர்த்தின காட்டன் புடவையில் வகுப்புக்கு வருவாள்.

கல்லூரியில் சேர்ந்த இந்த இரண்டு வருஷங்களில் அவள் காண்டான பகுதி போன நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

மதியத்துக்கு, சமையல்காரம்மா பால், தயிர் விட்டுப் பிசைந்து கொடுக்கும் தயிர் சோறுதான் அலுக்காமல் சலிக்காமல் நித்தமும்.

என்னமோ தெரியவில்லை. சில நாட்களாக 'சே என்ன வாழ்க்கை இது!' என்று மனசு ரொம்பத்தான் வெறுத்துப் போயிருக்கிறது.

எதுவும் சுவாரஸ்யம் இல்லை.

யாருடனும் நின்று ஒரு வார்த்தை பேசக்கூட விருப்பம் இல்லை.

எரிச்சல், அலுப்பு, சலிப்பு.

மிஞ்சிப் போனால் அழத் தோன்றுகிறது, எதுவும் செய்யத் தெரியாத கையாலாகாத் தனத்துடன்.

தத்...கூண்டுக்கிளி மாதிரி இப்படியும் வாழவேண்டுமா?

மனசு இருந்த இருப்பில் மதியம் சாப்பிடக்கூட சுதாவுக்குப் பிடிக்கவில்லை.

கொன்றை மரத்தில் அமர்ந்து உல்லாசமாய் கத்தித் தீர்த்துக் கொண்டிருந்த காக்கைகளுக்கு டப்பாவோடு

சோற்றைக் கவிழ்த்தாள். அலைகள் யாருக்கும் பயப்படாமல் ஆனந்தமாய் குரல் எடுத்து பேசி, சாப்பிட்டு மிச்சமிருப்பதைத் தள்ளி நின்று பார்த்தாள். ஒரு டம்ளர் தண்ணீர் மட்டும் குடித்து விட்டு வகுப்பைப் பார்க்க நடந்து விட்டாள்.

மாலையில் நாலு மணிக்கு கல்லூரி மணி அடித்ததும், மற்றவர்களின் குதியான பேச்சில் கலந்து கொள்ளாமல் தீ கொடுக்கப்பட்ட பொம்மை மாதிரி நடந்து வந்து சாத்திருந்த ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள்.

சினேகிதிகள் இல்லை; இப்படிச் சொல்வது உண்மையான வார்த்தை இல்லை. சினேகத்துடன் பழகுபவள் தானே சினேகிதி? இவள் யாருடன் சினேகத்துடன் பழகுகிறாள்? அவளுக்கு நான் சினேகிதி என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள? யார் வீட்டுக்கும் இவள் போகக் கூடாது யாரும் இவள் வீட்டுக்கும் வரக்கூடாது அப்புறம் இவள் சினேகிதத்தை எவள் விரும்புவாள்? சக மாணவிகள் கூட்டமாய் நின்று நாளை மறுநாள் இரண்டாட் ஆணைக்கட்டிற்குச் செல்லப்போகும் பிக்னிக் போகாத இவள் அந்த பேச்சுக்களில் கலந்து கொண்டால் சிரிக்கமாட்டார்களா?

ரிக்ஷாவில் அமர்ந்திருக்கையில் தன் கோ-ஆப்டெக்ஸ் புடவையையும் சுத்தமாய் வெட்டப்பட்ட நகங்களையும், கழுத்தில் பிடரியைக் கசகசக்க வைத்த சாட்டையாய்த் தொங்கின பின்னலையும் பார்க்கப் பார்க்க நச் நச் சென்று ஆத்திரம் வெடித்தது.

அவளவள் லேட்டஸ்ட் கோட்டா, ஆர்கெண்ஸா புடவை உடுத்தி, காலேஜுக்கு வருகிறாள்.

தான்?

—இது புடவையா? சல்லாத் துணியாட்டம் இல்லே இருக்கு. புடவை உடம்பு மூடறதுக்கு உடுத்தறது; நிறந்து காட்டறதுக்கு இல்லே. ஞாபம் வச்சுக்க.

நீளமாய் வளர்க்கப்பட்டு பாலிஷ் பூசின நகங்கள் என்றால் கதாரைக்குக் கொள்ளைப் பிரியம்.

—நகத்தை ஏன் இத்தனை வளர்த்துகிட்டு இருக்கே சூர்ப்பனகை மாதிரி? வீட்டு குடும்பப் பெண்ணா லட்சணமா இரு.

குடும்பப் பெண், அடக்கம், ஒழுக்கம்.

இலைகளைக் கேட்டுக் கேட்டு புளித்தாகிப் போய் விட்டது.

ஊர் உலகத்தில் இல்லாத பண்பாடு, கட்டுப்பாடு...

பின்னப் பெண்ணுக்குரிய ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகளை எல்லாம் தோண்டிப் புதைத்துவிட்டாலது என்ன குடும்பப் பெண் பட்டம் வேண்டிக் கிடக்கிறது!

வீடு வந்துவிட்டது.

இறங்கி உள்ளே போய் டிபன் வேண்டாம் என்று சொல்லிவிட்டு காபி மட்டும் குடித்தாள்.

அப்பா இப்போதைக்கு வீட்டுக்கு வரமாட்டார்; எட்டரையாகும் திரும்ப— என்ற நினைப்பு திடீரென்று தந்திரத்தைத் தர மொட்டை மாடிக்குப் போய் நின்று கொண்டாள்.

இது நாழிகை தூறிக்கொண்டிருந்த தூறல் நின்று போய் காலடியில் ஈரம் சிலுசிலுத்தது; தென்றல் மந்த ஹாஸமாய் முகத்தை வருடியது.

பெருமூச்சுடன் கைப்பிடியில் சாய்ந்துகொண்டவள் "குட் ஈவினிங்" என்று குரல் கேட்டு வேகமாய்த் திரும்பினாள்.

அவன்தான். அந்தப் பக்கத்து வீட்டு ராஜ்குமார்தான்.

லலுலாலை புஜங்கன், அடர்த்தியான மீசையுடன் கலர்ஃபுல்லாய்ச் சிரித்தான்.

இவன் பக்கத்து வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று மாசங்கள் ஆகியிருக்கும். ஏதோ மருந்து கம்பெனியில் மெடிகல் ரெப்ரஸண்டேடிவ்.

மாடி ஒற்றை அறையை இப்படி தனி ஆளுக்கு வாடகைக்கு விட்டுவிட்டதில் அந்த வீட்டுக்காரர்மேல் மனோகருக்கு அளவற்ற கோபம்...

'கண்ட கழிசடைங்க எல்லாம் பக்கத்து வீட்டுல குடி வந்திருக்கு. நீ கண்ல படாம அடக்கமா இருந்துக்க'— என்று இவளைக் கண்டித்து வைக்க முடிந்ததே தவிர ராஜ்குமாரை அங்கிருந்து இளைப்ப இயலவில்லை.

ராஜ்குமார் வெகு கெட்டிக்காரன்.

முதல் நாளே மனோகரின் கடுவன் பூனை குணத்தைப் புரிந்துகொண்டு அவனிடமிருந்து எட்டவே இருந்தான்.

ஆனால் தனிமை கிடைத்தால், சரியான சமயம் வாய்த்தால், கதாவைப் பார்த்து சிரிக்கவும், ஹலோ சொல்லவும் "பூவங்க நீங்க. ஹாஸ்டல் வார்டன்கூட உங்கப்பா மாதிரி கண்டிப்பா இருக்கமாட்டார்ங்க" என்று அலுத்துப்பட்டவும் தவறவில்லை.

நிலைமை புரிந்து பரிதாபப்படும் ஒரே ஆத்மா என்ற காரணத்தால் கதா அந்தப் பரிவான வார்த்தைகளுக்கு அல்லப்போது செவி சாய்ப்பது வழக்கம்தான்.

"அப்பா வீட்டுலே இல்லியா, அதான் தைரியமா மாடிக்கு வந்து நிக்கிறீங்களா?"

பேசியவனை நிமிர்ந்து பார்க்கத் துணிச்சல் இல்லாமல் கதா தலை குனிந்து நின்றாள்.

"தேக்கேறன்னு தப்பா எடுக்காதீங்க தேத்து காலைல உங்க வீட்டுலே கத்தல் பெரிசா இருந்திச்சே."

எஸ். முதல் நாள் மனோகர் கோபமாய் கத்தினது நிஜம்தான்.

இன்று கதா மனசு வெகுவாக சுத்து போயிருப்பதற்கு அதையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்.

"என் க்ளாஸ்மேட் ராமலக்ஷ்மிக்கு இன்னிக்குப் பிறந்தநாள்."

"அதனால?"

"க்ளாஸ் பூராவையும் சாயங்காலம் நாலு மணிக்கு அவ வீட்டுக்குக் கூப்பிடிருக்கா"

"அதனால?"

"வந்து... நானும் போலாமா..."

மனோகர் படித்துக் கொண்டிருந்த திருவாசகத்தைப் பட்டென்று மூடினான்.

"இந்த மாதிரி பார்த்தே பார்ட்டி அது-இதுனு போறது எனக்குப் பிடிக்காதது தெரியுமில்லே."

"இல்லே. அவ..."

பேசவிடாமல் மனோகர் கத்தினான்.

"எவளாயிருந்தாலும் சரி, நீ போகக் கூடாது; இதெல்லாம் எனக்குச் சுத்தமா பிடிக்காதுனு புரிஞ்சும் தைரியமா முன்னால நின்னு கேக்கறியே. ம்? கொஞ்ச நாளாவே உன் போக்கு நல்லாயில்லே கதா. சரியா படிக்கறதில்லை, பஜனைகளிலோ ஏனோ தானோனு கலந்துக்குறே. ஏதாவது சொன்னா முகத்தைத் தூக்கி வைச்சிகிட்டு சாப்பிடாம படுத்துடுறே என்ன இதெல்லாம்; நா கவனிக்கலைனு நினைக்கிறியா?"

"..."

"ஏதாவது கேட்டா இடிச்ச புளி மாதிரி நின்னிட்டு இன்னொரு தரம் பார்ட்டி, கீர்ட்டினு கேட்டுகிட்டு வந்தா நா ரொம்ப பொல்லாதவனா ஆயிடுவேன். புரியுதா? உள்ளே போ."

இனிமேல்தான் பொல்லாதவனா மாற வேண்டுமா?

இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

கண்களில் துளிர்த்த நீரை மறைக்க வேண்டி அவசர மாய் திரும்பித் தன் அறைக்கு வந்து விட்டாளும், இப் போது ராஜ்குமார் பரிவுடன் விரலையும் அடக்கிய கண்ணீர் மீண்டும் துளிர்த்தது.

"ஸ் என்னங்க நீங்க. கேட்டது தப்புனா மன்னிச் சிடுங்க. ப்ளீஸ் சுதா. சாதாரண விஷயத்துக்கு நாலு வீட்டுக்கு கேட்குற மாதிரி கத்தினாரேனு உங்களுக்கு ஆறுதல் சொல்லத்தாங்க பேச்சை எடுத்தேன். ஸாரிங்க."

யாருமே தன்னிடம் காட்டத் துணியாத கரிசனத் துடன் ராஜ்குமார் பேசுவதாகத் தோன்ற, அன்று முதல் முறையாய், "எல்லாம் என் தலைவிதிங்க யாரைக் குத்தம் சொல்லி என்ன பிரயோஜனம்" என்று சின்னதாக சுதா புலம்பினாள்.

இந்தப் புலம்பல் அவர்களிடையே ஒரு நெருக்கமான பந்தம் உருவாக விதையாய் இருக்க; அடுத்து வந்த நாட் களில் அந்தப் பிணைப்பு, யார் கண்ணிலும், கவனத்திலும் படாமல் மளமளவென்று வளர்ந்தது.

ராஜ்குமார் கேட்டிக்காரன் மட்டுமில்லை, எம காதகன்கூட.

ரங்கசாமிக்கு ஒன்று இரண்டு என்று கையில் கொடுத்து தாஜா பண்ணி விட்டதில், கல்லூரிக்குப் போகும், வரும் வழியில் சில நிமிஷங்கள் ரிக்ஷாவை மறைவான இடத்தில் நிறுத்தி, அவர்கள் மனம் விட்டுப்

பேசிக் கொள்ள வாய்ப்புக் கொடுக்க, ரொம்ப சீக்கிரமே மிகவும் சினேகிதமாக இருந்த நட்பு, காதலாக மாறி ஆணிவேர் விட்டுக் கொண்டு ஸ்திரப்பட்டுப் போனது.

9

"ஈவ்னிங் நிர்மலாவும் பண்ணி இருக்கீங்க சுதா."

"..."

"தாழி ஆச்சி, மனதிலே இருக்குறதை மறைத்து பேசிடு. சம்மதம்னா சரி, இல்லைன்னா தயங்காம சொல்லிடு."

"ப... பயமா இருக்கு ராஜ்."

"என் மேல நம்பிக்கை இல்லியா?"

"சே, பெரிய வார்த்தைகளை ஏன் சொல்றீங்க? நம்பிக்கை இல்லாமலா இத்தனை பழகினேன்?"

"அப்ப ஒரு முடிவுக்கு வந்திட வேண்டியதுதானே?"

சுதா நகத்தைக் கடித்தாள்.

யோசனையுடன் கை குட்டையின் நுனியைத் திருகினாள்.

"வானம் இருட்டிகிட்டு வருது. ஐயா ஆபீஸ்லேந்து வந்திட்டார்னா கஷ்டம். புறப்படலாமா, பாப்பா?"

ரங்கசாமி எட்டிப் பார்த்துக் கேட்க, சுதா எழுந்து நின்றாள்.

"பதில் சொல்லாமப் போனா?"

"யோசிக்க டைம் கொடுங்க ராஜ்"

"இரண்டு மாசமா யோசிக்குறது பத்தாதா?"

"ப்ளீஸ் ராஜ்."

ராஜ்குமார் தோளைக் குலுக்கினான்.

''உன் இஷ்டம். நா நாளைக்குக் காலை டிருக்குப் புறப்படறேன். நாலைஞ்சி நாளாகும் திரும்ப. வந்தா மூட்டை கட்டிகிட்டு புறப்படதான் டைம் இருக்கும். அப்புறம் நீ யோசிச்சிகிட்டே இருந்தா, நாம நண்பர்களாகத்தான் பிரியணும்.''

பதில் கூறாமல் சுதா ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தாள்.

''வரேன் ராஜ். வெள்ளிக்கிழமை பார்க்கலாம்.''

ரிக்ஷா நகர்ந்தது.

தலையைத் திருப்பி, கண்களிலிருந்து ராஜ்குமார் மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தவளுக்கு ஒன்றும் தெளிவாக இல்லாத மாதிரி இருக்க அழ வேண்டும்போல இருந்தது.

ராஜ்குமாருக்குச் சென்னையில் வேறு வேலை கிடைத்திருக்கிறது. இந்த வேலையை விட்டுவிட்டு அடுத்த வாரம் புறப்படுகிறான்

'நான் போகும்போது என்னோடு வந்துவிடு' என்று பத்து நாளாய்க் கெஞ்சுகிறான்; 'ராஜாத்தி மாதிரி வைத்து போற்றுகிறேன். உன் அடிமை விலங்குகளை உடைத்துவிட்டு புறப்பட்டு விடு' என்று விடாமல் எடுத்துரைக்கிறான்.

அப்பாவை விட்டு, அவர் அறியாமல் கிளம்ப வேண்டும் என்பதை நினைக்கையில், பயத்தில் அடிவயிறு முடிச்சு போட்டுக் கொள்கிறது.

ஆனாலும்?

ராஜ்குமார்...

அவனோடு சுதந்திரமாக வாழக் கூடிய வாழ்க்கை. இவற்றைக் கற்பனை பண்ணிப் பார்க்கும்போது கன்னங்கள் சூடேறுகின்றன; மனசு ராகம் எடுத்துப் பாடுகிறது.

என்ன செய்ய வேண்டும்?

சரியான முடிவை எப்போது எடுப்பது?

எது சரியான முடிவு?

யோசனை மாறாமல் சுதா வீட்டுக்கு வந்தபோது பஜனைக் குழுவினரில் ஓரிருவர் வந்து விட்டிருந்தனர்.

அடாது மழை பெய்தாலும் விடாது நடத்தப்படும் எல்லிற பழமொழி இவர்களுக்கு எத்தனை பொருத்தமானது என்ற எண்ணம் வேறுபாடு மறந்த உடனடியில், தொற்றுவிக்க உள்ளே சென்றாள்.

ஒரு நிமிடத்தில் மனோகர் அலம் அலைக்குள் வந்தான்.

''ஏன் இல்வளவு தாமதி?''

''.....''

''முழிச்சிகிட்டு நிக்காம, முகத்தைக் கழுவி, தலை விளக்கை ஏத்தி ஆகவேண்டியதைப் பாரு. உன்னோடு அப்புறமா பேசிக்கறேன்.''

பஜனைக்கு தேவையானவைகளைக் கலெக்ட் செய்து முடித்த பின் அங்கே கூடத்தில் உட்கார்ந்து அவர்களோடு பாட மனம் இல்லாததால், தன் அறைக்குச் சென்று புத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டாள்.

புஸ்தி பாடத்தில் படிய மறுத்தது.

ராஜ்குமார்...

ராஜ்...

முடிவு எடுக்கும் நேரம் நெருங்கிவிட்டதா?

கடவுளே! எனக்குச் சரியான பாதையைக் காட்டேன்.

பென்சிலைக் கடித்தபடி சுதா உட்கார்ந்திருக்க பஜனை முடிந்து எல்லாரும் வீட்டுக்குப் போனதும்

மனோகர் வாசக் கதவைச் சார்த்திக்கொண்டு அவள் முன் வந்து நின்றான்.

"என்னாச்சி உனக்கு இன்னிக்கு?"

குரலில் காணப்பட்ட கோபம், அவளைத் துள்ளிக் கொண்டு எழுந்து நிற்க வைத்தது.

"கேக்குறது காதுல விழலை? என்ன மேடு வந்திச்சு உனக்கு?"

"ஒ ஒண்ணுமில்லியேப்பா..."

"பஜனைல ஏன் கலந்துக்கலை?"

"ஒரே தலைவலி... அதான்."

"ஓ நேரா! சாயங்காலம் காஜாமலை ரோடுல உன் றிக்ஷா ஒதுக்குப் புறமா நின்னிட்டு இருந்துச்சாமே அங்க ஏன் போனே? ஒதுக்குப் புறமா என்ன செய்திட்டி ருந்தே?"

"அ...அது வந்து..."

"வந்து!"

"கூட்டம் இல்லாம இருக்கும்னு ரங்கசாமி இந்த வழியா வந்தப்ப செயின் சுழண்டுகிட்டது. அதான் ஓரமா நின்னு..."

வாயில் வந்த பொய்யை, தட்டுத்தடுமாறி சொல்வதற் குள் நெற்றியிலும், மேல் உதட்டிலும் வியர்வைத் துளிகள் பொடிப் பொடியாய் எட்டிப் பார்த்தன.

புடவைத் தலைப்பைப் பிடித்திருந்த விரல்கள் நடுங்கின.

"பக்கத்து வீட்டு கறுதலையும் உன் றிக்ஷாகிட்ட நின்னுட்டு இருந்தானாமே! அது ஏன்னு நா தெரிஞ்சிக் கலாமா? எனக்குத் தெரியாம என் பின்னால் என்ன நடக்குது? எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். சொல்லு"

சுதா நிஜமாகவே இப்போது மிரண்டு போனாள். அப்பாவுக்கு எங்கள் சமாசாரம் தெரிந்து விட்டதா? ஐயோ தெய்வமே!

இனி நான் என்ன செய்வேன்?

"வாயில என்ன கொழுக்கட்டையா? பதில் சொல்றது."

மனோகர் திடுதிடுக்க, சுதாவின் கண்களில் நீர் திரண்டது.

"அ... அது... அவரு... அந்தப் பக்கமா வந்தாரா ஏதாச்சும் ஹெல்ப் வேணுமான்னு கேட்டாரு; அவ்வளவு தான்."

பளிச்சென்று மனோகர் கத்தினான்.

"செய்யறதையும் செஞ்சிட்டு பொய் வேற சொல் றியா? என்னை என்ன ஒண்ணும் தெரியாத இடியட்னு நினைச்சிகிட்டு இருக்குறியா? தாறுமாறா ஏதாச்சும் செய்ய நினைச்சே, கொன்னு போட்டுக்கூட தா தயங்க மாட்டேன், ஞாபகம் வைச்சிக்க...ஒரு தரம் பட்ட அவ மானம் போதும்... இன்னொருதரம் படவிட மாட்டேன். ஒழுங்கா இருக்கிறதுனா இரு இல்லேனா நாளைலேந்து காலேஜிக்கே போக வேணாம்...புரியுதா?"

கோபத்துடன் விழிகளை உருட்டி கத்திவிட்டு, திரும்பி இரண்டடி வைத்தவன் நின்றான்.

"நாளைக்கு மொத வேலையா—என்ன ஏதுனு விசாரிக்கப் போறேன். அந்த ரங்கசாமி பிழைச்சி வரட் டும்; உண்டு இல்லேனு ஆக்கி, விவரத்தைத் தெரிஞ்சிகிட்டு அப்புறமா உன்னை கவனிக்கிறேன். அதுவரைக்கும் வீட்டை விட்டு நகரு, சொல்றேன்..."

மனோகர் கூடத்துக்குப் போனதும் தலைப்பாகு வாயைப் பொத்திக் கொண்டு சுதா சப்தமில்லாமல் தல நிமிஷங்களுக்கு அழுதாள்.

"அப்புறமா அழலாம். வந்து சோத்த தின்னிட்டு போ. சமையல்கார அம்மாளுக்கு வேலையாவது ஆகும்."

வாசப் பக்கத்திலிருந்து மனோகரின் குரல் வர, அவசரமாய் பாத்ரூமுக்குச் சென்று முகம் கழுவி, பொட்டை சீர் பண்ணி, சாப்பிட உட்கார்ந்தாள்.

ஒரு கவளம் உள்ளே முழுசாய் இறங்க விடாமல், பக்கத்தில் அமர்ந்திருந்த மனோகர் மொணை மொணை லென்று ஏதேதோ திட்டிக் கொண்டே இருந்தான்.

சாப்பிட்டு முடிந்ததும் "காலைல நா அஞ்சுக்கு எழுந்திரிச்சி வெளியிலே போயிடுவேன். சங்கரன் வீட்டுலே இருமுடி கட்டறாங்க. சுதா நானைக்குக் காலேஜிக்குப் போக மாட்டா. ரங்கசாமி வர்றதுக்குள்ளே நா வந்திடறேன். எனக்கு முன்னால அவன் வந்திட்டான்னா கூட, அவனண்ட இவ எந்தப் பேச்சும் பேசாம பார்த்துக்கங்க. நா வந்து பாக்கிய பேசிக்கறேன்" என்று வேண்டுமென்றே இவளை வைத்துக் கொண்டு சமையல்கார அம்மாவிடம் சொல்ல, அடங்கி இருந்த சுதாவின் துக்கம் மீண்டும் பீரிட்டது.

சமையல்கார அம்மாவை விட்டு கண்காணிக்கச் சொல்லும் அளவுக்கு நிலைமை வளர்ந்து விட்டதே என்ற உறுத்தல் வேதனையை அதிகமாக்க தன் அறைக்குச் சென்று, கதவைத் தாழிட்டுக் கொண்டு ரொம்ப நேரத்துக்கு அழுது தீர்த்தாள். இனி நான் என்ன பண்ணுவேன் என்று மாய்ந்து போனாள். அப்புறம் ஒரு நிதானத்துக்கு வந்து நிறைய யோசனை பண்ணினாள்.

விடிய விடிய சிந்தித்ததில் இனியும் இந்த மனுஷனின் அடக்கு முறையைத் தாங்கிக் கொள்வது இயலாத காரியம் என்கிற கசப்பான உறுதி மட்டும் தனித்து நிற்க, சுதா ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்

அப்பா குளித்து வெளியில் புறப்படும் வரை படுத்துக் கிடந்தவள் எழுந்து பெட்டியில் தனக்குத் தேவையான உடைகளை அடுக்கினாள். சத்தம் செய்யாமல் முன் அறைக்குச் சென்று இருப்பு அலமாரியிலிருந்து தன்னு டைய நகைகளில் ஒரு செலவுக்கு வைத்திருந்து தன்னு இருந்த ஆயிரத்து சில்லரையும் எடுத்துக் கொண்டாள்.

பாத்ரூம் விளக்கைப் போட்டுக் கொண்டு ஒரு பேப்பரில் "அப்பா—நான் போகிறேன்... பதிலுக்கு வருஷக்கள் முன் உங்களை விட்டு என்னை என்றவள் ஓடிப்போக, நீங்கள் அவளுக்குக் கொடுத்த அந்த இடம் காரணம் என்று பாட்டி அவ்வப்போது புலம்பக் கேட்டிருக்கிறேன். இன்று நான் உங்களை விட்டு விலகுவதற்கு என்னிடம் பிரயோகிக்கும் அந்த கண்டிப்புதான் காரணம் என்பதை நீங்கள் உணர வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்கிற இருவர் விஷயத்திலும் நீங்கள் அளித்த அன்பு கண்டிப்பு ஓவர் டோஸாகி விட்டது. ஜூம்மாரி, கோபித்துக் கொள்ளுவதில் பிரயோஜனம் இல்லை. இன்று எனக்குப் பிறந்த நாள். நான் மேஜராகி விட்டேன். இனி சட்டம் எனக்கு பாதுகாப்பு கொடுக்கும். வருகிறேன், சுதா..." என்று எழுதி ஒரு கவரில் போட்டு பூஜை அலமாரியில் வைத்தாள்

ஆறுமணிக்குச் சமையல்கார அம்மாள் குளிக்கப் போனதும் பெட்டியும், கையுமாய் வாசலுக்கு வந்து, படிகளில் இறங்கி, பக்கத்து வீட்டை அடைந்து, மாடிப் படி ஏறி, கதவைத் தட்டி இவளைப் பார்த்து வியப்புடன் கண்களை விரித்து பிறகு சட்டென்று நிலைமையைப் புரிந்து, முன்னால் சாய்ந்து சந்தோஷத்துடன் ராஜ் குமார் சுதாவை அணைத்துக் கொள்ள—

இது நாழிகை மப்பும் மந்தாரமுமாய் இருந்த வானத்தின் கிழக்குப் பகுதியைக் கிழித்துக்கொண்டு இளஞ்சிவப்பில் சூரியன் வெளிப்படத் துவங்கினான்.

❋

காரணங்கள்

1

அலாரம் அடிக்கத் துவங்கிய உடனே குழந்தையை அந்த சப்தம் எழுப்பாதிருக்க வேண்டி சட்டென்று அதன் உச்சந் தலையில் தட்டி நிறுத்தினை மாதவன், ஒரு நிமிஷம் அப்படியே படுத்து மனைவி எழுந்திருக்கிறாளா என்று பார்த்து விட்டு, அவள் அசைந்து கொடுக்காமல் இருக்க, அருகில் நகர்ந்து தணிந்த குரலில் ''உஷா'' என்றான்.

''.....''

''உஷா''

''ம்ம்?''

''அலாரம் வைச்சிருந்தியா?''

''ம்''

''அடிச்சிடுச்சு எழுந்திரும்மா...''

''ம்''

உறக்கம் கலையாத நிலையில் எல்லாவற்றுக்கும் அவள் முனக, தோளைப் பற்றி மாதவன் லேசாக உலுக்கினான்.

''ஹேய்... உஷ்ஷ்... ஷா...''

''என்ன மாது?''

''எழுந்திரும்மா... எதுக்கு அலாரம் வைச்சிருந்தே?''

கிழக்கு உஷா கண்களைத் திறந்து பார்த்தாள்.

''டெஸ்ட் பேப்பர்ஸ் திருத்தணும். கொஞ்சம் முன்னால் எழுந்து தேவலைன்னு அலாரம் வைச்சேன். அதுக்குள்ளியா மணி அஞ்சாயிடுச்சு! ஓ! நோ...''

''அஞ்சடிச்சு பத்து நிமிஷம்கூட ஆயாச்சு.''

''ச்சே திரும்பிப் பார்த்தா விடிஞ்சிடுது. ராத்திரி பூரா சரியான தூக்கமே இல்லே. குழந்தை அழுதுட்டே இருந்தா. கண் விழிச்சதுல ஒரேடியா தலை வலிக்குது.''

மாதவன் கரிசனத்துடன் மனைவியை ஏறிட்டான்.

''டெஸ்ட் பேப்பர்ஸ் என்ன சப்ஜெக்ட்?''

''ஃபர்ஸ்ட் இயர்—இன்வர்டிப்ரேட்டா.''

போர்வையை உதறிவிட்டு மாதவன் எழுந்தான்.

''அப்ப சரி, எனக்குத் துக்கம் கலைஞ்சிடுச்சி. நா திருத்தி வைக்கிறேனே.''

''எதுக்கு உங்களுக்கு வீண் சிரமம் மாது?''

''ஒரு மண்ணாங்கட்டியும் இல்லே. நீ இன்னும் அரை மணி தூங்கு.''

அவளைப் பார்த்து புன்னகைத்தவன், குனிந்து உச்சந் தலையில் குட்டியாக முத்தமொன்றைத் தந்துவிட்டு பாத்ரூமுக்குப் போனான்.

பல் தேய்த்து, முகம் கழுவின பின், சப்தம் போடாமல் கதவைத் திறந்து மூடிக்கொண்டு ஹாலுக்கு வந்தான்.

அலமாரியில் உஷா கொண்டு வைத்திருந்த பேப்பர்கள் இருக்க, அவைகளுடன் ஒரு சிகப்பு பால்பாயிண்ட் பென்னையும் எடுத்துக்கொண்டு மேஜைமுன் உட்கார்ந்து திருத்த ஆரம்பித்தான்.

ஆறு அடிக்க சில நிமிஷங்கள் இருக்கையில் பால்காரன் குரல் கொடுத்ததும், இனியும் படுத்திருப்பது நடக்காத விஷயம் என்று உஷா எழுந்து ஸோஸ் கோட் அணிந்து வெளியில் வந்தான்.

ஒரு லிட்டர் பாலை வாங்கி, அது அடுப்பில் காய்ந்த சில நிமிஷங்களில் பல் தேய்க்கப் போனாள்.

குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவினதும் மண்டைக்குள் படித்திருந்த புகை மூட்டம் லேசாகக் குறைந்த மாதிரி தோன்ற கண்ணாடிக்கருகில் குனிந்து எதிரில் தெரிந்த பிம்பத்தை வெறித்தாள்.

ஒ என்று பல்லைக் காட்டி, தேய்ப்பு போதுமா என்று பார்த்தபோது, குழந்தை சிணுங்குவது காதில் விழ, அவசரமாய் இரண்டு வாய் நீரில் கொப்பளித்து விட்டு, அறைக்குள் நுழைந்தாள்.

சின்னத் தொட்டிலில், கொசு வலை போர்த்தப்பட்டு இது தாழிசை உறங்கிய குழந்தை விழித்துக் கொண்டு 'ங்கா' என்றது. கொசு வலையை அகற்றி, குனிந்தாள்.

குழந்தைக்கடியில் கை வைத்துப் பார்த்தாள். தொட்ட இடம் ஜில்லென்று இருக்க, நாப்கினை அவிழ்த்து ஒரு பக்கமாய் இருந்த பிளாஸ்டிக் வாளியில் எறிந்தாள்.

அடுப்பில் வைத்த பால் பொங்கிவிடுமே என்ற எண்ணத்துடன் கையில் குழந்தையை எடுத்துக்கொண்டு கூடத்தில் அமர்ந்திருந்த கணவனைத் தாண்டி சமையல் அறைக்குள் சென்றாள்

கொதி வரத் துவங்கிய பாலைத் தணித்தவள், இன்னொரு அடுப்பில் அலுமினிய ஸாஸ்பேனில் அரை டம்ளர் தண்ணீரை வைத்தாள்.

அழமுற்பட்ட குழந்தையை இடது கையால் குலுக்கிக் கொண்டே, இரு டம்ளர் டபராக்களை எடுத்தாள். ஒவ்வொன்றிலும் ஒன்றரை ஸ்பூன் சர்க்கரை, ஒரு ஸ்பூன் ப்ரு போட்டு, கொதித்துவிட்ட வெந்நீரை கொஞ்சம் மணத்திக் கலக்கி, காய்ந்த பாலில் முக்கால் டம்ளர் விட்டு காப்பி தயாரித்தாள்.

அறை வாசலுக்குச் சென்று "காபி ரெடி—இங்க வறீங்களா—இல்லே, அங்க கொண்டு வரட்டுமா?" என்று குரல் கொடுத்தாள்.

கைக் காரியத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு மாதவன் வரவும், சமையல் அறையிலேயே ஒரு பக்கமாய்ப் போட்டிருந்த சின்ன டேபிளில் காபி டம்ளர்களை வைத்துக் கொண்டு, இருவரும் தாற்காலிகமாய் உட்கார்ந்தார்கள்.

"பாப்பாக்குட்டி எழுந்திட்டாளா?"

"இன்னும் கொஞ்சம் தூங்கியிருந்தா வேலை மாதிரி ஆகும். அதுக்குள்ள முந்திரிக்கொட்டையாட்டம் எழுந்திட்டா."

"ஏன் அழறா? பசியா?"

"ம்... பால் கரைக்கணும்."

"கொடு நா வைச்சிருக்கேன். நீ பால் கரைச்சி பாட்டில்ல போட்டு எடுத்துட்டு வா."

"முதல்ல காபிய குடிங்க; ஆறிடப் போவுது. இரண்டு நிமிஷத்துல ஒண்ணும் ஆகாது."

இடது கையில் மகளை இடுத்தி, கச்சிதமாய் உஷா குலுக்க, குழந்தை கொஞ்சம் அடங்கிப் போனாள்.

"தலைவலி எப்படி இருக்கு உஷா?"

"ஜஸ்ட் த ஸேம்."

"காபியோட மாத்திரை வேணா போட்டுக்கயேன்"

அவள் பேசாமல் இருக்க, மாதவன் எழுந்து போய் அலமாரியிலிருந்து ஒரு ஸாரிடானை எடுத்து வந்து பிரித்து நீட்டினான்.

மாத்திரையைக் காபியுடன் விழுங்கியவள் 'தாங்க்ஸ் டாலிங்' என்றாள்.

குழந்தையின் சிணுங்கல் மீண்டும் பெரிசாயிற்று.

"பசிதான். ஒரு நிமிஷம் வைச்சிக்கறீங்களா?"

"கொண்டா என் ராஜாத்திக் குட்டி. பட்டுக்குட்டி."

ஆர்வத்துடன் மாதவன் குழந்தையைக் கொஞ்ச அதன் அழுகை அடங்குவதற்குப் பதில் அதிகமாயிற்று.

''ட்ரு ட்ரு ளக் ளக் இங்க பாரு. என்னம்மா? தொப்பை பசிக்குதா? இதோ பால் வருதும்மா. அம்மா பாப்பாக்காக பால் கலக்கறாங்களே, அழாதடா ராஜா. காக்கா பாரு காக்கா. கா... கா...''

ஜன்னலிடம் குழந்தையை எடுத்துச் சென்று வேடிக்கை காட்ட, அதன் அழுகை பெரிசாயிற்றே தவிர குறையவில்லை.

உஷா பால் பவுடரை டம்ளரில் போட்டு, துளி சர்க்கரை, வெந்நீர் விட்டு, கட்டி இல்லாமல் கரைத்தாள். ஆறின வெந்நீரில் கொஞ்சம் ஊற்றி நாலு தரம் தூக்கி ஆற்றி, ஸ்டெரலைஸ் பண்ணி வைத்திருந்த பாட்டிலில் ஒரப்பி நிப்பிளைத் திருகினாள்.

அழும் குழந்தையை கணவனிடமிருந்து வாங்கி, சாய் வானமாய் இடக்கையில் சாய்த்து, பால் தங்கு தடை யில்லாமல் வருகிறதா என்று ஒரு தரம் நிப்பிளை கையால் அழுத்தி பார்த்துவிட்டு, வாயில் பாட்டிலை வைத்தாள்.

அழுகை அடங்காமலேயே சில கணங்களுக்கு சப்பி, பாலின் ருசி கண்டபின் சமாதானமடைந்து வேகமாக குழந்தை குடிக்கத் துவங்கியது.

மாதவன், எழுந்து நின்றான்.

''இன்னும் பத்து பேப்பர் போல பாக்கி இருக்கு... முடிச்சிடறேன். பர்ஸ்ட் இயர் படிக்கிற பசங்க எழுதினதா தெரியலே. பாதிக்கு மேல் வெறும் பேத்தல்''

''ஸாரி மாது என்னால் உங்களுக்குச் சிரமம்.''

''இதெல்லாம் ஒரு சிரமமா? ஆஃப்டர் ஆல் திஸ் ஈஸ் மை ஸப்ஜெக்ட் டூ... நீ கொழந்தை, வீட்டை கவனிக்கற நேரத்துல நா இதைச் செய்யறேன். தட்ஸ் ஆல்''

''எனி வே தாங்க்ஸ் எ லாட்.''

மாதவன் அவளருகில் வந்தான்.

''சும்மா சும்மா தாங்ஸு சொல்றதுக்கு பதிலா, அந்த வாயால இன்னும் உபயோகமா ஏதாவது செய்யலாம்...''

நெருங்கி அதரத்தில் அழுத்தமாக முத்தமிட, உஷா நிரித்துக் கொண்டே அவனைத் தள்ளி விட்டாள்.

''ஹிம் பண்ண நல்ல நேரம் பாத்திங்க குழந்தைக்கு பொரை ஏறிடப் போகுது.''

குனிந்த மாதவன் குழந்தையின் நெற்றியிலும் ஒரு தரம் மென்மையாய் முத்தமிட்டிவிட்டு, சிரிப்பு மாறாத முகத்துடன் கூடத்துக்குப் போனான்.

உஷா குழந்தையை வாட்டமாகச் சரித்தவிட்டுக் கொண்டு, நாற்காலியில் சாய்ந்தாள்.

ஒரு பக்கமாய் நெற்றிப் பொட்டு படபடவென்று துடித்து வலித்தது.

அம்மாவிடமிருந்து அவளுக்குச் சொத்தாக கிடைத்த தில் இந்த மைக்ரேன் தலைவலி முக்கியமானது.

எப்போது வரும் என்று சொல்ல முடியாது. வந்தால் நாலைந்து மணி நேரங்களுக்கு மண்டைக்குள் அட்டகாசம் பண்ணிவிட்டுதான் மறையும். சனியன்.

அலுப்புடன் 'டியர் நியூசன்ஸ்' என்று வாய்விட்டு அரற்றிய உஷாவின் பார்வை சமையல்கட்டு மேடைக்குப் பக்கத்தில் இருந்த தொட்டி முற்றத்தில், இரவு சமையல் பாத்திரங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக நிறைத்துக் கொண்டு கிடந்ததன் மேல் விழுந்தது.

வேலைக்காரி வந்து தண்ணீர் நிற்பதற்குள் அத்தனை யும் தேய்த்து வைத்து விட்டால் தேவலை. இல்லாவிட் டால் பிடித்து வைக்கும் நீரிலிருந்து அனாவசியமாய் இரண்டு பக்கெட் போல எடுக்க வேண்டும்; அல்லது கிணற்றிலிருந்து இழுக்க வேண்டும்.

விழிகளைத் திருப்பி மணிக்கட்டிலிருந்த வாட்சைப் பார்க்க, அது ஆறே முக்கால் என்றது.

வழக்கமாக ஆறேகால்— ஆறரைக்குள் வந்து விடும் தனம் இன்று ஏன் இன்னும் வரவில்லை?

திடுமென, முதல்நாள் மாலை தனம் கோபமாக வீட்டுக்குப் போனது நினைவுக்கு வந்தது.

—அம்பது ரூபா பணம் வேணும்மா...

அசதியாய் கல்லூரியிலிருந்து திரும்பி சூடான டீயுடன் உட்கார்ந்திருந்த உஷாவுக்கு கோபம் வந்தது.

ஏற்கனவே நூத்தி அம்பது ரூபா அட்வான்ஸ் வாங்கி இருக்கே தனம்; இப்ப எதுக்கு அம்பது ரூபா?

—வேணும், செலவு இருக்கு.

—பாங்குல போட்டு வைச்சிருக்கிற மாதிரி அப்பப்ப இப்படி நீ அம்பதைக் கொண்டா, நூறைக் கொண்டான்றது எனக்குப் பிடிக்கலை தனம். இந்த முறை என்கிட்ட பணம் இல்லே. தேதியும் இருபத்தைஞ்சாவது—

இவள் இப்படிப் பேசினை உடன் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு நான் பூரா உழைக்கிறேன், என் அவசர செலவுக்கு பணம் இல்லிங்கன்னா எப்படி? ஒருத் தருக்கொருத்தர் உபகாரமா இருந்தாத்தான் நல்லது. என்று இவளுக்கே புத்தி சொல்லி, இவள் கோபத்தை இன்னும் கிளறி விட்டுவிட்டுத் தனம் போக, அலுவலகத்தி லிருந்து திரும்பிய கணவனிடம் வகையாய் தன் எரிச்சலை உஷா கொட்டித் தீர்த்தாள்.

—சரியான திமிர் பிடிச்ச கழுதை; இவகிட்ட குழந்தைய விட்டுட்டு போறோம். ஏகத்துக்கு அதிகப் பிரசங்கித்தனம் வந்திருக்கு. நம்மை விட்டா வேற ஆள் இல்லேன்ற தைரியம். சனியன்— முதல்ல இவளை ஒழிச்சிக் கட்டிட்டு மறுவேலை பார்த்தா தேவலை போல இருக்கு. நூறு ரூபா சம்பளமும், இரண்டு வேளை சாப்பாடும் போட்டு, வீட்டையே திறந்து விட்டுட்டுப் போறேன் இல்லே, என் இந்த ஆட்டம் ஆட மாட்டா? வேற ஆள் என்னும் நல்லதா பார்த்துவிட்டு வேலை நிறுத்திடணும், அப்படியாவது கணவனிடம் கத்தி விட்டாறும். இப் போது ஏன் இன்னும் வேலைக்காரி வரவில்லை என்ற கவலை எழ, 'மா'து' என்று குரல் கொடுத்தான்.

''எஸ் டியர்?''

''கொஞ்சம் இங்க வாங்களேன்.''

''என்ன?''

''மணி ஏழாகப் போவுது. இன்னும் அந்த திமிர் பிடிச்சவளைக் காணோமே!''

''தனத்தை சொல்றியா? ம்? தேர்ந்து அவகிட்ட ரொம்ப அத்திட்டியா?''

''உங்ககிட்டதான் கத்தினேன், அவகிட்ட பணம் இல்லேலு சொன்னேன்; அவ்வளவுதான்.''

''தென், வொய் ஹாஸ்ண்ட் ஷி கம்?''

''தெரியலையே! பணம் கொடுக்கலைனு கோபமா இருக்குமா?''—

மாதவன் தோளைக் குலுக்கி, தெரியாது என்று தலை ஆட்டினான்!

பாதி பாலை குடித்து விட்டு தூங்கிப் போய்விட்ட மகளை உஷா தொட்டிலில் கிடத்திவிட்டு வந்தாள்.

வராந்தாவுக்குச் சென்று தெருமுனை வரை பார்வையை விசிப் பார்த்தாள்.

ம் ஹூம் கண்ணுக்கு எட்டிய தூரம் தனத்தைக் காணோம்.

இனியும் அவளுக்காகக் காத்திருப்பது கண்டம் என்று தோன்ற, உள்ளே வந்து பிளாஸ்டிக் கிண்ணத்தில் ஒரு ஸ்பூன் தூள் சோப்பைப் போட்டு, தேங்காய் நாரில் முக்கி, சுழாயைத் திருப்பி விட்டுக் கொண்டு பாத்திரங் களைத் தேய்க்க முற்பட்டாள்.

"தா வேணா ஹெல்ப் பண்ணட்டுமா டாலிக்?"

"வேணாம்மாது. தண்ணி தெக்கறத்துக்கு முன்னால குளிச்சிட்டிங்கன்னா துணிகளை சோப்புல ஊற வைத்திடுவேன்."

பேப்பர்களை திருத்தி முடித்து, அலைகளை ரப்பர் பேண்ட் போட்டு கட்டி, ஓரமாக வைத்துவிட்டு மாதவன் குளிக்கப் போனான்.

பெரிய ட்ரம்களில் நீர் நிறைத்து வைத்து, குளித்து உடை உடுத்து வெளியில் வந்த போது உஷா காய்கறி களை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

சாதாரணமாக, பத்துத் தேய்ப்பது, வீட்டைச் சுத்தம் பண்ணுவது, துணி தோய்ப்பது, சமையலில் உதவி செய்வது எல்லாம் தனத்தின் வேலைகள் தான்.

நரத் தலையை துவட்டாமல் 'உஷா, என் துண்டு' என்று ஏதோ சொல்ல வந்த மாதவன், புருவங்களை சுருக்கிக் கொண்டு நின்றான்.

"இப்ப காபியெல்லாம் நறுக்கிவிட்டு ஏன் ஸ்ரமப் படறே உஷா?"

"நாழி ஆச்சே மாது? கையிலே எடுத்திட்டுப் போக சாப்பாடு தயாராக வேணாமா?"—

"ஒரு நாளைக்கு கான்டீன்ல பாத்துக்கறது. தலை வலியோட எதுக்காக வேலைகளை இழுத்து விட்டுக் கறே?"—

உஷா குக்கரில் பருப்பும், அரிசியும் களைந்து வைத்தாள்.

"இந்த மாதிரி ஒரு ராங்கிக்காரிய வச்சுக்கிட்டு கஷ்டப் படணும்னு நம்ம தலைல எழுதியிருக்கு பாருங்க. ஒருத்தொருத்தர் வீட்டுல பத்து ரூவா, இருபது ரூபா மட்டும் சம்பளம் கொடுத்திட்டு, முழுசுக ஒடிய வேலை வாங்கறாங்க. நமக்கு அந்த சாமர்த்தியம் இல்லே. நாறு

ரூபாயும், கணக்கில்லாம சாமானும் கொடுத்தும் கூட வாயத் திறக்க வழியில்லே. ச்சே... டல்லடிக்கு."

"பக்கத்து வீட்டம்மாகிட்ட சொல்லி வேற வாராவது தள்ளு ஜூனா பாரேன்."

"கேட்டுப் பாத்தாச்சு. நான் ஸ்ரா இருக்க ஒத்தியும் தயார் இல்லே. காலைல வந்து வேலைகளை கவனித் திட்டு மத்தியானம் வீட்டுக்குப் போயிடு, திருப சாயங் காலம் வா—ன்னு சொல்லறா. நீரு பேர் வர, ஒடி, குழந்தையோட பொறுப்பா இருக்க வேண்டி இருக்கே! அதான், தனம் அந்தனை கொண்டாட்டமா இருக்கறா. நிலைனை நிறுத்தி தொலைக்க நமக்கு வேளை வரலை பாருங்க. ஐம் ரியலி டிஸ்டெண்ட் ஆன் லார் அண்ட் ஸிநோஸ் தட்."

புளியைக் கரைத்து சட்டியில் விடுகையில் விளிப்பு கையில் பட, சுட்டுக் கொண்ட விரல்களை உதறி வாயில் வைத்த உஷாவுக்கு லலிதாவும், ஸரிதாவும் கண்கள் கலங்கிப் போயின.

"ச்சே. எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை மாது. ஒரு நிமிஷம் ரிலாக்ஸ் பண்ண முடியாம மெஷின் மாதிரி என்ன வாழ்க்கைனு சலிப்பா இருக்கு."

பேசியவளின் தோளை ஆதரத்துடன் மாதவன் அணைத்துக் கொண்டான்.

"ஈஸி ஈஸி. சின்ன விஷயத்துக்காக அப்ஸெட் ஆறது நல்லதில்லே உஷா..."

"நீங்க சொல்லிட்டீங்க சின்ன விஷயம்னு. ஒரு நாளைப் போல ஏதாவது பிரச்சனை தாக்குப்பிடிக்கறது நான்தானே இவகிட்ட கோபமா இரண்டு வார்த்தை பேசக் கூட எனக்கு வழி இல்லே என் மேல வர்ற ஆத்திரத்தை, குழந்தைகிட்ட காட்டிடுவாளோனு பயமா இருக்கு."

ரசத்தில் பொடிவைப் போடவும் அது புஸ்ஸென்று பொங்கியது.

"மணி எட்டு உஷா. நீ குளிக்கலியா?"—

"நா குளிக்கணும் குழந்தைய குளிப்பாட்டணும். இந்த சனியன் பிடிச்சவ வந்து தொலைச்சாதானே?"

மீசையை வருடிக் கொண்டு மாதவன் கேட்டான்.

"ஸப்போஸ் அவ இன்னிக்கு வரலைனா?"—

உஷா கண்களை அகட்டி அவனை ஏறிட்டாள்.

"தான் காலேஜுக்குப் போக முடியாது. பிரிண்ஸ் கத்தினாலும் பரவாயில்லேனு லீவு போட வேண்டியது தான். வாட் எல்ஸ் கேன் ஐ டு?"—

"நா சொல்லறதைக் கேப்பியா? தனம் வராளோ, இல்லையோ, இன்னிக்கு நீ எதுக்கும் லீவு போட்டுடேன், யு ஆர் நாட் வெல், ரெஸ்ட் எடுத்த மாதிரியும் இருக்கும், என்ன டாலிங்?"

உஷா பதில் பேசாமல் ரசத்தை தாளித்தாள்.

"அத்த மிடில்ட் பேப்பர்ஸை உங்க பிரின்ஸிபிட்ட நானே கொடுத்திட்டு, யு ஆர் ஜஸ்ட் லிவ்வு சொல்லிட்டேன். அவங்க பூரிஞ்சிப்பாங்க... குளிச்சு, குழந்தைய கவனிச்சி, சாப்பிட்டு, மத்தியானம் படுத்து நல்லா தூங்கும்மா, யு வில் ஃபீல் ஃபிட்டர்."

எட்டரை வரையிலும் தனம் வராமல் போக, மாதவன் சொன்னதுதான் அன்று நடந்தது.

மதியம் உறங்கி எழுந்து, காபி சாப்பிட்டதும், கொஞ்சம் தெளிந்து போனவனாய் இந்த மாதிரி வீட்டையும் குழந்தையையும் அல்லாட விடுவதும், அடிக்கடி லீவு எடுப்பதும் நடை முறைக்கு ஒவ்வாத விஷயம் என்பது புரிய இதற்கு எப்படி தீர்வு காணலாம் என்று அவள் யோசித்தது போலவே, பகல் பூராவும் மாதவனும் சிந்தித்

திருக்கிறான் என்பது, அலுவலகத்திலிருந்து திரும்பி, காபி, டிபன் சாப்பிட்ட நிமிஷத்தில் "உங்கம்மாவ இங்க வரவழைச்சிட்டா என்ன உஷா? வாரக் கணியா காலே இருக்கார்கு? இங்க வந்திட்டா வீட்டுக்குப் போறுப்பா பெரியவங்க இருக்கார்களே. தாம தீமமிதா இருக்கலாமே. அவங்களுக்கும் வயசான காலத்திலே தாம தனைவா இருப்போம்" என்று போது தெரிந்தது.

2

உஷாவுக்கும், மாதவனுக்கும் நடந்தது பெரியவர் களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் அல்ல.

காதல் திருமணம்.

அவளும், அவனும் எம்.எஸ்.ஸி. ஐ ஒன்றாக பிரஸி டென்ஸியில் படித்தபோது கண்ணும், மனசும் கலந்து மலர்ந்த காதல்.

உஷா அவனைப் பெற்றவர்களுக்கு ஒரே பெண்.

காட்பாடியில் பக்கீல் குமாஸ்தாவாக இருந்த உஷாவின் தந்தை, மஞ்சள் காமாலை வந்து, கவனிக்காமல் இருந்து, முற்றவிட்டு அதற்கு தானே பலியான போது உஷா எம்.எஸ்.ஸி. முதல் வருஷத்தில் இருந்தாள்.

அப்போதே அவளுக்கும் மாதவனுக்கும் இடையில் நமட்டுச் சிரிப்பும், கிளுகிளு பார்வையும் தோன்றி விட்டது உண்மை தான் என்றாலும், டிகிரி வாங்கும் வரை

இரண்டு பேரும் மனசை அதிகம் பரபரக்க விடாமல், சமர்த்தான நண்பர்களாக மட்டும் இருந்தது நிஜம்.

பட்டம் வாங்கின கையோடு, மேலே படிக்க வசதியில்லாதாலும் உபரி வருமானம் உதவியாக இருக்கும் என்று நினைத்ததாலும்; உள்ளூர்ப் பெண்கள் கல்லூரி ஒன்றில் டெமான்ஸ்ட்ரேடர் வேலை கிடைத்தபோது அதை சந்தோஷத்துடன் உஷா ஒப்புக்கொள்ள — மாதவன் மட்டும் பி.எச்.டி. செய்தான்.

இந்தச் சமயத்தில் தான் தைரியமாக ''ஐ லவ் யூ உஷா'' என்று அழுத்தந் திருத்தமாக மாதவன் கூறமுற்பட, ''ஐ ட்டூ மாது'' என்று தயங்காமல் பதில் சொன்னாள்.

''உங்க வீட்டுலே இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிப்பாங்களா உஷா? நாம ரெண்டு பேரும் வேற வேற ஜாதி மாச்சே!''

''எங்கம்மாவுக்கு இருக்கறது நா ஒருத்தி. நல்ல பையன் நல்ல குடும்பம்னு தெரிஞ்சிதுன்னா கலாட்டா பண்ணாம சம்மதிச்சிடுவாங்கன்ற நம்பிக்கை இருக்கு. வாட் அபௌட் யுவர் பீபிள்?''—

மாதவன் புன்னகைத்தான்.

''நாலு வருஷம் முன்னாலேன்னா ரொம்ப கஷ்டம். ஆனா இப்ப அப்படி இல்லே. போன வருஷம் எங்க பெரியப்பாவோட மகன் ஹரிந்திக்காரிய கட்டிகிட்டான். நல்ல வசதியான இடம் எல்லோரும் முணுமுணுத்தப்போ 'அதனால என்ன? நல்ல பெண்ணா இருந்தா சரி'ன்னு எங்கப்பா அடிச்சு பேசி, கல்யாணத்துக்கும் போயிட்டு வந்தார். அந்த தைரியம்தான்...

மாதவன் டாக்டரேட் பட்டம் வாங்கி ஒரு வேலையில் அமர்ந்த பிறகு, தங்கள் காதல் குறித்து பெரியவர்களிடம் பேசலாம் என்று தீர்மானித்த இரவில் அந்த நாலு உருவங்களும் வெளியில் அதிகம் தெரியாதபடி சன்னமாய்க் காதலை வளர்த்துக் கொண்டார்கள்.

டிகிரி வாங்கின கையோடு வேளச்சேரியில் இருந்த திருவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராக ஆயிரத்து இருநூற்று சம்பளத்தில் மாதவனுக்கு வேலை அமைந்ததும் தம் தம் வீட்டில் திட்டமிட்டபடி பேச்சை எடுத்தார்கள்.

எதிர்பார்த்தபடியே உஷாவின் அம்மா பச்சைக் கொடியை உடனே காட்டி விட்டாள்.

படித்த மாப்பிள்ளை, வசதியான குடும்பம், கண்ணுக்கு நன்றாக இருக்கிறான், வலிய வந்து பெண் கேட்பதால் வரதட்சணை, அது, இது இல்லை— தப்புறம் என்ன? கசக்கிறதா?

ஆனால், மாதவன் வீட்டில் ஒரு மாசம் போல கசமுசாவென்று வாக்குவாதம் எழுவே செய்தது.

போயும் போயும் 'லேட்' குமாஸ்தா பெண்ணா? பெரிய இடங்கள்லே வலிய வராங்களே மாது!

—எம்.எஸ்.ஸி எல்லாம் இந்தக் காலத்துல ஒரு படிப்பா? வொய் கான்ட் யூ வெயிட் ஃபார் எ பெட்டர் கேர்ள், ஐ—ஸே?

—காதல்ன்றதுல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்ல. பாதி காதல் கல்யாணங்கள அந்தரத்துலதான் தொங்குதுங்க.

—என் அண்ணன் மகனுக்கு வடக்கத்திக்காரிய நான் தான் முன்னால நின்று செஞ்சு வைச்சேன். இல்லைன்னு மறுக்கலை. ஆனா, அவ எப்படிப்பட்ட இடம்! ஜமீன் பரம்பரை... ஏகப்பட்ட சொத்து இவனுக்கும் அப்படி ஏதாவது வருதா, சொல்லு...இந்த நிமிஷமே நா சம்மதிக்கிறேன்.

அப்பாவும் அம்மாவும் மாறி மாறி எடுத்துச் சொல்லியும் மாதவன் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பண்ண, அவர்கள் வேறு வழியில்லாமல் அவன் இஷ்டத்துக்கு இறங்கி வந்தார்கள்.

பிள்ளை?

இரண்டு பெண்களுக்குப் பின் பிறந்த ஒரே பிள்ளையாயிற்றே!

அத்தனை சுலபமாய் அவனை இழந்துவிட முடியுமா?

கோயமுத்தூர் மில் ஒன்றில் மனேஜராக வேலை பார்த்து, இரண்டாயிரம் சம்பளம், கார், ஆள் என்று வாழ்ந்து வந்த மாதவனின் தகப்பனாரின் அந்தஸ்துக்கு உஷாவின் பிறந்தகத்து நிலை ரொம்ப சாதாரணம் தான்.

ஆனாலும்?

காதலுக்குக் கண் எது? அந்தஸ்து எது?

ஒரு வழியாய் பெற்றவர்களின் சம்மதம் கிடைத்து விட இத்திரையில் உஷா, மாதவன் திருமணம் எளிமையாய் நடந்தேறியது.

ரிஜிட்டரியில் உஷா கர்ப்பமானாள்.

இப்போது குழந்தைக்கு நான்காம் மாசம் நடக்கிறது.

பதவி உயர்வு பெற்று லெக்சரர் ஆகிவிட்ட உஷாவின் சம்பளம் இப்போது கணிசமான தொகையைத் தொட்டு விட சுலபமாகிவிட்டது என்பதற்காகவோ, பிறந்து விட்ட குழந்தைக்காகவோ, வேலையைவிட உஷாவுக்கு மனமில்லை. மாதவனுக்கும் சம்மதம் இல்லை.

காட்பாடிக்குப் பக்கத்து கிராமத்தில் அப்பாவின் பூர்வீக சொத்தான வீட்டின் ஒரு போர்ஷனில் இருந்து கொண்டு பெரிய போர்ஷனை வாடகைக்கு விட்டு, அந்தப்

பணத்தோடு மகன் மாசா மாசம் அனுப்பும் நூறு ரூபாயையும் வைத்துக்கொண்டு, தான் உண்டு, தன் வாழ்க்கை உண்டு என்று தனியாகக் வாழும் அம்மாவைத் தன்னோடு கூட்டி வைத்துக் கொள்வது எல்லாவற்றுக்கும் நல்லது என்று ஏனோ இது நாள் வரை உஷாவுக்குத் தோன்றவில்லை.

இப்போது புருஷன் 'உங்கம்மாவ இங்க கூட்டி வந்துட்டா என்ன?' என்று கேட்டபோதான் என்னமோ ஞானோதயம் பிறந்த மாதிரி, சந்தோஷத்துடன் எதிர்க் குதித்து 'அட! இது ஏன் எனக்கு முன்னமே தோணலை?' என்றவள் உடனுக்குடனேயே அனுப்பக் கையளாற்ற, கணவன், குழந்தையுடன் அந்த சனி, ஞாயிறே காட்பாடிக்குப் புறப்பட்டுப் போனான்.

சொல்லாமல் கொள்ளாமல் வந்து நின்றவர்களைப் பார்த்து பாகீரதிக்கு வியப்பு, சந்தோஷம்.

கையும் ஓடாமல், காலும் ஓடாமல் சில நிமிஷங்களுக்கு பரபரத்து விட்டு, வந்திருக்கும் பெண், மாப் பிள்ளைக்கு விருந்து தயாரித்து முதலில் சாப்பிட வைத்தாள்.

சாப்பாடு ஆகி, அக்கடா என்று உட்கார்ந்திருக்கையில் உஷா மெள்ள பேச்செடுத்தாள்.

"ஏம்மா இந்தத் தடவை நாங்க மெட்ராஸுக்குப் போறப்ப நீயும் எங்களோட வந்துடேம்மா... தனியா உன்னை இங்க விட்டுட்டுப் போனா எனக்கு அங்க இருப்புக் கொள்ள மாட்டேங்குது..."

ரொம்பக் கரிசனத்துடன் மகள் பேச, இது என்ன நிஜமா அக்கறை என்று பாகீரதி நிமிர்ந்தாள்

''ஆச்சரியமா இருக்காரம்மா? கொஞ்ச நாளாலே உன் னண்ட இந்தப் பேச்சை எடுக்கணும்னு ஆசைதான், என்னமோ வேளை வரலை. வயசான காலத்துல நீ தனியா இருந்து ஸோல் பட்டது போதும், பேசாம எங்க னோட வந்திடு. பேத்திக் குட்டியை வைச்சிட்டு நீயும் நிம்மதியா இருக்கலாம்; நாங்களும் அம்மா ஒண்டியா என்ன பண்றாளோன்ற தவிப்பு இல்லாம இருப்போம், என்னம்மா?''—

பாகீரதி என்ன சொல்வது என்று புரியாமல் மென்று விழுங்கினாள்.

''இப்படி திடும்னு கேட்டா...''

''திடும்னு இல்லே அத்தே— உஷா சொன்ன மாதிரி கொஞ்ச நாளாவே இந்த ஐடியா உண்டு. கேட்கத்தான் தோதா சமயம் வரலை...''

''ஆமாம்மா... உங்கம்மாவை இங்க அழைச்சிகிட்டு வந்திடலாமே, ஏன் அவங்க தனியா இருந்து கஷ்டப்பட ணும்'னு மாப்பிள்ளை சொன்னப்போ இது, நல்ல ஐடி யாதான்னு எனக்கும் தோணிச்சு. நீ என்ன சொல்றே?''—

''பழகின ஊர், உங்கப்பாவோட வாழ்ந்த ஊர், எல்லாத்தையும் விட்டுட்டு... அங்க வந்தா...''

''வந்தா என்ன அத்தே? உங்க பேத்தி இருக்கா, டி.வி இருக்கு. போது எப்படிப் போகும்னு தானே பயப் பட றீங்க?''

''அதெல்லாம் இல்லே, வந்து...''

''உனக்கு அங்க ஒரு கஷ்டமும் இருக்காதும்மா, எல்லா வேலையும் செய்ய ஆள் இருக்கா. தனி வீடு தண்ணிக் கஷ்டம் நம்ம ஏரியால இல்லே. இங்க இருக்கறதை விட நீ அங்க வசதியா இருக்கலாம். இந்தப்

மோர்ஷனையும் வாடகைக்கு விட்டுட்டு வர்ற பணத்தை பாங்குல போட்டு வைச்சிக்க...என்னம்மா?''

மாறிமாறி கனைவனும், மனைவியுமாய் வேப்பிலை அடிக்க, மறுநாள் சாயங்காலத்திற்குள் பாகீரதி தன் சம் மதத்தைத் தெரிவித்து விட்டாள்.

தனியாக இங்கு உட்கார்ந்து வேப்பிலை அடிப்பதை விட, அங்கு பேத்திக் குட்டியுடன் இருப்பது நல்லதுதானே?

வயசான காலத்தில் தனியாக அவதிப்படாமல் பெண் ணோடு வசதியாக வாழ்வது நல்லதுதானே?

ஒரு தலைவலி, காய்ச்சல் என்றால் அந்தியர்களைத் தொந்தரவு பண்ணுவதைவிட—ஸ்வாதீனமாக பெண் வீட் டில் படுத்திருப்பது நல்லதுதானே?

நாலையும் யோசனை பண்ணிவிட்டு, சந்தோஷத் தோடு பாகீரதி கூடலர், 'அம்மா வந்து விட்டாள்; இனி வீடு, குழந்தை பற்றின கவலை விட்டது' என்று உஷாவும் பெரு மூச்சு விட்டுக் கொண்டு மறுநாளிலிருந்து காலே ஓடத்துச் செல்லத் துவங்கினாள்.

3

வாசலில் வெள்ளையாய் கண்ணைக்கூசவைக்கும் இழை கோலம்; அதிலிருந்து உள்ளே செல்லும் குட்டிப் பாதம்.

வாசப்படியில் வரிசையாய் மாவிலைத் தோரணம்.

ஊதுபத்தி, பலகார மணம்.

குளித்து, பவுடர் பூசி, மை இடப்பட்டு, லட்சணமாய் கூடத்துப் பாயில் கிடந்தது குழந்தை.

அலுவலகம், கல்லூரியிலிருந்து ஒன்றாக வீடு திரும்பிய மாதவனும், உஷாவும் ஒரு நிமிஷம் அப்படியே நின்று அந்தச் சூழ்நிலையை அனுபவித்தார்கள்.

"ம்ம். நம்ம வீடுதானா இது உஷா? வாசனையா, கோலமும், அலங்காரமுமா அமர்க்களப்படுதே."

ஸ்வாசத்தை இழுத்து மாதவன் வினவ, உஷா சிரித்தாள்.

குழந்தையை அள்ளிக் கொண்டவள் "அம்மா" என்று குரல் கொடுத்தாள்.

பாகீரதி சமையல் அறையிலிருந்து எட்டிப்பார்த்தாள்.

"வந்திட்டீங்களா? வாங்க... கை கால் கழுவிட்டு வந்து சாமிக்கு இரண்டு பூப்போட்டு வணங்கிட்டு, காபி பலகாரம் சாப்பிட உட்காருங்க."

"என்னம்மா தடபுடல் பண்ணியிருக்கே. இன்னிக்கு கிருஷ்ண ஜெயந்தியா?"

"ஆமா. இரண்டு நாள் முன்னாடியே இந்த விசேஷம் வருதுன்னு பாத்து வைச்சுகிட்டேன்! உன்னண்ட சொன்னா 'வீணா சிரமம் படாதம்மா'ன்னு அடக்கிடுவேன்னு தான் எதுவும் சொல்லலை."

"பலகாரம் பண்ணி இருக்கியா, என்ன?"

"பின்னே? குழந்தை இருக்குற வீடு, கிருஷ்ண ஜெயந்தியு சாதாரணமா விட்டுட்டா எப்படி? நீங்க புறப்பட்டுப் போனதும் ஆயாகிட்ட படி அரிசிய களஞ்சி கொடுத்து மிஷின்ல அரைச்சிகிட்டு வரச் சொன்னேன். அதினோரு மணிக்கு குழந்தைய குளிப்பாட்டி, பால் கொடுத்து தூங்கப் பண்ணிட்டு உட்கார்ந்தேன். இரண்டு இனிப்பு, கொஞ்சம் மிக்ஸர், முறுக்கு எல்லாம் ரெடி. நேத்து நீ வாங்கிட்டு வந்த பழம், வெத்திலை அப்படியே இருக்கு. ஏடை கடைஞ்சி வெண்ணைய் எடுத்து வைச்சிருக்கேன்.

தவிர, அவலோட இந்தப் பதார்த்தங்களையும் படைச்சி, ஒரு கும்பூரம் காட்டிட்டா ஆச்சு. நீங்க இரண்டு பேரும் வர்றதுக்காகத்தான் காத்திட்டு இருக்கேன். கை கால் கழுவிகிட்டு வாங்க."

நீளமாய் பாகீரதி பேசப்பேச மாதவனும், உஷாவும் அதிசயித்துப் போனார்கள்.

வீட்டையும், குழந்தையையும் கவனிப்பதோடு, ஒய்யாய் இத்தனை பலகாரங்களும் செய்து, கோலம் போட்டு இதர காரியங்களையும் கச்சிதமாய் கவனித்து, எ... அப்பா! அந்த காலத்து மனுஷிகளின் காரியம் காரியம் தான்.

அதுவும் கிராமத்தில் வாழ்ந்தவளுக்கு அனுபவமது, சலிப்பானது!

சந்தோஷத்தோடு இருவரும் பரபரவென்று உள்ளே சென்று, முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டார்கள்.

பக்தி சிரத்தையுடன் சமையலறைக்குச் சென்று அங்கிருந்த பூஜை அலமாரி முன் நின்றார்கள்.

பாகீரதி இங்கு வருமுன் தனி பூஜை அலமாரி என்று எதுவும் இடையாது. போனால் போகிறது என்று மாட்டப்பட்ட ஒரே ஒரு முருகன் படம் மட்டும் சமையற்கட்டு பக்கச் சுவரில் தொங்கும்.

இப்போது அப்படி இல்லை.

வந்த இரண்டாம் நாளே, 'பூஜை அலமாரி இல்லாட்டி எப்படி? நாள் கிழமைனா ஒரு பூ சாத்தி, கும்பூரம் காட்டவேணாமா?" என்று பாகீரதி சொல்ல, அவள் ஆசையைக் கெடுப்பானேன் என்று பாத்திர அலமாரியை ஒழித்துக் கொடுத்திருந்ததில் இப்போது ஒரு

தட்டு நிறைய கண்ணன், நடராசன், ரத்தினகிரி முருகன், விநாயகர், சாய்பாபா படங்கள் உள்ளன வைத்து பூட்டப் பட்டிருந்த வெள்ளிக் குத்துவிளக்கு, வெளியில் எடுக்கப் பட்டு இரண்டு வேளையும் ஏற்றப்படுகிறது.

எல்லோரும் டூப் போட்டானதும் துளி நீரை எடுத்து, நைவேதனத்துக்காக வைத்திருக்கும் பாத்திரங் களை, சுற்றி தரையில் பாகிரதி விட்டாள்.

கட்டியாய் சுற்பூரத்தை ஏற்றி குட்டில் வைத்து "எ அப்பனே க்ருஷ்ணா... காப்பாத்து—ஹரே க்ருஷ்ணா, ஹரே க்ருஷ்ணா, க்ருஷ்ணா க்ருஷ்ணா ஹரே ஹரே!" என்று சொல்லி படங்களுக்குக் காட்டி, கீழே வைத்து, தானும் ஒற்றி, குழந்தைக்கும் ஒற்றி, பாகிரதி விழுந்து நமஸ்கரிக்க, மற்ற இருவரும் தொடர்ந்தார்கள்.

பூஜை ஆனதும் பலகாரம் சாப்பிட்டார்கள்.

கை முறுக்கும், அதிரசமும் சாப்பிட்டு நாளாகி இருக்க, மாதவன் ரசித்து உண்டான்.

எட்டு மணிக்கு மேல் எல்லோருமாக பாகீரதியின் விருப்பப்படி சிவா விஷ்ணு கோவிலுக்குச் சென்று வந்தார்கள்.

திரும்பி வருகையில் மாமியாருக்காக அவர் ஆசைப் பட்ட ஸ்தோத்திரப் புத்தகத்தை மறக்காமல் மாதவன் வாங்கிக் கொடுத்தான்.

அன்றிரவு ரொம்ப நேரத்துக்கு வீட்டில் இப்போது நிலவும் சந்தோஷமான சூழ்நிலை பற்றி பேசிக் கொண்டிருந்து விட்டு மாதவனும், உஷாவும் தூங்க முற் பட்டபோது மணி பதினொன்றைத் தொட்டுவிட்டது.

அடுத்து வந்த மாசங்களில் அவர்கள் வாழ்க்கை இதே நிம்மதியோடுதான் நகர்ந்தது.

வீட்டையும், குழந்தையையும் பார்த்துக்கொள்ள பெரியவளாய் பாகீரதி, அவளுக்கு வேண்டிய உள், வெளி வேலைகளைச் செய்து கொடுக்க ஆளா, செலவுக்குக் கஷ்டம் ஏதும் இல்லாமல் இருவர் சம்பாதிக்கும் பணம், வாழ்க்கையை இன்னும் நன்றாக அனுபவிப்பதற்காக வும், பாகீரதிக்கு வசதியாக இருக்கவும் சீக்கிரமே அவர் தன் பின்னதாக ஒரு பிரிஜ், டிவி, தோசைக்கு கிரைண் டர் இல்லாமல் அடிக்கடி அரைக்க ஒரு கிரைண்டரும் வாங்கி னார்கள்.

இதெல்லாம் போதாதென்று தீபாவளி சமயத்தில் தங்கை புடவையில் இரண்டும் கோடைப்பருவத்தில் இரண்டும் எடுத்து மகள் நீட்டியபோது பாகீரதி திக்குமுக் காடித்தான் போனாள்.

"இப்ப எதுக்கு தானு புடவை உஷா?"

"சும்மா தாம்மா, உன் மாப்பிள்ளைக்கு போனஸ் வந்திருக்கு, அதான் வேட்டு விடறாரு."

"அதுக்காக இப்படி தலையிலே கொண்டு கொட்டு வாங்களாரி நகையா செஞ்சாலும் தானைக்கு உதவும்."

"இருக்கட்டுமா நீ கட்டற புடவையெல்லாம் பழசாயிடுச்சாம். 'அம்மா நமக்காக உழைக்கறாங்க, அவங்களுக்கு புடவை ஐநூறு ரூபாய்ல வாங்கி தர்றதா கஷ்டம்'னு உன் மாப்பிள்ளை சொல்றார்ம்மா. ஜாய், உன் பாடு கொண்டாட்டம்தான்."

வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டு பேசினாலும், உஷாவுக்கு வாஸ்தவந்திலேயே கொள்ளை பெருமைதான்.

பெண் தவிக்கக் கூடாதென்று, தன் குடியிருப்பை மாற்றிக் கொண்டு வந்ததோடு, எள் என்றால் எண் ணெயாக நின்று, அத்தனை பொறுப்பையும் செம்மை யாக நிர்வகிக்கும் அம்மா!

மாமியார்தானே! செய்யட்டுமே என்ற அலட்சியம் இல்லாமல், பெற்றவளைப் போல கரிசனத்துடன் பேணிக் காக்கும் கணவன்

அப்புறம் பெருமைக்கு என்ன குறைச்சல்?

இந்த மகிழ்ச்சியின் காரணமாகவே — சூதந்தை வந்தனாவின் ஜுன்டு நிறைவு விழாவை, தடபுடலாக உஷா நடத்தினாள்.

மரியாதைக்கு மாமியார், மாமனாருக்கு வரச்சொல்லி கடிதம் போட்டு, அவர்கள், இப்போது வர இயலாது, வேலை இருக்கிறது' என்று எழுதிய பதிலால் அதிகம் பாதிக்கப்பட்டுப் போகாது, தான் திட்டமிட்டபடி விமரிசையாகவே பிறந்த நாளைக் கொண்டாடினாள்.

காலையில் வீட்டோடு ஹோமம், சாஸ்திரோக்தமான காரியங்கள்.

மாலையில் தம்பர்களுக்கு டபாரிட்டி

இருவரின் சினேகிதர்களுமாய் கிட்டத்தட்ட ஐம்பது பேர்களுக்கு மேல் வந்துவிட, இரவு எட்டு வரை ஜே ஜே என்று வீடு கொண்டாட்டத்தில் திளைத்துப் போனது.

முதல் நாளிலிருந்தே இதற்கென பாகிரதி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் செய்து வைத்திருந்த முந்திரி கேக், குலாப்ஜாமூன், காராசேவு இவைகளுடன் சூடாய் வடை, பழம், காபியும் பரிமாறப்பட, வந்தவர்கள் அத்தனையும் ருசித்து சாப்பிட்டு பார்ட்டியைச் சிலாகித்தார்கள்.

விருந்தாளிகள் வீடு திரும்பின பின், வந்திருந்த பரிசுப் பொருட்களைப் பிரித்து,

பொம்மைகள்...

உடைகள்...

பிஸ்கெட் பொட்டலங்கள்...

என்று ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து உள்ளே பத்திரமாய் அம்மாவின் உதவியுடன் அடுக்கி வைத்த பிறகே உஷா படுக்க வந்தாள்.

"இன்னிக்கு பங்ஷன் பிரமாதமாக இருந்தது இல்லே?" மாதவன் வினவ, உஷா பெருமிதத்துடன் கலை அசைத்தாள்.

"எல்லாம் அம்மாவாலதான் மாது. நமக்கு துளி பொறுப்பு இல்லாம அத்தனையும் அவங்க கவனிச்சிக்கற தாலதான், நாம இவ்வளவு ரிலாக்ஸ்டா இருக்க முடிஞ்சு தது. என்ன சொல்றீங்க?"

மாதவன் உடனே ஆமோதித்தான்.

"நிச்சயமா. எல்லா ஏற்பாட்டையும் அத்தை கவனிச்சதால தானே, நம்ம பிரண்ட்ஸ் இத்தனை பேர் வாங்க முடிஞ்சுது! அத்தை இருக்குறது நமக்கு ஒரு ப்ளெஸ்ஸிங்."

அம்மாவை, கணவன் உயர்வாகப் பேசுவது மகிழ்ச்சியை அதிகப்படுத்த, உஷா அவன் மார்பில் சாய்ந்தாள்.

"சில பேர் மாதிரி பத்திரிகை படிக்கிறதினாலோ, சினிமா பார்க்குற பழக்கம் அம்மாவுக்கு இல்லே. அதனால மத்தியான நேரத்துல பொழுது போகாம கொஞ்சம் சிரமப்படறாப் பல தோணுது. இரண்டு தான் முந்தி கூட எதிர் வீட்டு ராமன் 'அம்மா அப்பப்ப டேப்ரெகார்டர் பதனைப் பாட்டு டேப்புங்களைப் போடறாங்க, மனசுக்கு நிம்மதியா இருக்கு, பொழுதும் போவுது'ன்னு யதேச்சையா சொன்னாங்க சின்ன குழந்தை மாதிரி டேப்ரெகார்டர் பத்தி பேசறப்போ அம்மா கண்ணு இரண்டும் பளபளன்னு மின்னிச்சு எப்படியாவது ஒரு டேப்ரெகார்டர் வாங்கி அவங்க முன்னால நீட்டினா எப்படி இருக்கும் மாது?"

ஆர்வத்துடன் உஷா பேச, இது குறித்து சிந்திக்க மாதவன், மறுநாளே பாங்கிலிருந்து பணம் எடுத்து

பிலிப்ஸ் டேப்ரெகார்டர் ஒன்றையும். நாலு பக்திப் பாடல்கள் கொண்ட டேப்புகளையும் பாகீரதி, உதாமூன் நீட்ட, இந்த மாதிரி மாப்பிள்ளை புருஷன், யாருக்கு கிடைப்பான் என்று அவர்கள் இருவரும் பூரித்துதான் போனார்கள்.

சாப்பிடக்கூட உட்காராமல், பஜனைப் பாடல்களை மூவருமாய்க் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த நிமிஷங்களில்தான் அந்த தந்தி வந்தது.

4

எக்ஸ்பிரஸ் தந்தியா?

இப்போதா?

யாரிடமிருந்து?

திடுமென பயம் வெண்னெயாகத் திரண்டு மேலே மிதந்து வந்து கவாசப் பையை அடைத்துக் கொள்ள, மூச்சு விடுவது மாதவனுக்கு சிரமமாகப் போயிற்று.

கை நடுக்கத்தை மறைக்காமல் தந்தியைப் பிரித்துப் படித்தான்.

அப்பா வீபத்துக்குள்ளாகி கவலைக்கிடமாக இருக்கிறார்; உடனே வரவும்.

போட்டது போட்டபடி கிடக்க, கையில் அகப்பட்ட துணி, பணத்தை எடுத்துக் கொண்டு டாக்ஸி ஒன்றை அமர்த்தி, இரவோடு இரவாகப் பயணித்து, சிவந்த விழிகளும், கலைந்த முடியுமாய் மாதவன் தன் குடும்பத்தாருடன் கோயமுத்தூருக்குப் போவதற்குள் எமனுக்கு அலசரம்; பிராணன் போய் முழுசாய் இரண்டுமணி நேரங்கள் ஆகிவிட்டன.

நண்பர் ஒருவர் 'வீடு கட்டியிருக்கிறேன் பார்க்க வாய்யா' என்று அழைக்க, போயிருந்தார். கீழ் பூரா

லும் பார்த்து, பிராட்டி விட்டு, வேலை நடந்து கொண்டிருந்த மாடியையும் பார்த்து விடலாம் என்று போனவர், தம்பி மட்டும் நீட்டிக் கொண்டு, இன்னமும் கைப்பிடி போடாத பாலகனியில் எட்டிப் பார்த்திருக்கிறார். காற்று ஜிவ்வு ஜிவ்வுவென்று வீச, தூரத்தில் மருதமலை முருகன் கோவில் தெரிய, விளிம்பு வரையில் போய் 'என்னப்பனே முருகா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டிருக்கிறார். பக்திப் பரவசமோ, அல்லது போறாத வேளையோ, ஏதோ ஒன்று, திரும்பி இப்படி வருவதற்குள் கால் இடறி, தடுமாறி இருக்கிறது, பிடித்துக் கொள்ள பிடிமானம் இல்லாமல் தலைகீழாகச் சாய்ந்து...

அப்புறம் என்ன?

தலைதப்புற செங்குத்தாய் விழுந்தவருடைய முதுகுத் தண்டில் எலும்பு முறிவு. தலையில் ஆறுங்குலத்துக்கு லிசல் எக்கச்சக்க ரத்த சேதம்.

அப்போ பிராக்ஸர் இழந்தவர்தான்.

கண்ணைத் திறந்து பார்க்காமலேயே உயிரை விட்டு விட்டார்.

மாதவனைக் கண்டதும் அவன் தாய் சொர்ணம் அலறிக் கொண்டு மயங்கி விழ, இவள் முகத்தில் அடித்துக் கொண்டு ஐயோ, அம்மா, அம்மா என்று திரும்பத் திரும்பப் புலம்பி அழுதாள்.

மாதவனின் மூத்த சகோதரிகளில் ஒருத்தி ஆந்திரேவாவில் இருக்கிறாள். அவள் கணவர் அங்கு டாக்டர் தொழில் பண்ணுகிறார். இன்னொருத்தியின் புருஷன் ராணுவத்தில் மேஜர். லிம்லாவில் தற்சமயம் போஸ்டிங்.

இரண்டு பேர்களுக்கும் தந்தி அடித்து விட்டு, அவர்களின் வருகைக்காக காத்திருக்க முடியாமல், பிணத்தை எடுத்து, காரியத்தைக் கவனித்தார்கள்.

இவர்கள் அடித்த தந்தி மும்பை போய்ச் சேர சரியாக மூன்று நாட்களை எடுத்துக் கொண்டதில் ஆச்சரியம் நாள் இரண்டாமவள் ராத்திரியிலிருந்து பதில் தந்தி வந்தது. உடனே புறப்பட்டு வருவதாக.

மூத்தவள் சுல்லரி மட்டும் விஷயம் தெரிந்ததும் படக்கத்துவிட்டு டெலிபோன் நம்பரில் தொடர்புகொண்டு தம்பியை அழைத்துப் பேசினாள்.

''அக்கா... அக்கா...'' என்று மாதவனுக்கு வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன.

''என்னாச்சுடா தம்பி... வாட் ஹாப்பண்ட்?''

முடிந்தவரை விவரமாய்ச் சொன்னான்.

''உடனே வந்து அம்மாவ பாக்கணும் போல இருக்கு. ஆனா அதுக்கு வழி இல்லே. நீ அம்மாகிட்ட சொல்லு. நான் தனியா தவிக்கறேன்னு சொல்லு. தைரியமா இருக்கிறதைத் தவிர வேற வழி இல்லே, அம்மாவ தனியா விட்டுடாதே. உடனே உன்கூட அழைச்சிட்டு போயிடு, என்னடா?''

'சரி' என்று சொல்லி, 'நீ கவலைப்படாதே, நா இருக்கேன்' என்றும் தைரியம் கூறி ரிஸீவரை வைத்த மாதவன் பக்கத்தில் கண்ணீர் நிறைந்த கண்களோடு நின்றிருந்த டாவிடம் விவரம் சொன்னான்.

''பின்னே? அம்மாவ இங்கு தனியா எப்படி விடறது? கண்டிப்பா நம்பகூட அழைச்சிட்டுதான் போகணும். பிள்ளை நீங்க இருக்கறப்போ, அவங்களை இங்க தனியா விடறது நியாயமா?'' என்று அவளும் தன்பங்குக்கு அடித்துப்பேச, ரணமாக இருந்த மனசு கொஞ்சம் தேறி ஆறுதல் அடைந்தான் மாதவன்.

பதினாறாம் நாள் காரியத்தை செவ்வனே செய்தார்கள்.

ஒரு குறை வைக்காமல், அம்மாவும், இரு பெரியவர்களும் கூறின அத்தனை அறிவுரைகளையும் ஏற்று, பிரத்தனையுடன் எல்லாவற்றையும் செய்ததோடு ஒரு மாசம் கணவன், மனைவி இருவருமே விடுப்பு எடுத்திருந்ததால் உடனே கவனிக்கும்படியான வேலைகளை தினமும் கவனித்துமல் ஆக வேண்டிய வேலைகளை தினமும் கவனித்தார்கள்.

அம்மா ஆசைப்பட்ட விதத்தில் இரண்டு பெண்களுக்கும் கொடுக்க வேண்டிய நகைகள், பாத்திரங்களை மூத்தவளுக்குத் தனியாக எடுத்து வைத்து, இளையவளுக்குத் கொடுத்து முடித்ததும், மீதமிருந்த சாமான்களில் விற்க வேண்டியதை விற்றான், சென்னைக்கு எடுத்துப் போக வேண்டியவைகளை 'பாக்' பண்ண ஏற்பாடு செய்தான்.

காரை சென்னைக்கு எடுத்துப் போகலாமா என்று யோசனை பண்ணி விட்டு, வேண்டாம்: கார் இலவசமாக கிடைக்கிறது என்றாலும், யானையைக் கட்டி தீனி போடுகிற மாதிரியார் அதற்கு பெட்ரோல் போடுவது? என்று தீர்மானித்ததை வெளியிடும் முன்னர் ராதிகா அவளை தனியாக அழைத்துப் போய் பேசினாள்.

''காரை என்ன பண்ணறதா இருக்கே மாது? மெட்றாஸுக்கா எடுத்துகிட்டுப் போகப் போறே?''

''இல்லேக்கா. கார் வச்சுக்க எனக்கு கட்டுப்படியாகாது. தவிர, என்னண்டதான் ஸ்கூட்டர் இருக்கே.''

''ஏன் கேக்கறேன்னா, கட்டுப்படியாவும்னு யாராவது தூண்டி விட்டாங்கன்னா கூட அதுல மயங்கிடாதேனு சொல்லத்தான் இப்ப தனியா கூப்பிட்டேன். கார் வச்சிக்கறது லேசு பட்ட விஷயம் இல்லே. பகாசுரனா பணத்தை விழுங்கும். தவிர...''

உஷா கார் வேண்டும் என்று சொல்லி விடப் போகி றானா, என்ற முன் ஜாக்கிரதையுடன் அக்கா கோகிலாவின் எரிச்சலைத் தர,

"யாரும் இங்க வண்டிக்கு ஆசைப்பட லேக்கா, எங்க நிலைமை எங்களுக்குத் தெரியாதா? ப்ரோக்கர் கிட்ட சொல்லி இருக்கேன். நல்ல விலை கிடைச்சா வித்துட லாம்னு."

"அதான் சரி. ஆமா, வித்த பணத்தை என்ன பண்ணப் போறே?"

"பாங்குல டெப்பாசிட் தான் போடணும்."

"தானே அதான் சொல்ல வந்தேன். கார், மத்த உபரி சாமான்களை வித்துப் பணமாக்கி, அம்மா பேர்ல டெபாசிட்டா போட்டுடு. பணம் இருந்தாதான் யாரும் மதிப்பாங்க என்ன, புரியுதா?"

வேட்கமில்லாமல், 'எனக்கு திருப்பூர் பதக்கம் வேணும், வெள்ளி வளை வேணும்' என்று இரண்டு நாட்களுக்கு முன் அம்மாவிடம் நகைகளை அடிக்கடி பிடித்து வாங்கிக் கொண்டவள் இன்று தனக்கு புத்தி சொல்ல வருவது எரிச்சலை அதிகப்படுத்த, மாதவன் மௌனமாய் நின்றான்.

"சொல்றேன்னு கோவிக்காதே மாது. அம்மாக்கு இனிமே எல்லாம் நீதான். அவங்க கண்ல கலங்காம பாத்துக்க வேண்டியது உன் பொறுப்பு. பெண்டாட்டி மாமி யாரையும் நினைக்கலை நானா - அவங்களோட இளிச்சுகிட்டு கொண்டாட்டமா இருந்த நிதிலே இனியும் இருக்காதே. நீ அம்மாக்கு மதிப்பு கொடுத்தாதான் அவங்க மதிப் பாங்க. நம்ப அம்மா வாயில்லா பூச்சி, கண்டவங்க அவர் களை வாயில துக்கி போட்டுக்காம இருக்குறது உன் கை யிலேதான் இருக்கு. புத்தியா நடந்துக்க. அதான் நா சொல்லுவேன்."

...அம்மாவுக்கு நானும் ஒரு பெண். வாங்கிக்க மட்டும்தான் எனக்கு பாத்தியதை என்று இல்லை, செய்ய வும் உண்டு. அதனால், அவ்வப்போது என்னிடமும் நல மாசங்கள் அனுப்பினால், நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கரிசனத்துடன் ஒரு வார்த்தை சொல்லாமல், தன் பாட்டுக்கு புத்தி சொல்ல மட்டும் அக்கா வரிந்து கட்டிக் கொண்டு நிற்பது எக்கச்சக்க கோபத்தை உற்பத்தி பண்ண, அன்றிரவு தனியாக இருக்கையில் உஷாவிடம் இது சம்பந்தமாய் மாதவன் வருத்தப்பட்டுக் கொண் டான்.

"இவ அம்மாவை அழைச்சிக்கிட்டு போய் டாக்டர னைச்சு ஏதுவும் செய்யணும்னு நான் எதிர்பார்க்கலை. கூப்பிட்டா அனுப்பறதாகூட இல்லே. ஆனாலும் ஒரு வார்த்தை? இதமா ஒரு பேச்சு? சே-ஒரு மண்ணாங்கட்டி யும் இல்லே. குறி பூரா பணம் தான். இவ புருஷன் ஆர்மில பெரிய மேஜர். இத்தனை சம்பளம், இத்தனை வசதினு பீத்திக்க மட்டும் தெரியும். என்ன மனுஷியோ?

குமுறியவனின் தோளில் கை வைத்த உஷா சமா தானப்படுத்தினாள்.

"விடுங்க. அக்கா சொன்னதுக்காக இப்படி மனசைப் போட்டு உழப்பிக்கறது எல்லி. என்னை நீங்க கட்டி கிட்ட கோவம் அவங்களுக்கும் இன்னும் தீரலை. அதை இப்படி எல்லாம் காட்டறாங்க. விடுங்க மாது.

"பணம் இல்லேன்னா யாரும் மதிக்க மாட்டாங் களாம். அதனால அம்மா பேர்ல பாங்குல பணத்தை போட்டு வைக்கணுமாம். நா எடுத்துகிடுவேன்னு அக்கா வுக்கு பயம் போல இருக்கு."

உஷா புருவங்களை நெறித்தாள்.

"நீங்க எடுத்து எங்களுக்காகச் செலவு செஞ்சிடு வீங்களு பயப்படலாம் இல்லியா? சமயம் கிடைக்குறப்ப எல்லாம் என்னை மட்டம் தட்டற மாதிரி இப்பவும் பேசி யிருக்காங்க. தட்ஸ் ஆல்."

''சமயம் கிடைக்குறப்ப மட்டம் தட்றாங்களா? ஏருர் அக்காவா? நீ ஏன் என்கிட்ட சொல்லலேயில்லே? என்ன சொன்னபங்க?''

உஷா புரண்டு படுத்தாள்.

''யாரும் எதுவும் சொல்லிடலை. நீங்க வேற தினப்பி டாதிங்க எனக்குத் தூக்கம் வருது. நீங்களும் திருப்பிப் படுங்க.''

அடுத்த முப்பத்துநான்கு மணி நேரம் அவர்கள் சென்னைக்குப் பறப்பட்டு வந்தார்கள். உஷாவுடன் பழனி வரையில் அக்கா மாதிரி வாய்த் துடுக்காக இல்லாத அம்மா வித்தி யாசமாய், பாச உணர்வுடன் இருந்தது நினைத்து மாதவனுக்கு சந்தோஷத்தைத் தரவே செய்தது.

அதுவும்,

சாவுக்கு வந்து விட்டு, சம்பந்தி, சம்பந்தி வீட்டில் தொடர்ந்து தங்குவது அநாகரிகம் என்று சென்னைக்குத் திரும்பி, மீண்டும் காரியங்கள் நடந்த அன்று வந்த வாகீரதியிடம்கூட சொல்லும் சாதாரணமாக நடந்துக் கொண்டதைக் கட்டாயம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

மழக்கமாக ஒரிரு நாட்கள் சென்னைக்கு வர நேர்ந் தாலும், யாரிடமும் எதுவும் பேசாமல், பேனாலும் குதர்க்கமாகப் பேசும் அம்மா, இப்போது உஷா அத்தை யிடம் சகஜமாக நடந்து கொள்வதோடு, சம்பந்தியம்மா கையைப் பிடித்துக் கொண்டு அழுது ''இப்படி ஆயிட் டுனே சம்பந்தியம்மா விதி பிரிச்சிடிச்சே. இலி நா இருந்து என்ன பயன்?'' என்று புலம்ப, ''தல்லா சொல் லீங்க. இனிமே பிள்ளைக்கு நீங்க தானே தாயும், தகப்ப னும். நீங்க தல்லா இருக்குறது தானே அவங்களுக்கும் பலம்?'' என்று பாகீரதி தேற்ற, கூடியிருந்தவர்கள் 'சம்பந்திகள் நடுவில் நல்ல பிணைப்பு இருக்கும் போலிருக் கிறதே'—என்று முணுமுணுப்பதைக் கேட்க நேர்ந்த மாதவனுக்கு சொல்லவும்தான் அப்பாடி என்றிருந்தது.

பின்னே?

நாலைக்கு நேர்ந்து வாழப் போகிறவர்கள் ஒருவர் பால் ஒருவர் அன்போடு இல்லாமல் குடுமியைப் பிடித்துக் கொண்டால் எப்படி?

5

இவ்வளவு தூரம் அம்மாவும், மாமியாரும் ஒத்துப் போவார்கள் என்று வாஸ்தவத்திலேயே உஷாவும், மாதவ னும் நினைக்கவில்லைதான்.

ஏனெனில், அத்தனை அந்தஸ்தில்லாவள் என்று தன் தாயை நிச்சயம் மாமியார் மட்டம் தட்டுவார் என்று எதிர் பார்த்த உஷாவுக்கு அவர் அதிகமாக வாயைத் திறக்காமல் அம்மா சொல்லும் எதற்கும் 'நீங்க சொன்னா சரி' என்று கூறி அனுசரணையாய் நடந்து கொள்வதைப் பார்க்கையில் ஆச்சரியமாகக் கூட இருக்கு. கணவனிடம் இது குறித்துப் பேசவே செய்தாள்.

'நம்ப இரண்டு பேர் அம்மாக்களும் இப்படி அக்கா, தங்கச்சிங்க மாதிரி அன்போட பழகறது எனக்கு நம்ப முடியாததா இருக்கு. வாட்அபௌட் யூ மாது?''

''யு ஆர் ரைட். அப்பப்ப முரண்டிப்பாங்காளு நா கூட எதிர்பார்த்தது நிஜம்தான். இவங்க இப்படி இருக் கிறது எத்தனை சந்தோஷத்தையும் நிம்மதியையும் தருது!''

உஷா கண்களை இடுக்கிக் கொண்டு யோசித்தபடி பேசினாள்.

''உங்கம்மாவை இத்தனை நாளா நா தான் தவறா புரிஞ்சிகிட்டு இருந்தேனோனு தோணுது. வாய்த்தடுக் காவெவங்க. பணம் தனக்குத்தான் இருக்கின்ற திமிர் படைச்சவங்கன்னு நினைச்சிட்டு இருந்தெல்லாம் தப்புனு புரியுது.''

"எங்கப்பா வாஸ் எ பாட் இன்ஃப்ளுயன்ஸ் உஷா. அவர் எது சொன்னாலும் அம்மா டூம் டூர் மாடு மாதிரி தலை ஆட்டுவாங்களே தவிரவும், தனக்காக யோசனை பண்ணி இது சரி, இது தப்புனு சொல்ல மாட்டாங்க. அப்பாவுக்குப் பணம் முக்கியம் அதனால் அவங்க இந்த வரைக்கும் அம்மாவும் அப்படியே இருந்தாங்க. இப்ப நாம பார்க்கறதுதான் அவங்க உண்மையான ஸ்வபாவம். மோர் ஓவர், என் அக்கா இரண்டு பேருக்குங்கூட அத்தனை நல்ல குணம் இல்லே முக்கியமா ராதிகா குறை சொல்வதைத் தவிர வேற தெரியாதவ. நீ இந்த ஒரு மாசத்துல பார்த்தியே; இவங்க பிழைத்து விடுபட்டு அம்மா இப்ப இத்தனை உசத்தியா இருக்கிறது எனக்கு ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கு..."

"நேத்து பாருங்க எங்கம்மா பாத்ரூம்ல வழுக்கி விழுந்திட்டாங்க கணுக்கால்பிட்ட லேசா வீங்கிப் போச்சு, உடனே உங்கம்மா அவங்களை உட்கார வைச்சு தன் கையால ஐயோடக்ஸ் தேய்ச்சி விட்டாங்கா சம்பந்தி அம்மா குணம் தங்கமனு எண்ணிட்ட அம்மா சொன்னப்ப அவங்க கண்கலங்கிப் பேச்சு மாது. இவ்வளவு நல்ல மனுஷியப் புரிஞ்சிக்காம இத்தனை நாளா என்னென்னவோ பேசி இருக்கேனேனு எனக்கு லெட்கமா இருந்துச்சு..."

உணர்ச்சி வசப்பட்டுப் பேசியவளைத் தன்பால் இழுத்து மாதவன் அணைத்துக் கொண்டான்.

"நீ சீரியஸ் பண்ணாப்பலதான் நானும் உங்கம்மா விஷயத்துல நினைக்கறேன் உஷா போன வருஷம், அவங்க இங்க வந்து நம்மகூட தங்க ஆரம்பிக்கிற வரைக்கும் உங்கம்மா மேல எனக்கு உயர்வான அபிப்ராயமே இருந்ததில்லே. ரொம்பப் பேசறாங்க, பூஜை, கோவில் பித்து அதிகம், பிறத்தியாரை சுலபமா குறை சொல்றாங்க'னு எல்லாம் நினைச்சிருந்தேன் ஆனா, இப்ப நம்ம கூட இருக்கிற இந்த ஒரு வருஷமா அவங்க எவ்வளவு நல்லவங்க, எத்தனை சுறுமையா நமக்காக உழைக்கிறாங்க.

நம்ம பேர்ல எவ்வளவு பிரியம் வைச்சிருக்காங்கன்னு தெரிஞ்சிது. காலல ஐயோடக்ஸ் கடவினதை பொசா சொல்ல வந்திட்டியே, நாலு நாள் முன்னாலே எங்கம்மா வயிறு சரியா இல்லாம படவையிலேயே வாந்தி எடுத்து திட்டப்போ, உங்கம்மா அதைக் பார்க்காம உடனே அதைத் தானே தோய்ச்சுப் போடலியா? எத்தனை உசந்த குணம் அது!"

இப்படி மாதவனும், உஷாவும் சதா மலைத்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்த ராதிகா—சோர்ணத்தின் நெருக்கம், அந்த ஒரு மாசத்தில் இன்னும் அதிகரிக்கத் தகுந்த மூளை அடுக்குகளை எல்லாமுகூட தொட்டுப் பரவியது.

மாதவனின் பெற்றோர்கள் கந்த அசைவும்.

உஷாவின் பக்கமோ நீவிர சைவம்.

ராதிகா இவர்களோடு வந்து தங்கும் வரை வீட்டில் தினமும் முட்டை செய்து கொண்டிருந்ததுகூட சத்தமாகத் தின்றுவிட, வாய்க்கு அசைவம் நேரவை போலத் தோன்றினால் மாதவன் மட்டும் ஒருநாள் புகாரிக்குச் சென்று ஒரு பிடி பிடித்து விட்டு வருவதோடு சரி.

மாமியாரை வீட்டுக்கு அழைத்து வரும்முன் சாப்பாடு விஷயமாக உஷா பயந்தது உண்டுதான்.

சைவமும், அசைவமும் ஒத்துப்போகுமா?

சாப்பிடாவிட்டாலும், அசைவ உணவு என்றால் குமட்டும் ரகம் நான் இல்லை. யார் யாருக்கு எது வேண்டுமோ சாப்பிட்டு விட்டுப் போகட்டும் என்று விட்டு விடுவேன்.

ஆனால் அம்மா?

பக்கத்து வீட்டில் முட்டை பொரித்தாலும் இங்கு இவளுக்கு வயிற்றைப் பிரட்டுமே.

என்ன செய்ய?

நல்ல வேளையாக உஷா பயந்த நினுசில் எதுவும் நடந்து விடவில்லை.

மாறாக— ''நாலும் இளிமே சம்பந்தி அம்மா மாதிரி கத்த ஸைவமா இருந்துடப் போறேன். உங்கப்பா போனப் புறம் எனக்கு மட்டும் எதுக்கு கறியும்,மீனும், வேணாம்... பால் சோறு சாப்டுவிட்டு நா பாட்டுக்கு விழுந்து கிடக்கிறதுதான் சரி'' என்று சொர்ணம் கூறிவிட்டாள்.

இவள் இப்படி என்றால், தன் பங்குக்கு பாகீரதியும் தன் வீருப்பு வெறுப்புகளை எல்லாம் ஒதுக்கி, விட்டுக் கொடுக்கவே செய்தாள்.

பாகீரதிக்கு நினிமா பார்ப்பதும் பத்திரிகைகள் படிப்பதும் அறவே பிடிக்காது. இரண்டையும் 'மனரைக் கெடுக்கும் பழக்கம்' என்று காட்டமாகப் பழிப்பாள். ஆனால், சம்பந்தி அம்மாவுக்கு இவை இரண்டிலும் மோகம் அதிகம் என்பது தெரிந்த பிறகு, பக்கத்து வீட்டு அம்மாவிடம் கூறி சர்குலேஷன் லைப்ரரி ஆளை உடனே வீட்டுக்கு வரச் சொன்னாள்; சொர்ணத்துடன் அமர்ந்து ஞாயிறு அன்று டி.வியில் படம் பார்த்தாள். பழனைப் பாடல்களில் அவ்வளவாக சம்பந்தியம்மாவுக்கு நாட்டம் இல்லை என்பதை ஊகிக்க முடிய பக்திப் பாடல் டேப்களை அறவே தவிர்த்ததோடு, மூன்றாவது வீட்டு சுந்தரியிடம் கேட்டு, 'நினைவெல்லாம் நித்யா' பட்டப்பாடல் டேப்பையும் வாங்கி வந்து 'கேளுங்கம்மா. தொந்து போன மனசுக்கு இதமா இருக்கும்' என்று சொல்லவும் செய்தாள்.

இது தவிர புருஷனை இழந்த துக்கத்தில் இருப்பவள், வசதியாக வாழ்ந்தவள் என்று சொர்ணத்தைத் தூசி துரும்பு எடுத்து போடக்கூட பாகீரதி அனுமதிக்க வில்லை.

''நல்லா இருக்கு சம்பந்தியம்மா. காய் யெல்லாம் நீங்க நறுக்கித் தர வேணாம். நா ஒருத்தி எதுக்கு இருக்கேன் தண்டத்துக்கு. நாலு பேருக்கு காய் நறுக்கிச் சமைக்கிறது ஒரு பெரிய வேலையா?'' என்றாள்.

''ராத்திரி பூரா தும்மிகிட்டே இருந்தீங்களே, வெத்நீர் வைச்சுத் தரேன் குளிங்க. இவம் போல பச்சைத் தண்ணிய விட்டுக்காதிங்க. ஒத்துக்காம ஜ்ரத்துல கொண்டு விட்டுடப் போவுது'' என்றாள்.

''உடம்பெல்லாம் நோவுதுனு சொல்லினீங்களே, மினது ரசமா வைக்கட்டுமா? சலசலனு ரசம் விட்டு நூடா சாப்பிட்டீங்கன்னா அப்பாடினு இருக்கும்— செய்யலா?''

''போனவர் போயிட்டாரு அவரை நினைச்க அழுது கிட்டே இருந்தா உங்க உடம்புல் கெட்டுதான் போகும். வாங்க பீச் வரைக்கும் போயி, காத்தாட உக்காந்திட்டு வருவோம்'' என்றாள்.

''ஆயா— நீ போய் ஒரு சைக்கிள் ரிக்ஷா கூட்டிகிட்டு வா. சம்பந்தியம்மாவுக்கு எங்கயும் கார்ல போயிதான பழக்கம் நடந்தாங்கன்னா கால் வலிக்கும்'' என்றாள்.

இன்னும் குறிப்பறிந்து எல்லா விதத்திலும் தேவை அறிந்து, அனுசரித்து நடந்தாள்.

இவள் இப்படி விட்டுக் கொடுக்க, அவள் அப்படி விட்டுக் கொடுக்க, கிட்டத்தட்ட மூன்று மாசங்கள் வரை எல்லாம் ஏக ஒழுங்காக இருந்தன.

காலேஜ், ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய உஷாவும், மாதவனும் எங்கள் வீடு, எங்கள் பெரியவர்கள் மாதிரி உண்டா என்று சதா கர்வப்பட்டனர்.

எதிர்வீட்டு, பக்கத்து வீட்டுக்காரர்கள்கூட இந்த மாதிரி ஒற்றுமையாக சம்பந்திகளை உலகத்தில் பார்ப்பது அபூர்வம், என்று மூக்கில் விரலை வைத்தனர்.

ஆனால்?

எல்லாம் சரியாக மூன்று மாசங்களுக்குத்தான்.

அப்புறம் பேத்தி விஷயத்தில், சாப்பாடு ரூபத்தில் பணவிலகாரத்தில் என்று இங்கும் அங்குமாய் குட்டி குட்டியாய் மனவேற்றுமைகள் தோன்றி, அலை சின்னச் சின்ன வாக்கு வாதங்கள், மனஸ்தாபங்களுக்கு இடம் கொடுக்க, அலை பெரிய சண்டைக்கு உற்சாகமாய் ராஜ டிட்டை ஒன்றைப் போடவே செய்தன.

6

முதலில் எப்படி எங்க கோணல் துளிர்விட்டது?

ம்?

ஏஸ், சாப்பாட்டு விஷயத்தில் தான்.

கிராமத்தில் ரொம்ப நெருக்கமாக பல வருஷங்கள் பழகிய குடும்பத்தில் பெண்ணுக்குத் திருமணம் என்று அழைப்பு வர, இதற்குப் போகாமல் இருப்பது தவறு; நாலு நாட்கள முன்னதாகவே சென்று கூட மாட உதவி செய்வதுதான் நியாயம். அவர்கள் நாம் ஒன்றியாய் இருந்த காலத்தில் எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார்கள் என்ற நினைப்பில் பாகீரதி காட்பாடிக்குப் புறப்பட்டுப் போய், நாலு நாட்கள் தங்கி வந்த பிறகுதான், முதன் முதலாய் முகச்சுளிப்பை ஏற்படுத்தும் பேச்சு வார்த்தை எழுந்தது.

பாகீரதி இல்லாத ஒரு நாளில் வழக்கம் போல தன் அசைவ ஆசைக்கு வேண்டி மாதவன் புகாரிக்குச் சென்றிருக்கிறான்; வறுத்த கோழியைச் சாப்பிடுகையில், 'அம்மாவுக்கு சிக்கன் வறுவல் பிடிக்குமே, பாவம் இத்தனை நாட்களாய் சாப்பிடாமல் நாக்கு செத்திருக்குமே, அரை கோழி வாங்கிச் சென்று கொடுத்தால் என்ன? அத்தைகூட மனசில் இல்லையே? என்று தோன்ற, வாங்கி எடுத்து வந்து அம்மாவிடம் நீட்டி இருக்கிறான்.

பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்த சொர்ணத்துக்கு நாக்கெல்லாம் கணத்தில் ஜலம்.

"எதுக்கு தம்பி? நாதான் இதெல்லாம் வேணாம்னு லிட்டுட்டேனே" என்று வாயால் பேசினாலும், அவள் முகத்தில் தோன்றிய ஆர்வம் வெளிப்படையாக இருக்க "பரவாயில்லே, சாப்பிடுங்க அத்தே... மாமா இல்லேன்னு எத்துக்காக உங்களுக்குப் பிடிக்கறதை ஏன் விடணும்?" அமர்த்தி ரசித்து வறுவலை சொர்ணம் சாப்பிடத் துவங்க, ஒண்ணரை வயசு வத்தல பாட்டியின் முன் நின்று 'தா... தா' என்று பிஞ்சுக் கைகளை நீட்ட, நின்று பட்ட சதையில் துளி பிய்த்து அதன் வாயில் போட்டு வைக்க, அவளும் சப்புக் கொட்டிக் கொண்டு தின்றுவிட்டு மீண்டும் "தா பாத்தி... தா" என, மாதவனுக்கும், சொர்ணத்துக்கும் ஏகப்பட்ட குஷி.

"பாரு! பாரு! அப்பனுக்கு சரியாள மகதான் இவ," என்று பெருமையுடன் பாட்டி பேச, சந்தோஷத்துடன் மாதவனுடன் சேர்ந்து உஷாவும் சிரிக்கவே செய்தாள்.

நாலாம் நாள் பாகீரதி ஊரிலிருந்து வந்து இறங்கினதும், பேச்சு வாக்கில் ஆசை இலை அவளிடம் சொல்லப் போக, சட்டென்று கேட்டவள் முகம் கடுகடுவென்றானது.

"என்னது...என்ன பண்ணாங்க? திருப்பிச்சொல்லு?"

"அம்மாவுக்குனு அய்யா வாங்கி வந்த வறுத்த கோழில துளி எடுத்த உங்க பேத்தி வாயில வைக்க, அதுலபக் லபக்குனு எப்படி விழுங்கிச்சு தெரியுமான்னேன்."

"யாரு வாங்கிட்டு வந்தாங்க?"

"அய்யாதாம்மா."

"என்ன வாங்கிட்டு வந்தாங்க?"

"வறுத்த கோழி."

''நிச்சயமா தெரியுமா உனக்கு?''

''அட, எனக்குக்கூட நின்னைக் கொடுத்தாங்கம் மாண்ணா.''

''சரி... சரி... அந்த கண்றாவிய என் பேத்திக்கா கொடுத்தாங்க?''

''ஆமாம்மா. அதுவும் சப்பு கொட்டிகிட்டு சாப்டுச்சு.''

ஆயா அழுத்தம் திருத்தமாகப் பேச கேட்டுக் கொண்டு நின்ற பாகீரதியினுள் கோபம் மொட்டென்று வெடித்தது.

இனிமேல் தான் சுத்த சைவம் என்று சொல்லிவிட்டு என் தலை இரண்டு நாட்களுக்கு மறைந்ததும் உடனே வாங்கி வந்து குடும்பத்துடன் கும்மாளமடித்துக் கொண்டு சாப்பிடுவதற்கு வெட்கமாக இல்லை?

புருஷன் தவறின பிறகும் அது என்ன நாக்கு சபலம்.

இவர்கள் கண்டது எதை வேணுமானாலும் தின்று விட்டு போகட்டும், அதற்கு இந்த வீடும், என் பேத்தியும் தான் அகப்பட்டார்களா?

அசட்டுத்தனமாய் ஒருமித்த ஆங்காரம் எழ, மாலையில் உஷா திரும்பினதும் அவளைத் தனியாக அடக்கி, இது குறித்து பாகீரதி விசாரித்தாள்.

''நா இல்லாத சமயத்துல இங்க கண்ணா பின்னாலு ஏதாவது நடந்தா, அதை நீ கண்டிக்க வேணாமா, உஷா?''

''என்ன கண்ணாபின்னாலு நடந்துச்சு! யார் செஞ்சாங்க!''

''எல்லாம் உங்க மாமியார்தான். தான் கண்டதை தின்னதோட இல்லாம, என் சின்னக் குட்டிக்கும் கொடுத்தாங்களாமே.''

ஒரு நிமிஷம் எதுவும் புரியாமல் நின்று விட்டு, பின் ''ஓ! அதுலா! என்னம்மா நீ! நா என்னவோ பயந்திட்டேன், ஏதோ, பிள்ளை வாங்கி வந்தாரேனு அத்தை சாப்பிட்டாங்க. கூட நின்னி தின்னுகிட்டு கேட்டதால, துணி கொடுத்தாங்க, இப்ப இதனால என்ன ஆயிடிச்சு? போம்மா'' என்று சொல்லித் சிரிக்க, உள்ளான ரணம் மாதாமலேயே பாகீரதி திரும்பிப் போனாள்.

ஆனால், அன்று சப்பந்தியம்மாவுடன் பேசுகையில் மட்டும் ஓரிரு தரம் ''யாரையும் எந்த வார்த்தையும் இந்தக் காலத்துல, அப்படியே நம்பிட முடியாதுங்க! ஜாக்கிரதை!'' என்று கோபத்துடன் எச்சரித்துக் கொள்ளவே செய்தாள்.

இது பாகீரதிக்கு ஏற்பட்ட முதல் காயம்.

இது நடந்த ஒரு வாரத்துக்கெல்லாம், சொர்ணத்தை பார்க்கும் படியான இன்னொரு நிகழ்ச்சி நடந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

உறவு மனிதர்கள் நாலைந்து பேர்கள் வந்து டேபிளை நடு நாயகமாக வைத்து, கொஞ்சிக் கொண்டிருக்கையில் வயசான கிழவர் ஒருவர் வந்தனாவை தூக்கிப் பிடித்து ''உனக்கு இந்தப் பாட்டி பிடிக்குமா, அந்தப் பாட்டி பிடிக்குமா?'' என்று வினவ, குழந்தையும் இரு வரையும் மாறி மாறி பார்த்து விட்டு ''இந்தப் பாத்தி'' என்று பாகீரதியைக் காட்டியது.

கிழவர், இது குழந்தையின் பேச்சு என்று விட்டுக் கலாம் இல்லை.

விஷமமாக சொர்ணத்தைப் பார்த்துச் சிரித்து ''இந்த வீட்டுல மதுரை தர்பாரா, இல்லே சிதம்பர தர்பாரானு ரொம்ப நாளா யோசிச்சிட்டு இருந்தேன், இப்ப புரிஞ்சிடிச்சி. மதுரைதான்'' என, சுற்றியிருந்தவர்கள் விழித்தார்கள்.

''அது என்ன மதுரை, சிதம்பரம் தர்பார் மாமா?''

"தெரியாது? மதுரைலே யாரு முக்கியம்? மீனாட்சி தானே? அது போல தெம்பரத்துல? நடராஜர். எத்தவீட்டுலே எந்த சை ஓங்கி இருக்குதோ அதன்படி மதுரை, சிதம்பரம்னு சொல்றது வழக்கம்! இங்க மதுரை ஆட்சி தான்; அதான் வாண்டு கூட அந்தப் பாட்டியத்தான் பிடிக்குதுனு சொல்லுது."

வயசுக்கு ஏத்த விதமாய் இல்லாமல், எப்படி என்ன பேசுவது என்று தெரியாமல், கெக்கே பிக்கே என்று கிழவர் பேத்தி அட்டகாசம் இது என்ன உலறல் என்று அதை விட்டு விடாமல் சொர்ணம் அந்தப் பேச்சால் ரொம்பத் தான் அடிபட்டுப் போனாள்.

விருந்தாளிகள் அந்தப் பக்கம் போன பிறகு, "என்னமா சொல்லி காண்பிச்சிட்டு போறார் பாரு மாது! எல்லாம் என் போறாத காலம்" என்று அவள் விசும்ப, "விடும்மா சீராக்கு தனமா அவர் பேசினா, நீங்க அதைப் போயி பெரிசு பண்ணிகிட்டு" என்று மாதவன் சமாதானம் செய்தான்.

ஆனால், இந்த இரண்டு சம்பவங்களும் சம்பந்திகள் இடையே காணப்பட்ட நெருக்கத்தை விரல் அத்தனை பாதித்தது நிஜம்.

ஊன்றப்பட்ட விதைக்கு, வகையாய் அல்லப்போது தண்ணீர் வேறு கிடைக்க, திமுதிமுவென்று அது வளர்ந்து விட்டதில் அதிசயம் என்ன?

ஒருவரிடம் குற்றம் குறை காணவேண்டும் என்று எண்ணி விட்டால் நின்றால் குற்றம், உட்கார்ந்தால் தவறுதானே?

இவள் என்னை மதிக்கவில்லை என்று தினைத்துவிட்டால் எது பேசினாலும், செய்தாலும் குறை இல்லாமலா போகும்?

பாகீரதியும், சொர்ணமும் இதுவரை தாங்கள் விட்டுக் கொடுத்து வாழ்ந்தது போதும் என்று தீர்மானித்து

விட்ட திலுருவில் ரொம்ப சிக்கரமே அடுத்து அடுத்து
னைப் பொறிகளை விதறிவிடும் சம்பவங்கள் நீறைய
டக்க, தி ஜ்வாலை விட்டுக்கொண்டு எரியமுற்பட்டது.

என் பிள்ளை விட்டில் இவள் என்ன வந்து கூட்
சார்ந்து கொண்டு நாட்டாண்மை பண்றது என்ற
சப்பு சொர்ணத்துக்கும்—

இவளிடம் பணம் இருந்தால் அது இவளோடு அந்த
ராங்கி எல்லாம் என்னிடம் வேண்டாம் அன்புக்கு
ட்டுப்படுவேனே ஒழிய, இவள் அதிகாரத்துக்கு இல்லை
என்று பாகீரதியும் குமுறத் தொடங்கினாள் பின் வெளிப்
டையாகவே இருவரும் சொல்லிக் காட்டிக் கொள்ள
ஆரம்பித்தனர்.

அதுவும், வந்தனாவுக்கு வளர்த்தி போதவில்லை, மூட்டை கொடுத்தால் நல்லது என்று டாக்டர் ஒரு சுரம் சொல்லிவிட, இத்தனை நாட்களாய் சொல்லி விட்டோமே என்று அசைவம் சமைப்பது பற்றி யாதே திறக்காமல் இருந்த சொர்ணம் இதுதான் சாக்கு என்று, ஐயாவிடம் காசு கொடுத்து முட்டை வாங்கிவரச் செய்து தானே அதை பொறித்து பேத்திக்கு ஊட்டிவிட,

சமையல்கட்டை சம்பந்தியம்மா அசிங்கம் பண்ணுவது பிடிக்காமல் போக, "ஓரேடியா தலைய சுத்துது. ராத்திரி சமையலைச் செய்து என்னால் முடியாது" என்று அடிக்கடி பாகீரதி அடம் பண்ண,

வேண்டுமென்றே இவளை விட்டுவிட்டு பக்கத்து வீட்டுப் பெண்மணியுடன் மதிய ஆட்ட தமிழ் சினிமாவுக்கு சொர்ணம் சென்றுவர,

அலுவலகத்தில் அலுவல் என்று படுத்திருக்கையில் பாகீரதி பஜனைப் பாடல்களைப் பெரிசாக ரிகார்டரில் அலறவிட,

"இந்கவா என் வந்தனா கண்ணு! இன்னிக்கு பாட்டி உன்னைக் குளிப்பாட்டி ட்ரெஸ் பண்ணி விடுவேனாம்.

அழகான பேரா வந்தனாவு வைச்சிட்டு பின்னி என்ன, பின்னி! இனிமே யாராச்சும் உன்னை அப்படிக் கூப்பிட்டாங்கன்னா என்னு கேக்காதே ராஜாத்தி, உனக்கு சாக்லெட் வேணுமா? காட்பரீஸ் சாக்லெட்? நா வாங்கித் தரேன் வந்தனா கண்ணு, உனக்கு யாரைப் பிடிக்கும் என்னதானே?'' என்று சொர்ணம் கொஞ்ச,

அவள் அந்தப் பக்கம் போனதும் பேத்தியை அழைத்து ''சின்னி குட்டிக்கு இப்படி அசிங்கமா பின்னி விட்டது யாரு? பத்ரகாளி மாதிரி மை பூசி விட்டது யாரு? த்தூ-நல்லாவே இல்லே. பாட்டி ட்ரெஸ் பண்ணா தானே உனக்கு பிடிக்கும் தங்கம்? வாடியம்மா. மையை துடைச்சி விடறேன். நீயும் நானும் சோவிலுக்குப் போயிட்டு வரலாமா? தாமரைப்பூ வாங்கித் தரட்டுமா? தானைக்கு முறுக்கு சுட்டு தரட்டுமா? உனக்கு ரொம்ப பிடிக்குமே''—என்று சொல்லி, சற்று முன் சொர்ணம் செய்துவிட்ட அலங்காரத்தை அழித்து, பாகீரதி வேறு பண்ணிவிட,

ஆயாவிடம் இவள் முதல்ல கூடத்தை மொழுகு என்றால், அவள் 'சமையல்கட்டை சுத்தம் பண்ணிட்டு பாக்கி வேலையை கவனி ஆயா' என,

இவள் கீரைக்காரியை அழைத்தால், அவள் 'கீரையா? யாருக்கும் இங்க பிடிக்காது, வேணாம்' என,

மாலை வந்தால் சொர்ணம் கூடத்தில் டி.வி.வைக்க, பாகீரதி சாப்பாட்டு அறையில் டேப்ரிக்கார்டரை உரக்க பாடவிட,

மூன்று மாசங்களை அக்கடா என்று கழித்த உஷாவும், மாதவனும், இந்த மனஸ்தாபங்களால் அவர்களையும் அறியாமல் பாதிக்கப்பட்டு ரொம்ப சீக்கிரமே தங்கள் உறவிலும் இந்த கசப்பை உணடுருவ விட்டார்கள்.

7

தாரிணியைக் கணவனிடம் நீட்டிய உஷா தணிந்த குரலில் பேசினாள்:

''உங்கம்மாகிட்டே நீங்க கொஞ்சம் பேசினா தேவலை மாது.''

பாடித்துக் கொண்டிருந்த பேப்பரை மாதவன் தள்ளி வைத்தான்.

''என்ன விஷயம்?''

''காரணமில்லாம எங்கம்மாகிட்ட ரொம்பத்தான் லஞ்சண்டைக்குப் போறாங்க, என்னிடையும் முகம் கொடுத்துப் பேசறதே இல்லே, ஆபாசிட்ட வீட்டு சமாசாரம் பூரா பேசறாங்க. இதனால பக்கத்து-எதிர் வீட்டுக் காரங்களுக்கு நம்மளைப் பத்தின நேத்து பூரா சுத்தமா தெரிஞ்சுபோயிடுது. நேத்து பாருங்க, பின்னி கூடாஞ்சட்டு தெருமுனைவரை நடந்திட்டு வரேன், அதுக்குள்ளே இரண்டு பேர் என்கிட்ட 'உன் பல்லவி எப்படி இருக்கு'ன்னு கேட்டுட்டாங்க. எனக்கு பல் வலிக்கட்டும், தலை வலிக்கட்டும், இதெல்லாம், அவங்களுக்கு என்ன?''

மாதவன், நீளமாக ஒரு பெருமூச்சை இழுத்து வெளி விட்டான்.

''அம்மா பழைய மாதிரி இல்லே மாறிட்டாங்கன்னு ரொம்ப சந்தோஷப்பட்டதுக்கு அல்பாயுசா போயிடிச்சு. வரவர நித்தமும் இந்த மாதிரி புகார் கேட்க தலைவிதியாச்சு. ஒரு தரம் நா மைல்டா கண்டிச்சிட்டேன். இனியும் ஏதாவது சொன்னா மனசு புண்படும்படி போவாங்களேன்னு பயமா இருக்கு. நா எங்கம்மாகிட்டே பேசறேன். நீயும் அத்தையண்டையும் சொல்லிடு, வீணா வீலே போய் வம்பு வளர்க்கிற மாதிரி எதுவும் பேச வேணாம்னு.''

இத்தப் பேச்சு நடந்த எட்டாம் நாள் மாதவனாகவே திரும்ப இந்த விஷயம் குறித்து உஷாவிடம் வந்தான்.

"உங்கம்மாவ கொஞ்சம் பட்டுக்காம ஒதுங்கி இருக்கச் சொல்லவியா உஷா? அனாவசியமா ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் தகராறு வளக்கறாங்களே. வாட்ஸ் ஆல் திஸ்?"

புடவையை இஸ்திரி பண்ணிக் கொண்டிருந்த உஷா பெட்டியை நிற்க வைத்துவிட்டு, கணவனை ஏறிட்டாள்.

"வாட் ஆர் யூ ஸேயிங்?"

"காலைல எங்கம்மா வத்தளாவை குளிப்பாட்டி ஆசையா ட்ரெஸ் பண்ணி விட்டிருக்காங்க. பத்து நிமிஷத்துக்கெல்லாம் 'பத்ரகாளி மாதிரி யார் இப்படி மை தீட்டினது?'னு கேட்டு குழந்தையை அழைச்சிட்டுப் போயி திரும்ப முகம் கழுவி, உடை மாத்தி உங்கம்மா ட்ரெஸ் பண்ணாங்களாம். ஏன், எங்கம்மாவுக்கு ட்ரெஸ் பண்ணத் தெரியாதா? அவங்க இரண்டு பெண்களை வளர்க்கலையா? அட அப்படியே காமா சோமானு செஞ்சிருந்தாலும் போனாப் போவுதுனு விடறது இல்லங்களா? இத்தனை மாசமா செஞ்சி விடறாங்களே."

உஷா அடி உதட்டை ஒருதரம் கடித்தாள். புருவங்கள் சுருங்க விளைவினாள்

"ஆமா, இந்த விவரமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"டாக்டர் வீட்டுக்கு கூட்டிகிட்டுப் போனப்போ அம்மா சொல்லி வருத்தப்பட்டாங்க."

"அப்ப, அம்மாவும் பிள்ளையும் தனியா வெளில போறப்ப எல்லாம் எங்க மண்டை உருளுதுனு சொல்லுங்க."

கோபமும், கையாண்டியும் கலந்த குரலில் உஷா கேட்க ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மாதவன் அப்படியே நின்றான். பின், "நீயும்

உங்கம்மாவும் சமயம் கெடைக்கறப்ப எல்லாம் நகருகறு பேசறது எனக்குத் தெரியாதுனு நினைக்காதே; அது மட்டும் ரொம்ப நியாயமா?" என்று கத்தலாகக் கேட்டான்.

உஷா நிமிர்ந்தாள். இந்த கத்தலுக்கு எல்லாம் பயப்படும் ஆசாமி நான் இல்ல என்பதுபோல ஒரு பார்வை பார்த்தாள். இஸ்திரி பண்ணுவதைத் தொடர்ந்தாள்.

இது நடந்த இரண்டாம் நாள் இன்னும் ஒரு வாக்குவாதம்.

"உங்கம்மா வரலா மனசுல என்ன காரம் நினைச்சிட்டு இருக்காங்க உஷா? கலத்து விடப்பட்ட எனைவை தமைக்கறதும், தானே எடுத்து போட்டுகிட்டு சாப்பிடறதும், ஏதுடா கூட இன்னொருத்தர் இருக்காங்களே அவங்களை மரியாதைக்காவது கூப்பிடலாம்ங்ற உள்ளுணர்வு இல்லாம நடந்துக்கறதும், ச்சேச்சே கொஞ்சம்கூட நல்லா இல்லே."

"பெரிசா உசண்டி பத்தி பேசலந்திட்டீங்களே. உங்கம்மா கிட்ட அது இருக்கா? எங்கம்மா எதாவது கேட்டா, முகத்தை பாத்து பதில் சொல்றது இல்லே; சொலவத்தைப் பாத்து பேசறது; இல்லாட்டி ஆயிட்ட பேசறது. இது மட்டும் ரொம்ப உசண்டான பழக்கமோ?"

"பின்னே, வலிய வம்புச் சண்டைக்கு இழுக்கறவங்க கையை பிடிச்சிக்கிட்டு கொஞ்ச சொல்றியா?"

"கொஞ்சவும் வேணாம் குலாவவும் வேணாம். மேலவிழுந்து பிடுங்காம இருந்தா சரி."

"அப்ப எங்கம்மாவ நரினு சொல்றே?"

"புரிஞ்சா சரி"

கோபம் தாளாமல் பட்டென்று கதவை அறைந்து சாத்திக் கொண்டு மாதவன் வெளியில் போக, உங்கள் கோபம் என்னை என்ன செய்யும் என்கிற திமிருடன் உஷா நின்றாள்.

அன்றைக்கு உஷாவை அழைக்க மாதவன் கல்லூரிக்கு வரவில்லை.

ஆறுமணி வரையிலும் காத்துப் பார்த்துவிட்டு ஸூட்கேஸை வைத்துக் கொண்டு அவள் வீட்டுக்கு வந்த போது, ஐந்துக்கே மாதவன் திரும்பி விட்டதாகவும், அம்மாவும் பிள்ளையுமாக வெளியில் போயிருப்பதாகவும் பாரதி விவரம் சொன்னாள்.

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே, உஷா. உங்க மாமியாருக்கு நாக்கு பூரா விஷம். நா மட்டும் இங்கே இல்லேன்னா, பிள்ளைய முந்தானைல முடிஞ்சிட்டு, உன்னை நாறடிச்சிடுவா. சரியான எமன் முதுகுக்குப் பின்னால மாப்பிள்ளையப் பெண்டாட்டி காசன், சரியான கோழை, பயந்தாங்கொள்ளி அப்படி இப்படினு திட்டிட்டு, நேர்ல பாத்தா மட்டும் தேனா ஒழுகறா. 'காபி சாப்பிடு தம்பி. டிபன் சாப்பிடு தம்பி. ஒருவாய் சரியா சாப்பிடறியானு' கவனிக்கக் கூட நாதி இல்லாம இருக்குறியே!' புலம்பல் வேற இந்த மாதிரி நாலு பொம்பளைங்க இருந்தா ஒரு வீடும் உருப்படாது. சரி சரி அவ பேச்சு இப்ப எதுக்கு? சின்னிகுட்டி கேட்டாளேனு தேங்காய்பர்பியும், ஓமப் பொடியும் செஞ்சிருக்கேன். கைக் கழுவிகிட்டு வா. கொடுக்கறேன்."

கனைத்துப் போன மனசுக்கு அம்மாவின் உபசரணையும் குழையான பதார்த்தங்களும் இதமாக இருக்க, மீபேன் அடியில் உட்கார்ந்து சாப்பிட்டு, உஷா காபி குடித்தான்.

"அவங்க எங்க போயிருக்காங்க, தெரியுமாம்மா?"

"எனக்கு என்ன தெரியும? சொல்லிட்டா போறாங்க? ஆயா பெரிய மனுஷி பாரு. அவகிட்ட 'போயிட்டு வரேன்'னு ரொம்ப கரிசனையா சொல்லிட்டுபோறாங்க"

காலி டம்ளரை கீழே வைத்த உஷா ஒரு தர்ம்சங்கடமாய் நெளிந்தான்.

"எல்லாரு கலகலப்பா இருந்த வீடு இப்ப இப்படி ஆயிடிச்சேனு நினைச்சா வருத்தமா இருக்கும்மா."

"அதுக்கு நாம என்ன செய்யறது உஷா? எல்லாத்திலேயும் நா அனுசரிச்சுகிட்டுதான் போனேன். குளிய குட்டுவேண்டு பிடிவாதம் பண்ணினா, நானும் மனுஷிதானே! இவங்களுக்கு சமையல்காரியா, வேலைக்காரியா இத்தனை மாசத்துல இருந்து பழகிட்டதால, நா சம்பந்தியம்மாங்கறதே அவங்களுக்கு மறந்து போச்சு. வேலைக்காரிய ஏவற மாதிரி அதை என்னை பேச பேச நாங்க? அவங்க பேசற ஏவல்களை நானாக் கொண்டு பொறுத்துக்கறேன். இன்னொருத்தியானா, செய்முறை பதினுக்கு கொடுத்திடுவா?"

"நீ மட்டும் ஏம்மா கேட்டுக்கணும், கலை எழுத்தா? மரியாதை கொடுத்து பழகினா, நீயும் மரியாதையாக இரு. இல்லேன்னா எதுக்கு?"

பாரதி புடவைத் தலைப்பால் லேசாக்கியிருந்த மகளின் முகத்தைத் துடைத்தாள்.

"எல்லாம் உனக்காகத்தான் உஷா. நீ நல்லா இருக்கணுமே, சுஷ்டப்படாம இருக்கணுமேனுதான் எந்தக் கழுதை எந்தப் பேச்சு பேசினாலும் வாயத் திறக்காம அடங்கிப் போறேன். வேலைக்குப் போய் கனைச்சி வர்ற பொண்ணாச்சே குடும்பம் நடத்த சம்பாரிச்சி கொட்டற பொண்ணாச்சே, உனக்கு தனியாவது நிம்மதி வேணுமேனுதான் அத்தனையும் பொறுத்துக்கறேன். எதையும் உன் காதுல போடறதேயில்லே."

உஷா அம்மாவை இழுத்து, பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

"இன்னும் என்னம்மா நடந்திச்சு? என்கிட்டயிருந்து எதையும் மறைக்காத. சான் போயாச்சு, இனிமே முழம் போனாத்தான் என்ன? சொல்லு."

''வேணாம் உஷா?''

''சொல்லும்மான்னா.''

''தெருல ஒரு வீடு இல்லாம போயி இவங்க உன்னைப் பத்தி கன்னா பின்னானு சொல்லி இருக்காங்க உஷா. உனக்கு சம்பாதிக்கிற திமிராம். ஏணி வைச்சாலும் எட்டாத மாப்பிள்ளையை கண்ணை காட்டி மயக்கி வளைச்சி போட்டுகிட்டயாம். மாமியாரை ரொம்ப அதட்டி உருட்டி வைச்சிருக்கியாம். வாய்க்கு ருசியா ஒரு பதார்த்தத்தை சாப்பிட கூட விடமாட்டேன்றயாம். புருஷனை மதிக்காம இருக்கறியாம். ஐயோ, விடு உஷா. அவங்க சொன்னதை எல்லாம் திருப்பிச் சொல்லக்கூட வாய் கூசுது. அவ அவ வந்து கேட்குறப்ப நா கூனிப் போயிட்டேன். தங்கமான பொண்ணைப் பத்தி என்னமா அபாண்டமா பேசியிருக்காங்கனு துடிச்சிப் போயிட்டேன்.''

உஷாவிடம் உட்கார்ந்து சம்பத்தியம்மாளைப் பற்றி நீளமாய், பாரதி புகார் படித்த அதே நிமிஷத்தில் அவளைப் பற்றி சொர்ணம் மகளிடம் குறை சொல்லிக் கொண்டிருந்தாள்.

இருவரும் பீச்சில் கொஞ்ச நேரம் தங்கிவிட்டு, புகாரி ஸூஃப் கார்டனில் அமர்ந்திருந்தனர்.

''எனக்கென்னவோ, திரும்ப நா கோயமுத்தூருக்கே போயிடலாமோனு தோணுது தம்பி. அங்க மாமா வீட்டுலே விழுந்து கிடக்கறது எல்லோருக்குமே நல்ல தோனு பாக்கறேன். 'இங்கயே இரு'னு அவன் அப்பவே சொன்னான். மீறி வந்தது தப்புனு இப்பத்தான புரி...''

மாதவன் அவளை முடிக்க விடாமல் அவசரமாய்ப் பேசினான்.

''பிள்ளை கிட்ட இருக்கறதை விடவா, தம்பியோட நங்கறது உசத்தி?

''உசத்தி மட்டத்துக்கே நா சொல்லலை மாது. இங்க நா இருக்கறது யார் யாருக்கோ உறுத்துது இந்தக் கஷ்டம் வேணாம்னுதான் போயிட நினைக்கிறேன்.''

''பிள்ளை வீட்டுலே அம்மா இருக்குறது எவளுக்கு உறுத்துது? சொல்லுங்க; உதைச்சிட்டு மறுவேலை பார்க்கறேன்.''

''வேணாம் தம்பி. எக்கவே எனக்கு ராட்சஸினு பேர் கட்டி இருக்காங்க இன்னும் இந்தப் பழி வேறயா?''

''யாரும்மா உங்களை ராட்சஸின்றது? அத்தையா?''

பதில் பேசாமல் சொர்ணம் தலை குனிந்து கொண்டாள். கண்களில் மிதந்த நீரை நலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

''புதுசா இன்னிக்கு ஏதாச்சும் சொன்னாங்களாம்மா? அதுதான் நான் பூரா காப்பிடாம பட்டியா கிடந்திங்கனா?''

''புதுசா சொல்ல இலி என்ன இருக்கு? வாய்க்கு வந்ததை சதா பேசிகிட்டேதானே இருக்கறா! என்ன மட்டும் ஏதாச்சும் சொன்னா எனக்கு கவலை இல்லே நம்பி,... உன்னையும், உங்கப்பாவையும் சேர்த்து இல்ல பேசறா... நாமெல்லாம் ராட்சஸ குணம் படைச்சவங்களாம். ஈவு இரக்கம், இல்லாதவர்களாம். விட்டா, பிடிக்காத மனுஷங்களை அடிச்சி நின்னு காலுக்கடியே போட்டுப்பமாம். அதுவும் அக்காங்களுக்கு பணம்தான் குறியாம் புருஷனை ராதிகா குரங்கா ஆட்டி வைக்கறாளாம், தான் படுத்தி படுத்தித்தான் உங்கப்பாவுக்கு மனசே சரியா இல்லாம போச்சாம். அந்த வேதனைல நற்கொலை பண்ணிக்கிட்டாராம். தவறி விழுந்து சாகலையாம் இன்னும்...''

பேச முடியாமல் தொண்டை அடைத்துப் போய் சொர்ணம் தவிக்க, தண்ணீர் டம்ளரை எடுத்து அம்மாவிடம் மாதவன் நீட்டினான்.

"அத்தம்மா இத்தனை கிழ்தரமாவா பேசறாங்க? எம்மா நீங்க எனக்கு முன்னமே சொல்லலை?"

எப்படிடா சொல்றது? நா பெத்த பிள்ளை... நீ சந்தோஷமா இருக்கறது எனக்கு முக்கியமில்லியா? நா எதையாவது சொல்லப் போக, நான் பூரா உறவ்ச்சி களைச் சிட்டு வர்ற உனக்கு இருக்குற நிம்மதியும் போயிடிச் சின்னா, இது எனக்கு வேதனையைத் தராதா? எது எப்படிப் போனாலும் இதான் எனக்கு வேணும். இதுக் காக எந்த கழிசடை என்ன சொன்னாலும் நாங்கேக்க நா தயார். எதுவும் உன் வரைக்கும் வரக்கூடா துன்ற வைராக் கத்தோட கல்லா இருந்தேன். இன்னிக்கு என்னமோ பலகீனம். நீ என்னம்மான்னு கேட்கவும், மனசு பொறுக் காம நிலமை சொல்லிட்டேன்."

மாதவன் அம்மாவை வெறித்தான்.

"நிலமுன்னா! அப்ப, இன்னும் எனக்குத் தெரியாதது என்னென்னமோ இருக்கு, அப்படித்தானே?"

"ஒண்ணுமில்லேடா நம்பி, விட்டுடு."

"விடமாட்டேன். நீங்க சொல்லித்தான் ஆகணும்."

"ஹூம். எல்லாம் நம்ப போறாத காலம்பா. சாக்க டைல கல் எறிஞ்சா அது வாரி இறைக்காம என்ன செய் யும்? நீ எத்தனை உசத்தியா அந்தை அத்தைனு கொண் டாடறே. அது புரியலையே அந்த ஜன்மத்துக்கு? தெருல ஒரு வீடு பாக்கி இல்லாமே ஏறிப் போய், நம்பளைப் பத்தி என்னா பின்னாடி பேசியிருக்காடா. குழந்தைய பார்த் துக்க காசு குடுத்து ஆயா வைக்க கஞ்சத்தனப்பட்டுகிட்டு நீ அவளை கூட்டிகிட்டு வந்தியாம்! இந்த வீட்டுல காசு வாங்காத வேலைக்காரியாம் அவ. காலைல அஞ்சுக்கு எழுந்தா, பத்து வரைக்கும் மாடா உழைக்க வேண்டி இருக்காம். அவ பக்கத்து உறவு மனுஷாள் வீட்டுலே விசே மென்னா கூட அனுப்ப மாட்டேன்றியாம். இவ்வளவு வேலை பண்ணி, குழந்தையை பொறுப்பா

பாத்துக்கறவளை நீ மரியாதையோட நடத்தல்லையாம். கிழிஞ்ச பாடலையைத் தைக்க கூடக் கறாளாம். நான் இழவெண்ணா கோயில் குளம் கூட போக முடியாதபடி ஒரு ஜெயில் கைதி மாதிரி நீ வச்சுக் கிட்டு இருக்கியாம். அப்புறம் சனி, வெளாட்டு தம்பி, விட்டுடு அந்தக் கூறு கெட்ட ஜன்மம் பேசினதை நிருப்பு சொல்லக்கூட என் நாக்கு கூசுது. தெருக்காரங்க 'மாமி யாரை மாது தங்கத்தாம்பாளத்துல தாங்கறது எங்களுக் குத் தெரியாதா? உத்தமமான அந்தப் பிள்ளையப் பத்தி இவங்க இப்படிப் பேசலாமேன்னு' வருத்தப்பட்டு கேட்டப்போ நா கூனி குறுகிப் போயிட்டேன். இப்படி யெல்லாம் அனுபவிக்கணும்னு நம்ம தலை எழுத்து. விடு தோழிக்கறி ஆறது. சாப்பிடுப்பா. ம்ம்."

இப்படி இங்கே சொர்ணமும், அங்கே பாரதியும் ஒன்றைப் பத்தாக்கி, கண், மூக்கு, காது வைத்து பின்னை பெண்களுக்கு நன்றாக கொம்பு சீவி விட்டதில் அன்றிரவு இருவரும் சந்தித்துக்கொண்டபோது, சண்டைக் காளை களாக மோதிக் கொண்டதில் அதிசயம் என்ன?

8

கிட்டத்தட்ட ஒன்பது மணி அளவில் தாயுடன் மாத வன் வீட்டுப்படி ஏறின நிமிஷத்தில் தன்னைப் பெற்ற வளுடன் அவன் வருகைக்காக உஷா கூடத்தில் காத்திருந் தாள்.

உள்ளே நுழைந்தவர்கள் செருப்பைக் கழற்றக் கூட அவகாசம் தராமல் "எங்க போய் ஊர் சுத்திட்டு வரீக்க அம்மாவும், பிள்ளையும்?"—என்று உஷா வினவ, தலை முடியை இடக்கையால் ஒதுக்கியபடி மாதவன் அடக்கிய மாய்ச் சிரித்தான்.

"எங்க வேணா போயிட்டு வருவோம்— அதப்பத்தி உனக்கென்ன?"

"எனக்கென்னவா? நா உங்க லொய்ஃப். உங்க சுத்தற புருஷனை ஏன்னு கேட்க, தாலின்ற லைசன்ஸ் எனக்கு இருக்கு."

"உங்க மேயற பழக்கமும், தெருவில் ஒரு விடு விடாம வம்பு பேசிட்டு வர்ற வழக்கமும் உங்க ரத்தத்துலதான் ஓடுது. எங்களுக்கு இல்லே."

"அடி சக்கைன்னானாம் நான் சொல்ல வேண்டிய டயலாக் நீங்க சொல்லிட்டீங்கன்றதுக்காக அது நிஜமாயிடுமா?"

"நீ பேசறது வேணா டயலாக்கா இருக்கலாம். ஆனா, நா சொன்னது நடக்கறதுதான்."

"என்ன நடக்கறதுதான்! அதையே திருப்பிச் சொல்ல எனக்கு ரெண்டு செகண்ட் ஆகாது முதல்ல நா கேட்ட கேள்விக்கு பதிலை சொல்லுங்க. இத்தனை நாழி எங்க சுத்திட்டு வாறீங்க?"

"எங்கயோ போவோம். வருவோம். இது அம்மா பிள்ளே விஷயம். உனக்கு என்னே?"

"எனக்கு ஒண்ணுமில்லே. உன்னைத்தான் சுத்துங்க, இல்ல உலகத்தையேதான் வலம் வாங்க. எனக்கு ஒண்ணும் அக்கறை இல்லே. ஆனா, பத்து மணிக்கு மேலே வந்து 'சோத்தைப் போடு'ன்னு அதிகாரம் பண்ணறது மட்டும் இங்க வேணாம். இது என்ன ஹோட்டலா? இங்க இருக்கறவங்க உங்களுக்கு வேலைக்காரியா? பொழுதோட வந்து சோத்தை தின்னிட்டு, ராத்திரி பூரா பேயா சுத்துங்க, எனக்கு என்ன?"

இது வரையும் சும்மா இருந்த சொர்ணம் பதறினாள்.

"பார்ரா தம்பி பார்ரா, உன் காது படவே என்னை பேய் பிசாசுன்னு சொல்றாடா."

"நீங்க இருங்கம்மா. இன்னிக்கு ஒண்ணு இல்லே ரெண்டு பாத்துட்டுதான் மறுவேலை. என்ன, என்ன சொன்னே? சோத்தை கொட்டிவிட்டு வெளிலே போறதுதானே? இன்னிக்குப் பூரா எங்கம்மா கொலைபட்டினி, தெரியுமா உனக்கு? காலையிலேந்து பச்சை தண்ணி வாயில படாம கிடந்திருக்காங்க. தெரியுமா உனக்கு? வாயமட்டும் இழியுதே பெரிசா, சோத்தை பொழுதோட சாப்பிடறது தானேனு."

"உங்கம்மா பட்டினிதான் கிடப்பேன்னு பிடிவாதம் பண்ணா, அதுக்கு யார் மேல பழி போடறீங்க? இவங்களுக்கு சமைக்க, உபசாரம் பண்ண, வாட்டிவிட மத்தவங்க என்ன வேலைக்காரியா? நானும் தெரியாமத்தான் கேக்கறேன்?"

"அதுக்காக? தனக்கு வேணுன்றதை சமைச்சிக்கிடு தான் மட்டும் சாப்பிட்டு எழுந்திருக்கறது ரொம்ப நல்ல பழக்கமா?"

"தனக்கு மட்டும் அவங்க எங்க சமைச்சிக்கிட்டாங்க? நான் சாப்பிட்டிருக்கேன், நீங்க சாப்பிட்டிருக்கீங்க. சின்னி சாப்பிட்டிருக்கா; நமக்கெல்லாம் சமைச்சது கண்ணுல படலியா?"

"இத்தனை பேருக்கு சமைச்சவங்களுக்கு எங்கம்மாவுக்கு பண்ணிப் போடறது மட்டும் பெரிய வேலையா போயிடுச்சா?"

"இதுல கூப்பு தூக்கல், அதுல மிளகா கம்மிஙு வேணும்னு குத்தம் குறை சொல்றவங்களுக்கு எங்கம்மா சமைச்சி போடணும்னு விதி ஒண்ணும் இல்லே. ஆளாவ முட்டை வாங்கிவரச் சொல்லி, தோசை ஊத்தி சாப்பிடத் தெரிஞ்சவங்களுக்கு, தனக்கா ஒரு சாம்பார், ரசம் வைச்சுக்கத் தெரியலையா?"

இதற்குள் சமையல்கட்டுக்குத் தண்ணீர் குடிக்கச் சென்ற சொர்ணம் கையில் இரண்டு டப்பாக்களுடன் வேகமாய் வந்தாள்.

"பார்ரா மாது. நாம அத்தண்டை போனதும் இவ மகளுக்காக செஞ்சி வச்சிருக்கிற பலகாரங்களை? எங்க தான் பதுக்கி வச்சிட்டு அம்மாவும், மகளுமா தின்னு தீப்பாங்களோ? ஐயோ... ஐயோ... என் மகன் சம்பாரிக்குறதெல்லாம் இப்படி அநியாயமா வீணாருதே. கேட்பாரில்லையா?"

இப்போது ஓதுங்கி நின்றிருந்த பாக்ரதி கீர்ணமுடன் முன்னால் பாய்ந்தாள்.

"உங்க மகன் மட்டும் சம்பாரிக்க இந்த குடும்பம் நடக்கலை"

"என் மகனும் உடம்பு தேய சம்பாரிச்ச காசைக் கொட்றா. நினைப்பு வைச்சுக்கங்க."

"அதுக்காக டப்பா, டப்பாவா இப்படிப் பலகாரங்களைப் பண்ணி கொட்டிக்கறீங்களே; இது அடுக்குமா?"

"நீங்க மட்டும் முட்டையும், கறியும், கோழியும் ஆயாவ வாங்கி வரச் சொல்லி மத்தியான பொழுதுலே நா அந்தண்டை, இந்தண்டை போயிருக்குறப்போ முழுங்கறீங்களே, இது ரொம்ப நியாயமா? இதுக்கு மட்டும் பணம் தோட்டத்துல விளையுது இல்லே?"

உட்கார்ந்திருந்த மாதவன் எழுந்து நின்றுகத்தினான்.

"நா சம்பாரிக்கிறேன்—எங்கம்மாவை வாய்க்குப் பிடிச்சதை வாங்கி சாப்பிடச் சொல்றேன்—இதுல அனாவசியமா நீங்க தலையிடாதிங்க. எனக்கு என்ன பயம்? இப்பகூட நாங்க புகாரிலேந்துதான் வர்றோம், பில் எவ்வளவு தெரியுமா? இருபத்தி எட்டு ரூபா? அப்புறம்?"

"உங்களுக்கு இவ்வளவு திமிர் இருக்கலாம்னா சம்பாரிக்கற நா மட்டும் ஏன் அடங்கணும்? நானும் ஆயிரம் ரூபாய்க்கு மேலேயே சம்பாரிக்கறேன். இன்னிக்கு என்னம்மா செஞ்சிருக்கே? ஓமப் பொடியும், பர்ப்பியுமா? நாளைக்கு அரை கிலோ பாதம் பருப்பு வாங்கித் தரேன். ஹல்வா பண்ணு; ஜமாய். நாம யாருக்கும் குறைஞ்சலங்க இல்லே. ஞாபகம் வைச்சிக்க."

மாதவன் தலையில் கை வைத்து அடித்துக் கொண்டான்.

"தப்பு பண்ணிட்டேன்மா. தெரியாம தப்பு பண்ணிட்டேன். எதையோ குளிப்பாட்டி நடுக்கூடத்தில் வைச்சாலும் அதி வாளைக் குழைச்சிவிட்டு எதையோ திண்ணத்தான் போகும்னு சொல்றது என் விஷயத்துல சரியாயிடிச்சி. தப்பு பண்ணிட்டேன்மா. என்னை மன்னிச்சிட்டாங்க பாருங்க"

"டவுன்! நாமெல்லாம் நாய் ஜன்மமாம். மாப்பிள்ளை சொல்றார், கேட்டுகிட்டியா?"

"இருந்திட்டு போறோம்மா. அதுக்கு தண்டனையாவது இருக்கும். இவங்க மாதிரி கண்டதை தின்னுவங்களா இல்லாத வரைக்கும் சரி..."

"டவுன்..."

கோபம் தாளாமல் மாதவன் கத்த "இந்த கத்தலுக்கெல்லாம் நா பயப்பட மாட்டேன். ஓடவும் விரட்டவுங்க கிட்ட எதுக்காக பணிஞ்க போகணும்?" என்று பதிலுக்கு அவளும் கத்தினாள்.

"ஓடவும் விரட்டலை. குனியவும் குட்டலை. யாரைக் குத்தம் சொல்லி என்ன பிரயோஜனம்? என் வீட்டுச் சோத்தை உட்கார்ந்து திங்கறீங்க இல்லே அதான் கொழுப்பு."

"சும்மா ஒருத்தரும் உட்கார்ந்துகிட்டு திங்கலை மாது. வார்த்தைய அளந்து பேசுங்க."

"பின்னே எதுக்காக உங்கம்மா எல்லார்ட்டயும் போயி 'நா, இந்த வீட்டுல சம்பளம் இல்லாத ஆயா'னு சொல்றாங்களாம்?"

"அதுல தப்பு என்ன? அவங்க ஆயா தானே? அந்த வேலைய பாக்கத்தானே நீங்க மாமியாரைக் கனிசமா தோட கூப்பிட்டுகிட்டு வந்திங்க? வருந்தி வருந்தி அழைச்சிட்டு இப்ப உட்கார்ந்து சாப்பிடற திமிர், கொழுப்புனு

பேசறீங்களே இது உங்களுக்கு நல்லா இருக்கா? பெரிசா எங்கம்மா சொல்லைத எடுத்து விடறீங்களே-உங்கம்மா மட்டும் ரொம்ப சாது. ஒருத்தர் விடாம எல்லாரையும் கூப்பிட்டு வைச்சுட்டு 'உஷாவுக்கு சம்பாதிக்கிற திமிர், புருஷனை மதிக்கிறதில்லே, மயக்கி என் பிள்ளையை கைக்குள்ள போட்டுண்டா'ன்னு அரிக்க அரிக்கமா பேசறாங்களே, இத கண்டிக்க துப்பு இல்லே, பெரிசா என்கிட்ட வரிஞ்சு சண்டைக்கு வந்திட்டீங்க.''

''துப்பு, கிப்புலு பேசினா, நா பொல்லாதவளாயிடுவேன் உஷா.''

''இப்ப மட்டும் ரொம்ப நல்லவர் இல்லே? உண்மையைச் சொன்னா பொத்துகிட்டு வருது. ச்சே, நாக்குல நரம்பு இல்லாத ஜன்மங்க.''

''பார்ரா... பார்ரா இல எல்லென்னமோ சொல்லி நாம கேட்டுக்கனுமுன்னு தலையிடி இருக்கு பார்ரா.''

''நீங்க நாயிலு சொல்லி கேட்டுக்க எங்களுக்கு மட்டும் குளுகுளுலு இருக்குலு நினைச்சிங்களா சப்பத்தியம்மா?''

நேருக்கு நேராக பாகீரதி கேட்டுவிட சர்ரென்று சீறினாள் சொர்ணம்.

''சை! இன்னொரு தரம் என்னை சம்பத்தியம்மாலு சொல்லாதீத.''

''எனக்கு மட்டும் ரொம்ப ஆசை! த்தூத்தேறி உங்களை.''

ஆவேசத்துடன் பேச முற்பட்டவளை உஷா புகுந்து தடுத்தாள்.

''விடும்மா இவங்களுக்குச் சரியா பேச உன்னை தாழ்த்திக்காதே. பெண்ணைப் பாத்துக்க நீ தேவைப்பட்டப்போ, குழைஞ்சாரு; இப்ப அம்மா பக்கத்துல

நிக்கற தைரியத்துல எடுத்தெறிஞ்சு பேசறாரு. இவர் குணம் தலைல புரிஞ்சு போச்சு. இதோடு விடு இவங்கிட்ட நமக்கு என்ன?'' என்றவள் அம்மாவின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.

அன்றிரவு மாதவன் தந்தை அறைக்குள் வரவேயில்லை. கூடத்தில் படுத்துக் கொண்டு கண்ணீர் வெண்டு இமைகளும் 'அம்மா' என்று தாயாரையும் அழைத்துப் பேசினான்.

மறுநாள் காலை போட்டி போடுவது போல சொர்ணம் ஐந்துக்கெல்லாம் எழுந்து காபி போட்டு விட்டு, மகனுக்கும் தனக்கும் கலந்து எடுத்துக்கொண்டு நடுக்கூடத்தில் உட்கார்ந்து லேண்டுமெண்டே உரக்கப் பேசினாள்.

''எல்லாரையும் வைக்கற இடத்துல வைக்கணும்லு இன்னியாவது நீ புரிஞ்சுகிட்டா சரி தம்பி. என்ன மனசுலே நினைச்சிகிட்டு இந்த ஆட்டம் போடறாரை எனக்கு கையலைலையா? காரியம் பண்ணி பழக்கம் இல்லையா? நா எட்டு மணிக்கு செய்லேன் தப்பி இவனுக நமலு நமக்கு எதுக்கு? போனா போவுது இத்தனை நாளா நாட்டாண்மை பண்ணி பழகிட்டானேலு விட்டுக் கொடுக்கப் போக, தலைல மொளகாய் இல்ல அரைக்குறா? நாம என்ன ஏமாந்த சோணகிரிகளா? இப்ப அஞ்சுக் கெல்லாம் காபி குடிக்கலையா? இந்த மாதிரி எல்லாத்தையும் நாமளே செஞ்சிகிட்டா, போலுது.''

பேசியதோடு நிற்காமல், ஆயா வந்தவுடன் முதல் வேலையாக ஆட்டுக்கறி வாங்கி வரச் செய்து, சமையல் கட்டில் உட்கார்ந்து அதை நறுக்கினாள்.

பாகீரதிக்கும், உஷாவுக்கும் அறவே பிடிக்காது என்று தெரிந்தும் வேண்டுமென்றே வீட்டுப் பாத்திரங்களை எடுத்து கறி குழம்பு வைக்க பயன்படுத்திக் கொண்டாள்.

காலை எட்டுக்குள் கறிக் குழம்பின் மணம் வீடு பூராவும் பரவி விட, முதல் நாள் பாகீரதி அரைத்து வைத்

திருத்த இட்லிமாவை எடுத்து ஊற்றி, ஆபீஸுக்குத் இளம் புது மகனுக்கு கடச்சுட பலகாரம் பரிமாறினாள்.

''சாப்பிடு கப்பி. இனி நாம யாரும் பயப்பட வேணாம். இலங்கைக்காக நம்ம நாக்கை அடக்கிகிட்ட துக்கு மரியாதை போனதுதான் மிச்சம். இனி நாம இருக்க குறைதான் இருப்போம் என்ன சொல்றே நீ?''

அட்டகாசமாக அம்மா பேசியது, உஷாவின் பேச்சு, நடத்தையால்— புண்பட்டுப் போயிருந்த மாதவனின் மனசில் குஷியை உண்டு பண்ண சிரித்தபடியே வயிறு முட்ட சாப்பிட்டு, அவன் புறப்பட்டான்.

உஷா அன்றைக்கு காலேஜுக்குப் போகவில்லை.

கடைக்குப் போய் இரண்டு ஸ்டவ், சில புது பாத்திரங்களை வாங்கி வந்தாள். சாப்பாட்டு அறையில் ஒரு மேஜை போட்டு அவைகளை வைத்து ''இந்த வீட்டிலே நமக்கு இல்லாத உரிமையாம்மா? நீ பாட்டுக்கு சாம்பார், ரசம், பொரியல் பண்ணு. அடுப்பையும் பாத்திரங்களையும் எடுத்துக்கிட்டா நாம பட்டினி கிடந்திடுவோம்ன்ற நினைப்பா? என்னமோ சொல்வாங்களே, பீப்பை ஒளிச்சு வைச்சா கல்யாணம் நின்றிடுமான்ற மாதிரி இவங்க என்னதான் நினைச்சுகிட்டு இருக்காங்க அதையும் பாத்திடுவோம். என் சினேகிதி ஹஸ்பண்ட் இண்டியன் ஆயிலில் இருக்காரு! செகண்ட் எலிண்டருக்கு ஏற்பாடு பண்ணேன்னு சொல்லி இருக்கா, நாளைக்கே அவகிட்ட அந்த கணத்திருந்து நிலைமையை விளக்கி, இன்னொரு சிலிண்டர், அடுப்பு வாங்கிட்டா போவுது. நீ கவலைப் படாதம்மா'' என்று அடித்து பேச அந்த கணத்திலிருந்து அந்த வீட்டில் இரண்டு சமையல்கள் என்பது திர்மான மாயிற்று.

இப்படி, தனி படுக்கை, தனி சமையல் என்று ஆகி, ஒரு நாட்கள் ஆன பிறகு குழந்தையை பாகீரதி 'சின்னி' என்று அழைப்பதை 'ஏன் பன்னினு கூப்பிடலாமே

இன்னும் நல்லா இருக்குமே?' என்று சொன்னாள். பன்னை, ஆமா உங்க புத்திக்கு அதுதான் எடுக்கும்' என்று பாகீரதி பதில் கூற அன்றைக்கு மாதவனும், உஷாவும் வீடு திரும்பியபோது, ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்து இருவரும் அழுது, மற்றவர் மேல் கன்னா பின்னா வென்று புகார் சொல்ல, இதன் காரணமாய் உஷா கத்த, உணர்ச்சி வயப்பட்டுப் போன மாதவன் கை நீட்டி அவளை அடிக்க... பிறகு என்ன?

சண்டைதான், அழுகைதான், இப்படி கோபம், ஏசல், வாக்குவாதம் என்று நாட்கள் நகர்கையில் இருக்கிற அமர்க்களம் போதாதென்று மாதவனுக்கு ஊட்டி ஆராய்ச்சிக்கூடத்துக்கு ட்ரான்ஸ்பர் ஆன சேதியும் சேர்ந்து கொண்டு நிலைமையை இன்னும் அதல பாதாளத்துக்குத் தள்ளியது.

9

காலை, மணி ஏழிருக்கும்.

கூடத்தில் படுப்பதையே வழக்கமாகக் கொண்டு விட்ட மாதவன், அம்மா கொடுத்த காபியைக் குடித்து பேப்பரில் புத்தி பதியாமல் அந்த வழியாக சமையல்கட்டுக்குச் சென்ற உஷாவை ''ஏய்'' என்று குரல் கொடுத்து நிறுத்தினான்.

ரொம்ப நாட்களாக ஒருவருடன் ஒருவர் முகம் கொடுத்து பேசாத காரணத்தால் கண்களை தழைத்தபடியே ''உன் கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்'' என்றான்.

உஷா இரண்டடி வைத்து கிட்டத்தில் வந்தாள்.

''அது என்ன 'ஏய்?' லேலைக்கார குட்டிய கூப்பிடற மாதிரி 'ஏய்?' என் பேர் உஷா, அதுகூட மறந்து போச்சா!''

''ஸ். காலங்கார்த்தா சண்டைய ஆரம்பிக்காத யேன், புண்ணியமா போகும்.''

''நா ஆரம்பிக்கலை. சும்மா போனவனை ஏய், தலையை கூப்பிட்டு நீங்கதான் வம்புக்கு இழுத்தீங்க.''

''உனக்கு சாதாரணமா பேசறதே மறந்துபோச்சா, உஷா?''

எரிச்சலுடன் விளையாடலை உஷா அழுத்தமாகப் பார்த்தான்.

'விஷயத்தைச் சொன்னா தேவலை, எதுக்காகக் கூப்பிட்டீங்க?''

மாதவன் துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டான். அவளை நிமிர்ந்து பார்க்காமலேயே பேசினான்.

''எனக்கு ஊட்டி டிசர்ச் செண்டருக்கு மாத்தல் ஆயிருக்கு.''

''சந்தோஷம்.''

''வர்ற ஒண்ணாந் தேதிக்குள்ள அங்க ட்யூடிலே ஜாயின் பண்ணியாகணும்.''

''சந்தோஷம்.''

''ஒண்ணாந்தேதிக்கு இன்னும் இரண்டு வாரம்தான் இருக்கு. மூட்டை முடிச்சுகளை இப்பவே கட்ட ஆரம்பிச்சாதான், சரியா இருக்கும்.''

''கட்ட ஆரம்பிங்க, யார் வேணாங்கறாங்க.''

அசிரத்தையுடன் உஷா பேசுவதாகத் தோன்ற, மாதவன் தலை நிமிர்ந்தான்.

''ஆரம்பிங்கனு சொன்னா என்ன அர்த்தம்? நானே ஒண்டியா அத்தனையும் செய்யணும், நீ வேடிக்கை மட்டேன்னா?''

''இல்லே. உங்க சாமானை, உங்களுக்குத் தேவையானதை நீங்க எடுத்திட்டுப் போங்கனு அர்த்தம்.''

''அப்படின்னா?''

''அப்படின்னா, நா ஊட்டிக்கு வரப்போறதில்லே. நீங்க மட்டும்தான் போகப் போறீங்கனு அர்த்தம்.''

சடக்கென்று எழுந்து நின்ற மாதவன் அவளை முறைத்தான்.

''ஓ! அந்த அளவுக்கு நீ துளுத்திட்டியா?''

''துளுக்கவும் இல்லே, சாயவும் இல்லே. இனிமே எப்படி இருந்தா நமக்கு நல்லதுனு தோணிச்சோ, அதைத்தான் சொன்னேன்.''

''அப்ப, நீ என்கூட ஊட்டிக்கு வர்றதா இல்லே?''

''ம்ஹூம். கண்டிப்பா இல்லே.''

''ஏன்னு நா தெரிஞ்சிக்கலாமா?''

''தாராளமா. எனக்குனு இங்க ஒரு வேலை இருக்கு. உங்களுக்கு மாத்தல் ஆயிடிச்சின்ற காரணத்துக்காக போட்டது போட்டபடி, அத்தனையும் விட்டுட்டு வர நா ரெடி இல்லே.''

''அப்ப, புருஷனை கவனிக்க அவன்கூட வர்றது உன் கடமைனு நீ நினைக்கலை.''

''சாப்பாட்டை கவலிக்கதான் ஒருத்தி தேவையா, அதுக்கு மனைவி வேணாம். வேலைக்காரிகூட போதும். ஆனா உங்களுக்கு அந்த கவலை ஏன்? அதான் உங்கம்மா இருக்காங்களே, உங்களை சீராட்டி கவனிக்கறதுக்கு.''

மாதவனும் கைகளை கட்டிக்கொண்டு இப்படியும் அப்படியும் உலாத்தினான். மீசையை வழித்து விட்டபடி பேசினான்.

''ஸோ, யூ ஹாவ் டு மைண்டட்.''

''எஸ், ஐ ஹாவ்.''

''நீ இவ்வளவு பிடிவாதமா இருக்கறப்போ, நானும் வெளிப்படையா பேசிடறதுதான் நல்லது. கொஞ்ச நாளாவே உன் போக்கு எனக்கு கட்டோடு பிடிக்கலை.''

''ஃபைன்ங்க்ஸ்''

''அம்மா சொல்றாப்பல சப்பாதிக்கதோம்ற திமிர் உனக்கு நிறையவே இருக்கு.''

''கண்டுபிடிச்சிட்டீங்களே?''

''காதலுக்கு கண்ணு தெரியாதுன்ற மாதிரி உன்னோட முதல்ல பழகினப்போ, இந்த குணாங்களை யெல்லாம் என்னால ஜீரணிச்சி, புரிஞ்சிக்க முடியலை.''

''வாட் எ ஷேம்!''

''இப்ப புரிஞ்சிடிச்சி. நல்லாவே புரிஞ்சிடிச்சி. அது மட்டுமல்ல, நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்றதுகூட சரியானது இல்லேன்றதும் புரிஞ்சிடிச்சி.''

உஷா கேலியாய் சிரித்தாள்.

''தேவலியே! ரொம்ப கச்சிதமா புரிஞ்சிவிட்டீங்களே என்னை இத்தனாலும் நீங்க அதிர்ஷ்டசாலிதான்.''

''ஷட் அப் ஐ ஸே; எனக்கு வர்ற கோபத்துக்கு.''

''என்ன பண்ணுவீங்க? அடிப்பீங்க அதானே? தடம் ஆல் யூ கான் டூ? ஒரு ஆம்பிளைன்ற திமிர்ல அதைத்தானே அப்பப்ப நீங்க செஞ்சிகிட்டு வந்திருக்கீங்க?''

''என்ன... என்ன'' என்று கோபத்துடன் விட்டை வந்த வளை உஷா தடுத்து நிறுத்தினாள்.

''அங்கேயே நில்லுங்க மாது. இட்ட வந்து, என்னை அடிச்சுப் பாத்திங்கன்னா, நா பெரிசாகத்தி பக்கத்து வீட்டுக்காரங்களைக் கூட்டிடுவேன். சும்மா மிரட்டா தீங்க. உங்க மிரட்டலுக்கு பயப்படற நா இல்லே.''

''யூ ப்ளடி பிட்ச்.''

''இருக்கட்டும். நா பிட்சாவே இருந்திட்டுப் போறேன். விஷயம் இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு நா மட்டும் ஏன் சும்மா இருக்கணும் சொல்லுங்க. எனக்கும் உங்ககூட சேர்ந்து வாழ விருப்பம் இல்லைதான். உங்களை ஒரு ஜென்டில்மேன்னு நினைச்சு காதலிச்சேன் கட்டிகிட்டேன். ஆனா என் கனவுக்கு தப்பாயிடிச்சி. அதுவும் இரண்டு முழு மாசமா நீங்க பேசற பேச்சையும், நடந்துக்கற விதத்தை யும் பார்த்து, ஐம் டிஸ்கஸ்டட், மனைவியை கைநீட்டி அடிக் கிறவர் ஒரு ஆம்பிள்ளையா? சே. ஒரு ஸாரி சொல்லக்கூட தெரியாத உங்களுக்கெல்லாம் ஒரு மனைவி, குடும்பம்.''

''எதுக்கு ஸாரி சொல்லணும்? என்னைப் பார்த்தாலே முகத்தை திருப்பிக்கிட்டு போற உனக்கு நா ஏன் ஸாரி சொல்லணும்?''

''பண்பில்லாம பேசி, அடிச்சதும் இல்லாம, மேல விழுந்து கொஞ்சணும்னு எதிர்பார்க்கறேளா? தட்ஸ் மேல் ஷாவனிஸம்.''

''கணவன்கிட்ட பேசத்தராம்ன்ற பயம், மரியாதை இல்லாம, எதிர் வாயாடினா நிச்சயம் கைதான் பேசும்.''

''மனசு பேசாத— ஆனா கை மட்டும் பேசற புருஷனோட வாழ எனக்கு விருப்பம் இல்லே.''

''அடங்காப்பிடாரி மனைவி எனக்கும் தேவையில்லே.''

''வேணாம்னா, ஒதுங்கிடறதுதானே சரி?''

''எஸ், ஒதுங்கத்தான் போறேன். உன்னோட வாழ எனக்கு இஷ்டம் இல்லை. கணவன், மனைவி, என்ற முகமூடிகளை மாட்டிகிட்டு நாம போலியா வாழற வாழ்க்கை எனக்கு பிடிக்கலைனு நானே தினைச்சிகிட்டுதான் இருந்தேன். எப்படிடா இதை வெளிப்படுத்தறதுனு தயங்கிட்டு இருந்தேன். தாங்க்காட் யூ மேட் இட் ஈஸி.''

''உங்களுக்குப் பிடிச்ச இதையாவது என்னால செய்ய முடிஞ்சிதே ஐம் ஆல்ஸோ ஹாப்பி.''

அறையின் நீள அகலங்களை அளக்கிற பாவனையில் நடந்த மாதவன நின்றான்.

''இதுதான் முடிவுனு தீர்மானம் ஆன பிறகு, தொடர்ந்து நாம சேர்ந்து இருக்க வேண்டிய அவசியம் என்ன? என் சாமான்களை பாக் பண்ணிகிட்டு எவ்வளவு சீக்கிரம் கிளம்பறேனோ, அதான் நல்லது. இந்த நரகத்து லேந்து அம்மாவும் நானும் உடனே புறப்பட்டதைப்போல சந்தோஷமான விஷயம் வேற ஒண்ணும் இல்லே.''

பேசிக் கொண்டே போன மாதவன் திடுமென நினைவு வந்த திசையில் ''ஹேய், வாட் அபௌட வந்தனா?'' என்றான்.

''அவளுக்கு என்ன?''

''அவ யாரோட இருப்பா?''

''ஏன் என்னோட தான். இத்தனை நாளா எங்கம்மாதானே அவளைப் பார்த்து கிட்டாங்க.''

''அவ என் பெண் கூட.''

''அடேயப்பா! அது ஞாபகத்துக்கு வர இத்தனை நாழி ஆச்சா?''

''ஷட் அப்; ஐ வாண்ட் மை டாட்டர் வித் மீ.''

''அது நடக்காது மாது. நின்னி என்கிட்டதான் இருப்பா. நீங்க இது விஷயமா பிடிவாதம் பண்ணினா, கோர்ட்டுக்குப் போகக் கூட நா தயங்க மாட்டேன். ரியலி, ஐமீன் இட்.''

கண்களை இடுக்கிக் கொண்டு வெறியுடன் உஷா பேச மாதவன் கொஞ்சம் பயந்து போனான்.

இரண்டு நிமிஷம் அப்படியே நின்று யோசித்தவன் ''இப்ப குழந்தையப் பத்தி வீணா ஏன் ஆர்க்யு பண்ணனும் முதல்ல நா உன்னோட வீட்டுக்குப் போயி செட்டில் ஆகறேன். அப்புறம் பேச வேண்டிய விதத்துல உன்னண்ட பேசிக்கறேன்'' என்று முடிவாகப்பேசிவிட்டு, அங்கு தொடர்ந்து நின்று அவளோடு பேசப் பிடிக்காத மாதிரி விருட்டென்று திரும்பி குளியல் அறையைப் பார்க்க நடந்தான்.

10

மாதவனும், உஷாவும் புறப்பட்டுப் போகும் வரை தம் தம் அறைகளிலேயே ரொம்ப சாதுவாகப் பதுங்கிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் தலை மறைந்ததும் பாகீரதியும் சொர்ணமும் மெதுவாக வெளிப்பட்டார்கள்.

இரண்டு பேர்களின் கண்களும் அழுததற்கு சாட்சியாய் சிவந்து போயிருந்தன.

உணர்ச்சி வசப்பட்டுப் போயிருந்த இதழில் உதடுகள் துடித்தன, கை விரல்கள் நடுங்கின.

முதலில் பாகீரதிதான் பேசினாள்.

''கேட்டிங்களா சம்பந்திம்மா இந்த அக்கிரமத்தை?''

கையை நீட்டிக் கொண்டு துக்கம் பொங்க அவள் கேட்க, ஓடிவந்து நீட்டிய கரத்தைப் பற்றிக் கொண்டு ''கலி முத்திடிச்சி சம்பந்தியம்மா, ரொம்ப முத்திடிச்சி, இல்லேன்னா இந்த மாதிரி அநியாயம் நடக்குமா?'' என்று சொர்ணம் பதறினாள்.

இருவருக்கும் அழுகை பொத்துக் கொண்டு பீறிட அதை அடக்கத் தெரியாமல் விசும்பிக் கொண்டே, கைத் தாங்கலாக ஒருவரை ஒருவர் பிடித்தபடி சோபாவில் உட்கார்ந்தனர்.

இவர்களுடைய அழுகையைக் கேட்டு என்னவோ, ஏதோ என்று சமையல்கட்டில் வேலையாயிருந்த ஆயா ஓடிவந்து ''என்னம்மா, ஏன் இரண்டு பேரும் கண் கலங்கறீங்கம்மா? ஐயோ, அம்மா சண்டையைப் பாத்தா? அதான் நினைக்கும் நடக்கற விஷயமாச்சுங்களே. இன்னிக்கு புதுசா எதுனாச்சும் சொல்லிட்டாங்களா? என்ன ஆச்சம்மா?'' என்று பாதி ஆர்வம் பாதி வம்பு

தலைந்த குரலில் வினவ பாகீரதியும், சொர்ணமும் தங்களை சுதாரித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

பின், சட்டென்று ''என்னவா இருந்தா உனக்கென்ன? உன் வேலையை பாத்துக்கிட்டுப்போ. வம்பு எங்க கிடைக்கும்னு அலை'' என்று பாகீரதி அதட்ட, அவளை ஏசுகிறுந்து அனுப்பி விடுவதுதான் உசிதம் என்கிற நினைப்பில் தலைப்பில் முடிந்து வைத்திருந்த பணத்திலிருந்து ஐந்து ரூபாயை எடுத்து அவளிடம் நீட்டி ''மார்கெட்டுக்குப் போயி அரை கிலோ உருளை, அரை கிலோ வெங்காயம் வாங்கிட்டு வா'' என்று சொர்ணம் பணிக்க, எதுவும் பேசாமல் ஆயா திருதிருத்தாள்.

இத்தனை மாசங்களாக வெட்டுப்பழி, குத்துச் சண்டை, என்றிருந்த சம்பந்திகள் இன்று திடீரென்று ராசி ஆனதும் அல்லாமல், இதுகாள் வரை தோழியாக பாவித்து குடும்ப சமாசாரங்களைப் பேசிவந்த தன்னையே விரட்டவும் செய்கிறார்களே, இது ஏன் என்ற குழப்பத்தோடு ஆயா பையுடன் நகர்ந்தாள்.

அவள போன பிறகு, தைரியமாய் சொர்ணம் குரல் எடுத்து அழுதாள்.

''இரண்டு பேரும் பேசிக்கிட்டதை கேட்டீங்களா சம்பந்தியம்மா? பிரிஞ்சிடப் போறாங்களாமே, இது தெய்வத்துகசே அடுக்குமா?''

''கேட்டேன் சம்பந்தியம்மா, காது நோக கேட்டேன் திமிர் பிடிச்ச கழுதை சம்பாதிக்கறோம்ன்ற திமிர். என்னமா புருஷனை எடுத்தெறிஞ்சி பேசிட்டா! ஊர் உலகத்துல எல்லாருக்கும்தான் மாப்பிள்ளை வராங்க, ஆனா என் மாப்பிள்ளை போல யாருக்கு அமைவாரு? தங்கம்னா தொக்க தங்கமாச்சே. இந்த மனுஷரை பிரிஞ்சி வாழறேன்னு இல சொல்றானே— புத்தி இப்படியுமா கெட்டுப் போகும்? ஐயோ தெய்வமே''

"என் மருமகளையே குத்தம் சொல்லாதீங்க; மாது மேலயும் தான் தப்பு இருக்கு. வேலைக்குப் போயி ஆயிரக் கணக்குல சம்பாதிக்கிற பெண்ணை இவன் கை நீட்டி அடிச்சது மட்டும் நியாயமா? என் பிள்ளையானாலும், நியாயம் தப்பினா எனக்குப் பிடிக்காது. இவ சம்பாதிக்கிறதாக வேணும், அதை வைச்சிகிட்டு வாங்குற பிரிஜ், கிரைண்டர், டிவி எல்லாம் வேணும் ஆனா அவ நிமிர்ந்து என்னு மட்டும் கேட்கக்கூடாது. அதானே? ஆமின்னான்ற திமிர்ல பேசினா? அதான் அவ பட்டுனு கேட்டா. என்ன தப்பு?"

பாகீரதி பதட்டத்துடன் சொர்ணத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"சரி, சரி, தப்பு இரண்டு பேர் மேலயும்தான். விடுங்க. இப்ப இவங்க பிரிஞ்ச வாழ முடிவு பண்ணிட்டாங்களே அதுக்கு என்ன வழி சம்பந்தியம்மா? பெரியவங்க நாமளாவது கூட இருந்து கிட்டு இவங்களை இப்படி நடக்க விடலாமா? புத்தி சொல்ல வேணாமா? உங்களுக்கு அப்படி என்ன கேடு வந்திடிச்சி? ஏன் பொழுது போனா சண்டையும் வாக்கு வாதமுமா இருக்கீங்களே கண்டிக்க வேணாமா?"

சொர்ணம் பெரிசாய் தலை ஆட்டினாள்.

"கண்டிக்கணும், அவசியம் புத்தி சொல்லணும். ஏன்னே? நாம எதுக்கு இருக்கோம்? அந்தக் காலத்துல நம்ம புருஷன் நர்பளை திட்டாத திட்டா, அடிக்காத அடியா? அத்தனையும் நாம பொறுத்துக்கலியா? ஒழுங்கரிச் சுக்கிட்டு போயி குடும்பம் நடத்தலியா? ஏதும் அந்தக் காலத்து மனுஷங்களுக்கு பொறுமை, நிதானம், அனுசரனை அதிகம். நீங்க என்னதான் சொல்லுங்க, இந்த காலத்துப் பிள்ளைகளுக்கு கடுகத்தனைகூட பொறுமை இல்லே. பொறுப்பு இல்லே. விட்டுக் கொடுக்கற

மனோபாவம் இல்லே. அதான் சின்ன சண்டை வந்தாலும் 'சரி, நமக்கு சரிப்பட்டு வரலை, பிரிஞ்சுடலாம்'னு எல்லாம் தெரிஞ்ச மாதிரி முடிவு எடுத்திடறாங்க. இதைத் தடுக்க னும் எப்படியாவது தடுத்தே ஆகணும். அப்புறம் சம்பந்தி வங்களா நாம கூட இருந்து என்ன பிரயோஜனம்?"

"நல்லா சொன்னீங்க சம்பந்தியம்மா. இவங்களுக்கு இப்ப என்ன குறை? இரண்டு பேரும் கண்ணுக்கு லட்சணமா, புத்தியா இருக்காங்க, கை நிறைய சம்பளம், ஆசைக்கு ஒரு குழந்தை, சந்தோஷமான வாழ்க்கை இன்னும் வேற என்ன வேணும்? எதுக்காக இப்படி சதா சண்டை போட்டுக்கறாங்க? அடிக்கடி தர்க்கம் செய்ய காரணம் என்ன? எனக்கு ஒண்ணுமே புரியல; உங்களுக்காவது புரியுதா?

"புரியலை சம்பந்தியம்மா — சத்தியமா புரியலை. மொத்தத்துல காலம் கெட்டுப் போச்சி. அதான் நா சொல்ல விரும்பறேன் எதுக்கும் இன்னிக்கு அவங்க சாயங்காலம் வீடு திரும்பினதும் இது சம்பந்தமா நாம கண்டிச்சிப் பேசுவோம். என்ன? இந்த மாதிரி சண்டை போட்டுக்கிட்டு பிரிஞ்சு வாழறேன், அது, இதுனு சொல்லிங்கன்னா நாங்க உங்ககூட தங்கறதா இல்லே, எங்க வார்த்தைய மதிச்சு சேர்ந்து வாழ்ந்தா இருக்கோம். இல்லாட்டி எங்களுக்கு மதிப்பு இல்லாத இடத்துல ஏன் இருக்கணும்? உங்க மன சுகப்புக்கு, சண்டைக்கு காரணம் என்ன, அதையாவது சொல்லுங்க. நாங்க சரி பண்ணிட றோம்னு அடிச்சிகேட்டுடலாம் என்ன நா சொல்றது?"

சொர்ணம் பேச, பாகீரதி அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நீங்க எது சொன்னாலும் அதுல எனக்கு சம்மதம் தான். முதல்ல இவங்க நடுவுல உண்டான பிளவுக்கு என்ன காரணம்னு தெரிஞ்சுட்டா தேவலை. ஆபீஸ்ல தொல்லையா, பணப் பிரச்சனையா, உடம்புக்கு எதா

வதா? என்ன? சுவையா இருக்கு. அப்புறம் எப்படியாவது இவங்க மனக் கசப்பை மாத்தி, மறுபடி சந்தோஷமா சேர்ந்து வாழச் செய்யணும். எனக்கு அதான் வேணும். வேற ஒண்ணும் வேணாம். உங்களுக்கும் எனக்கும் இவங்களை விட்டா வேற யாரு—இவங்க நல்லா இருந்தாத் தானே நாம நிம்மதியா கண் மூட முடியும்? என்ன, சம்பந்தியம்மா?''

தொடர்ந்து பேச முடியாதது போல் மார்பை நீவி குரல் செம்மைப் போக, ''அழாதீங்க சம்பந்தியம்மா. மனசு கலங்காதீங்க'' என்று சொல்லிக்கொண்டே சொர்ணமும் விசும்பத் துவங்க,

படி ஏறி வந்த ஆயா 'என்ன ஆயிற்று இவங்களுக்கு?' என்று கலக்கத்துடன் உள்ளே நுழையாமல் வெளியிலேயே நின்று யோசிக்க முற்பட்டாள்.

—முற்றும்—

3520